
# திலீபம்

C.C.




...தேசிய நூலகப் பிரிவு
...நூலக சேவை
யாழ்ப்பாணம்

...நூலகப் பிரிவு
...நூலக சேவை
...யாழ்ப்பாணம்


மாணவர் ஒருங்கிணைப்புக் குழு

நூலகப் பிரிவு
சேவை

...ய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

பன்னிரண்டு நாள் நீராகாரம்
இன்றி உண்ணா விரதம் இருந்து
உயிர் துறந்த திலீபனுக்கும்
அந்நிய ராணுவத்துடனான மோதலில்
உயிரிழந்த விடுதலைப் புலிகளுக்கும்
இந் நூல்

# சமர்ப்பணம்.



சமர்ப்பணம்



# உங்களுடன் சில நிமிடங்கள்...

அந்நிய இராணுவத்தின் சொல்லமுடியாத அடக்கு முறைகளுள் இருக்கும் தமிழீழ மக்களின் இதய ஒலியாக இச்சிறு நூல் அமைகிறது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரு மாதங்கள் பூர்த்தியாக முன்பே, இந்திய அரசின் படு பாதகச் செயலினால், எமது அரும் பெரும் தலைவர் லெப்டினன் கேணல் திலீபன் அவர்களை இழந்து தவித்தோம். அவருடைய அகிம்சா யுத்தம் முடிவடைந்து கூட, இன்று ஒரு வருடம் நிறைவு பெற்றுள்ளது. ஆனால் இன்றுவரை ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள

1. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறீலங்காவின் சிறைகளில் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

2. புனர் வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றங்கள் யாவும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

3. இடைக்கால அரசு அமைக்கப்படும் வரை புனர் வாழ்வு எனும் பெயரில் நடத்தப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்படல் வேண்டும்.

4. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலீஸ் நிலையங்கள் திறக்கப்படல் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

5. ஊர்காவற் படைகளின் ஆயுதங்கள் மீளப் பெறப்படல் வேண்டும். பாடசாலை கட்டிடங்களில் உள்ள இராணுவம் வாபஸ் பெற வேண்டும்.

என்ற அவருடைய எந்த கோரிக்கைகளும் நிறைவேற்றப்படவில்லை. மகாத்மாவின் தத்துவங்களைப் போர்வையாக்கும், கயமைகளே இங்கு தரிசனம் தருகின்றன. அந்நிய ஆயுதப் படையினரின் தாக்குதல்களும் அடாவடித்தனங்களும் வஞ்சகங்களுமே இங்கு முகம் கொடுக்கின்றன.

முழுச் சமூகமுமே ஒடுக்கப்படும் இவ்வேளை சமூகத்தின் முக்கிய பங்காளரான மாணவர்கள் பல்வேறு வழிகளில் ஒடுக்கப்படுகின்றனர். எந்தவித காரணமுமின்றி மாணவர்களும் ஆசிரியர்களும் கைது செய்யப்பட்டு தாக்கப்படுவதுடன் கொலையும் செய்யப்படுகின்றனர். அண்மையில் கூட "யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி'' ஆசிரியர் கொலையுண்டமையை குறிப்பிடலாம். அத்துடன் பாடசாலைகளில் உள்ள இராணுவ முகாம்கள் எதுவும் இன்றுவரை அகற்றப்படவில்லை. பாடசாலை மாணவர்கள் தொடர்ந்து பல வருடங்களாக விசாரணைகள் எதுவுமின்றி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்களின் கல்வியில் மிகுந்த அக்கறையுடைய எமது அண்ணன் திலீபன் அவர்களின் ஒரு வருட நிறைவினையொட்டி மாணவர் ஒருங்கிணைப்பு குழுவின் அயராத முயற்சியால் இச் சிறுநூல் உங்கள் கைகளில் தவழ்கிறது.

அண்ணனின் வியர்வையும், இரத்தமும், கண்ணீரும் கலந்த இந்தத் தியாக காவியத்தை இப்படி ஒரு சிறிய அளவிலாது எழுதுவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

அக்கிரமங்கள், அவமதிப்புக்கள், அடக்குமுறைகள் மத்தியில் சத்திய ஆவேசமும், சாதனை விவேகமும், கிளர்ந்தெழுந்து அதர்மங்களின் சங்காரத்தில் புனர் நிர்மாணம் நிலவுவதும், அண்ணனின் இறுதியாசையை நிறைவேற்றுவதுமே இந்நூலின் நோக்கமாகும்.

இந்நூலில் உள்ள ஆக்கங்கள் சில, முன்பு வெளியான சிதறல்களின் தொகுப்புக்களே அந்த ஆக்கங்களுக்குரியவருக்கும், இந்நூலை சிறப்பாக வெளியிட உதவிய அச்சகத்தாருக்கும் எமது நன்றியைக் கூறுகிறோம்.

**மாணவர் ஒருங்கிணைப்புக் குழு**



நேரிய பார்வையும் கம்பீரமான குரலும் தெளிந்த அரசியல் ஞானமும் கொண்ட திலீபன் பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றுகிறார்.

# வாழ்க்கைக் குறிப்பு

தமிழினத்தின் விடிவிற்காய் நீர் கூட அருந்தாமல் பன்னிரண்டு நாட்கள் உண்ணா விரதமிருந்து அமரரான திலீபன் 1963 ம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ம் திகதி ஊரெழுவில்பிறந்தான். இவனது சொந்த பெயர் பார்த்தீபன் ஆகும்.

இவனது தந்தையான நாகலிங்கம் இராசையா ஓய்வு பெற்ற அதிபர் ஆவார். இவரின் கடைசி மகனான பார்த்தீபன் பிறந்து ஒன்பதாவது மாதம் தனது தாயாரை இழந்தான். பார்த்தீபனுக்கு மூன்று மூத்த சகோதரர்கள் உள்ளனர். இளங்கோ (வயது 31), தம்பி (வயது 29) அசோகன் (வயது 28) ஆகியோர் இவரது சகோதரர்கள் ஆவர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தனது படிப்பைத் தொடர்ந்த திலீபன் 1982-ம் ஆண்டு கல்விப்பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் திறமைச் சித்தியெய்தி யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குத் தெரிவானான்.

தனது பள்ளிப் பருவத்தில் சிறந்த சதுரங்க வீரனாக விளங்கிய திலீபன் மாவட்டத்தில் சிறந்த சதுரங்க வீரனாக நான்கு தடவைகள் தெரிவு செய்யப்பட்டான். அத்தோடு விளையாட்டுக் குழுவின் தலைவனாகவும் விளங்கினான்.

1983-ம் ஆண்டு யூலையில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனக் கலவரத்தால் மிகவும் மனமுடைந்த திலீபன் தமிழ் மக்களின் விடிவுக்கு தமிழீழம் தவிர்ந்த வேறெந்த மாற்றீடும் கிடையாது என்ற முடிவுக்கு வந்தான். அன்றிலிருந்து தனது மருத்துவப் படிப்பை உதறிய திலீபன் தமிழீழமே தங்கள் ஒரே இலட்சியமாகக் கொண்டு போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்டான்.

***07-09-1987* அன்று கோட்டை இராணுவமுகாம் முன் வழிமறிப்புச் செய்த மக்கள் முன்னிலையில் ஆற்றிய உரை. பொதுக் கூட்டத்தில் திலீபன் அவர்கள் ஆற்றிய கடைசி உரையும் இதுவே ஆகும்.**

**அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!**

தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் உண்மை வடிவங்களை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாளை எம்மக்கள் அழிக்கப்படும் நிலை ஏற்பட்டால் மீண்டும் ஆயுதங்களை நாம் தாக்குவோம் "எமது இறுதி இலட்சியம் தமிழீழம் தான்'' என்று தலைவர் பிரபாகரன் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார் எமது போராட்ட வடிவங்கள் மாறலாமே தவிர எமது போராட்டத்தின் இலட்சியம் மாற முடியாது.

இதற்காகவே நாம் ஆயுதங்களைக் கையளித்தோம். ஆயுதக் கையளிப்பைச் சாட்டாக வைத்துக்கொண்டு மீண்டும் சமூக விரோதக் கும்பல்கள் இம் மண்ணில் உலாவுகின்றன. புலிகளின் கையில் நிருவாகம் இருந்த காலகட்டத்தில் எந்தச் சமூக விரோதக் கும்பல்களும் தமிழ் மண்ணில் இருந்திருக்கவில்லை. ஒரு கொள்ளை கொலை இடம்பெறவில்லை. 'ஆனல் இன்று தினசரி கொள்ளை கொலைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இச்சமூக விரோதக் கும்பல்கள் முன்னரும் இதைத் தான் செய்தன அதனல் தான் ஏனைய இயக்கங்களை புலி இயக்கம் தடை செய்தது. இவர்கள் எமக்கெதிராகத்தான் போராடிக் கொண்டிருந்தார்கள். இந்திய "ரோ" அமைப்பு எங்களுக் கெதிராகவே செயற்படுகிறது. எங்களுக்கெதிராகச் செயற்பட்டு ஏனைய இயக்கங்களுக்கு ஆயுதங்களை கொடுத்துள்ளது.

எம்மைக் கொல்வதற்குப் பல திட்டங்களை "ரோ" தயாரித்து, குறிப்பாக எமது தலைவர் வே. பிரபாகரனைக் கொலை செய்யத்திட்டமிட்டுள்ளது எனவே தான் இந்த "ரோ" அமைப்பைப் பகிரங்கமாகச் சந்தேகிக்கின்றோம். பகிரங்கமாக குற்றம் கூறுகின்றோம்.

எம்மால் தடை செய்யப்பட்ட இயக்கத்தின் உறுப்பினர்கள் இந்தியாவில் இருந்த வேளை இந்த "ரோ" அமைப்புத்தான் இவர்களுக்கு ஆயுதங்களை வழங்கி எம்மண்ணிற்கு அழைத்து வந்தது' எம்மிடம் ஆயுதங்களைப் பறித்தது சமூக விரோதக் கும்பல்களுக்கு ஆயுதங்களை வழங்கி விரோதச் செயல்களை இந்தியா தூண்டியுள்ளது.

கொள்ளையர்களிடம் இருந்து எம்மக்களைப் பாதுகாப்பதற்காக நாம் கிராமரீதியாக மக்கள் பாதுகாப்புக் குழுக்களை ஏற்படுத்தியிருந்தோம் கொள்ளைகளைத் தடுப்பதற்காக நிறுவப்பட்ட எமது பாதுகாப்புக் குழுக்கள் கூட சமூக விரோதக் கும்பல்களினால் தாக்கப்பட்டுள்ளன. அண்மையில் கொக்குவிலில் உள்ள குளப்பிட்டி என்னும் இடத்தில் உள்ள மக்கள் பாதுகாப்பு உறுப்பினர்கள் தாக்கப்பட்டுக் கடத்தப்பட்டனர். ஆனால் இதே வேளை இந்திய இராணுவத்தினர் அருகே இருந்தார்கள். இந்திய இராணுவம் அதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தது இவ்வாறயின் நாம் எவ்வாறு இந்திய இராணுவத்தை அமைதிகாக்கும் படையினர் என ஏற்றுக் கொள்ளமுடியும். இச்சமூக விரோதக் கும்பல்களுக்கு இந்திய ராணுவம் துணை போவதாக உள்ளது. நாம் தாக்கப்படும் போதும் கடத்தப்படும் போதும் இந்திய இராணுவத்திற்கு முன்பாகவே அவை இடம் பெறும் போது நாம் எப்படிப் பொறுமையாக இருக்க முடியும்.

ஒன்றை மட்டும் நான் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் நாம் மரணத்திற்கு அஞ்சவில்லை. வாழ வேண்டும்மென்றோ ஆள வேண்டுமென்றோ ஆசை வைத்திருக்கவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் தமிழீழ இலட்சியத்திற்காகவே போராடிக் கொண்டிருக்கிறார்கள். எங்களைச் சுற்றி துப்பாக்கிகளும் இரும்புக்கம்பிகளும் நிமிர்ந்து நிற்கின்றது. நாம் அனைவரும்

மரணமாகத் தயாராகவே இருக்கின்ருேம். புலிகள் இயக்கத்தின் அடிப்படை வாசகமே அதுதான். எமது இறுதி மூச்சுவரை நாம் மக்களைப் பாதுகாப்போமென்று தான் அடிக்கடி குறிப்பிடுகிருேம். மக்களுக்குச் சுபீட்சமான சுதந்திரம் கிடைக்குமாளுல் நாம் மரணமாகத் தயாராக இருக்கிருேம்.

இதற்காக நாம் தற்கொலைப்படைகளைக் கூட உருவாக்கி உள்ளோம். இதனை இந்திய ஆட்சியாளர்களும் இந்திய இராணுவமும் புரிந்து கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல சமூகவிரோதக்கும்பல்களுக்கும் மிகவும் குறிப்பாகக் கூறுகிருேம், பகிரங்கமாகக் கூறுகின்ருேம், நாம் குட்டக் குட்டக் குனிபவர்களல்ல இதனை அவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று எம்மிடம் ஆயுதங்கள் இல்லையென்றவுடன் மிகவும் பயங்கரமான அடாவடித் தனங்களில் அவர்கள் ஈடுபடுவதை மக்கள் அறிவர். எமது தோழர்களை அநியாயமாகக் கொலை செய்து வருவதையும் நீங்கள் அறிவீர்கள். நாம் தனித்து நின்று இச் சமூகவிரோதக் கும்பல்களை ஒரே நாளில் தடை செய்தோம். அன்று எம்முடன் எதிர்கொள்ள முடியாமல் ஒழித்தோடியவர்களெல்லாம் இந்திய ராணுவத்தின் உதவியுடன் இன்று வந்திருப்பதை எம்மால் சகிக்க முடியாமல் உள்ளது. மிகவும் மனவேதனையுடன் இதை நான் கூறுகிறேன்.

இதேவேளை நான் தெளிவான விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்து மகாசமுத்திரத்தைப் பொறுத்தவரையில் இந்தியா பிராந்திய வல்லரசு அதை நாம் ஏற்றுக்கொள்கிருேம் இந்திய ராணுவத்திற்கு எதிராக அமெரிக்கா நிற்க முடியாது அது எங்களுக்குத் தெரியும் இந்திய இராணுவம்தான் சர்வ வல்லமை பொருந்திய இராணுவம் ஆளுல் இந்திய ராணுவம் இலங்கையில் மக்கள் சக்திக்கு முன்ளுல் ஒன்றுமே செய்ய முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏற்கனவே தலைவர் பிராபாகரன் டெல்லியில் இருந்த வேளை இங்கு நான்கு நாட்கள் மக்கள் மறியல் போராட்டம் நடத்திஞர்கள்.

சர்வ வல்லமை பொருந்திய இந்திய இராணுவம் வடபகுதி முகாம்களில் இருந்த வேளை முகாம்களில் இருந்து வெளியே ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை. ஏனெனில் மக்கள் எழுச்சியுடன் போராடியதால் இந்திய இராணுவம் எதிர் நிற்க முடியவில்லை.

வியட்னாமைப் பொறுத்த வரையில் வியட்னாமிய மக்கள் அமெரிக்க இராணுவத்திற்கெதிராகவே போராட்டம் நடத்தினார்கள். அந்த அடிப்படையில் நாமும் எம்மைப் பொறுத்தவரையில் கூறுகிறோம் எமது மக்கள் பரிபூரணமாக எழுச்சி கொள்ள வேண்டும் இன்று கூட எங்கள் மத்தியில் அந்த நிலை இல்லாதது எமக்கு ஆறாத சோகத்தை ஏற்படுத்துகிறது. அந்த நிலமை தோற்றுவிக்க படவேண்டும் என்பதற்காக நாம் எழுச்சியடைய வேண்டும்.

இப்படி எழுச்சியுடன் போராடினால் எவரும் இப் போராட்டத்திற்கு மதிப்பளித்தேயாக வேண்டும். ஒன்றைக் கூறுகிறேன் மக்கள் அனைவரும் முழுமையாகப் போராடத் தயாரானால் நிச்சயமாகத் தமிழீழத்தை அமைக்கமுடியும். ஆனால் அந்தச் சூழ்நிலைகள் இல்லாதது எமக்கு வேதனையைத் தருகிறது. மக்களும் இணையவேண்டும் என்பதைத்தான் நாம் பல இடங்களில் வற்புறுத்திக் கூறியிருந்தோம்.

இன்று இந்தப் போராட்டத்தில் கூட எத்தனை ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள். ஆனால் வெளியே இலட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள் அந்த நிலமைமாற்றி அமைக்கப்படவேண்டும். நிலமை மாற்றி அமைக்கப் படுவதினூடாகத்தான் நாம் தமிழீழத்தை அமைக்கமுடியும். அன்று கூட நாங்கள் கூறியிருந்தோம் இந்திய இராணுவத்திடம் நாம் ஏன் ஆயுதக்களைக் கையளித்தோம் என்று மக்கள் முழு நாட்களும் எம்முடன் நின்றிருந்தால் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டிய நிலமை ஏற்பட்டிருக்க முடியாது. காலப்போக்கில் முழுமக்களையும் நாம் அணி திரட்டுவோம் என்ற அசையாத நம்பிக்கை எமக்குண்டு முழுமக்களையும் அணிதிரட்டித் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வென்றெடுப் போம் என்ற நம்பிக்கையும் உண்டு.

இந்திய அரசும் இந்திய ராணுவமும் இலங்கை அரசாங்கமும் புரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில் முழுமையான மக்கள் சக்தி ஒன்று திரண்டால் ஒன்றுமே செய்ய முடியாது. அடிப்படை உரிமையை வென்றெடுக்க நாம் தான் போராட வேண்டும். இதற்கு வேறுயாருடைய தயவையும் எதிர்பார்க்க முடியாது எனெனில் நாமே எமது சுதந்திரத்தை உறுதிப் படுத்த முடியும். எமது போராட்டம் தொடரத்தான் போகிறது. இது ஒரு அடையாள மறியல் போராட்டம் இதைக் கூட நாம் பெருமளவில் செய்யத் திட்டமிடவில்லை. இப் போராட்டத்திற்கு எமக்கு சரியான தக்க பதில்கள் கிடைக்கவேண்டும்.

குறிப்பாகச் சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களை விடுவிப்பதாகவும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் குறிப் பிட்டார்கள் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதாகவும் அங்கு குறிப்பிட்டிருந்தார்கள் இவை மட்டுமல்ல இதைப்போன்று எத்தனையோ அம்சங்கள் ஒப்பந்தத்தில் உள்ளன. எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. நாம் ஒப்பந்தத்தை நிராகரிக்கிறோம் அதே வேளை தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் இடம் பெறுகின்றன. சிங்கள இராணுவமும் இன்னும் இன அழிப்பைத் தான் செய்துகொண்டிருக்கிறது. எமது அடிப் படை உரிமைகள் எல்லாம் படிப்படியாக நசுக்கப்பட்டு நாம் நிரந்தர அடிமையாவதை விரும்பவில்லை.

இக்காரணங்களுக்காகவே நாம் இந்தப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளோம் இவற்றிற்குச் சரியான தக்கபதில்கள் கிடைக்காவிட்டால் இப் போராட்டம் நிச்சயம் தொடரும். நான் மிகத் தெளிவாகக் கூறுகின்றேன் காலப்போக்கில் எமக்குச் சரியான தக்க பதில்கள் கிடைக்காவிட்டால் இந்திய ராணுவம் இங்கிருந்து நகர முடியாத நிலை ஏற்படலாம் அதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

*நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்கான பெரும் புரட்சிக்கு தயாராக வேண்டும்.*

— திலீபன்



## அமரர் திலீபன் அவர்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டிய அவசியம் குறித்து விளக்கம் அளிக்கிறார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத் தளபதியும் தலைவருமான வே. பிரபாகரன் அவர்கள்:

தமிழினம் இன்று மீள முடியாத அடக்குமுறைகள் என்னும் படுகுழிக்குள் படிப்படியாகத் தள்ளப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களின் நலனை, அபிலாசையை, அவர்களது அடிப்படை உரிமைகளைப் பேணாத இலங்கை இந்திய அரசுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தை ஏற்கெனவே நிராகரித்தோம். இருந்த போதிலும் இந்தியப் பிரதம மந்திரி திரு. ராஜீவ்காந்தி அவர்கள் எமக்கு அளித்த உறுதி மொழிகளின் பேரில், இந்தியாவின் மீது நாம் கொண்ட நம்பிக்கையின் பேரில் நாம் எமது ஆயுதங்களைக் கையளித்தோம்.

ஆனால் எமது ஆயுதங்களைப் பெறுவதில் இந்தியா காட்டிய அக்கறை, அவசரம் எமது அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தருவதில் காட்டவில்லை என்பதைப் பகிரங்கமாக அறிவிக்கிறோம் இந்தியாவின் அசிரத்தைப் போக்கை சிறீலங்கா அரசு பயன் படுத்தி எம்மை நிரந்தர அடிமையாக்கும் முயற்சிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்களை ஸ்ரீலங்கா அரசு இன்று வரை நிறைவேற்றவில்லை. ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஏறக்குறைய ஒன்றரை மாதம் பூர்த்தியான போதிலும் இன்றும் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் குறிப்பாக எம் சகோதரிகள் சிறைகளில் வாடிக்கொண்டு இருக்கிறார்கள் ஆனால் ஒப்பந்தத்தின்படி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைதாகியுள்ள தமிழ் மக்கள் அனைவரையும் விடுவிப்பதாயிருந்தது.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டு, இடைக்கால அரசு ஏற்படுத்துவதாக கூறப்பட்டுள்ளது ஆனால் இவை உருவாக் படுவதற்கான சாயல் சற்றும் இல்லாத அதே நேரம், தமிழ் தேசிய இனத்தின் தேசியத்தை உருக்குலைக்கும் நோக்கோடு பல்லாயிரக்கணக்கான சிங்களக் குடியேற்றங்கள் ஒப்பந்தத்தின் பின் புதிது புதிதாக உருவாக்கப்பட்டு வருகிறது. இக்குடியேற்ற

நடவடிக்கை தமிழ் தேசிய இனத்தின் தனித்துவத்தை, அவர்களின் ஐக்கியத்தை, அவர்களின் இறைமையை முழுமையாக சீரழித்து, அவர்களை நிரந்தர அடிமையாக்கும் நோக்கோடு திட்டமிட்ட ரீதியில் சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் வடக்கு கிழக்கு என்னும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் பறிபோகிறது. அவர்களின் தனித்துவமான மொழி சீரழிக்கப்படுகிறது. அவர்களின் கலை கலாச்சாரம் அழிக்கப்படுகிறது. தனித்துவமான பொருளாதாரக் கட்டமைப்பு சீர்குலைக்கப்படுகிறது.

ஒட்டுமொத்தமாக தமிழ்த் தேசிய இனத்தின் தனித்தன்மை குலைக்கப்பட்டு நீண்ட காலப் போக்கில் இலங்கை ஒரே தேசிய இனத்தைக் கொண்ட சிங்கள பௌத்த நாடாக மாற்றப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இச் சதித்திட்டம் புனர் வாழ்வு என்னும் பெயரில் தமிழர் தாயகத்தில் இடம் பெற்று வருகிறது. எனவே எமது இடைக்கால அரசாங்கம் ஏற்படும் வரை சகல புனர் வாழ்வு வேலைகளும் உடனடியாக நிறுத்தப் படவேண்டும்.

அத்துடன் 20,000 த்திற்கு மேற்பட்ட மக்களினதும் 650 ற்கு மேற்பட்ட போராளிகளினதும் தியாகத்தால் தமிழர் தாயகத்தில் உருவான ஒரு தனித்தன்மையைச் சீர் குலைத்து எமது தாயகத்தைத் தனது ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வரவே சிறீலங்கா அரசு இன்று ஏற்பட்டுள்ள தற்காலிக அமைதியைப் பயன் படுத்துகிறது. தமிழ் பேசும் மக்கள் இத்தனை இழப்புக்களின் மத்தியிலும் நடாத்திய விடுதலைப் போரில் அடிப்படை இலட்சியங்கள் ஒன்று கூட நிறைவேற்றப்படவில்லை. மாறாக, தமிழீழப் பகுதியெங்கும் மீண்டும் அவசர அவசரமாக பொலிஸ் நிருவாகம் கொண்டுவரப்படுகிறது. ஏராளமான பாடசாலைகள் இன்றும் ஸ்ரீலங்கா அரசின் இராணுவ முகாம்களாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. கிழக்கில் இன அழிப்பு நடவடிக்கை தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இந்நிலையில் தமிழினத்தை முழுமையாக அடக்கி ஒடுக்குவதற்கான இந் நடவடிக்கைகளுக்கு எதிராகவும், எமது அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவும் ஆயுதங்களைக் கையளித்துள்ள நிலையிலுள்ள நாம், அகிம்சை ரீதியில் அதி உச்ச போராட்டமான சாகும்வரை உண்ணாவிரதத்தில் இறங்கியுள்ளோம்.

## சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த தியாக வேங்கை திலீபன் உண்ணாவிரதத்தின் இரண்டாம் நாள் தன் முன்னால் குழுமியிருந்த மக்கள் மத்தியில் ஆற்றிய உரை

அன்பிற்கும் மதிப்பிற்குரிய தமிழீழ மக்களே!

அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்! நிற்க வலு வில்லை. இருந்து கொண்டே பேசுகிறேன். நாளை நான் சுய நினைவோடு இருப்பேனோ தெரியாது. அதனால் தான் இன்று உங்களுடன் பேச வேண்டும் என்று விரும்பினேன். நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கிறோம். ஏற்கனவே 650 பேர் இலட்சியத்துக்காக மரணித்து விட்டனர்.

மில்லர் கடைசியாகப் போகும் போது என்னிடம் ஒரு வரியைக் கூறினான் "நான் எனது தாய் நாட்டிற்காக உயிரைக் கொடுக்கப் போவதை இட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். ஆனால் ஒரே ஒரு ஏக்கம் எனது மக்கள் விடுதலை அடையும் காட்சியை என்னால் காண முடியாமற் போகிறதே என்பதே அந்த ஏக்கமாகும்" எனக் கூறி விட்டு வெடி மருந்துகளை உடைய வாகனத்தில் ஏறிச் சென்றான்.

எனக்கு முன் சென்ற 650 பேரும் எனக்குத் தெரியவே இறந்தனர். அவர்கள் எதற்காக மரணித்தார்கள் என்பதை நான் ஒரு போதும் மறக்கமாட்டேன். நான் இந்த உண்ணா விரதத்தை ஆரம்பிக்கப் போவதாக தலைவரிடம் அனுமதி கோரிய போது "திலீபன் நீ முன்னால் போ நான் பின்னால் வருகிறேன்! எனக் கூறி எனக்கு உற்சாகம் ஊட்டினார். அவ்வளவு தூரம் தெளிவான தலைவர் தான் உங்களுக்கு கிடைத்துள்ளார். தான் தலைவரிலும் குறைவான நேரமே இப்போது இருந்துள்ளேன். இப்போது விளங்குகிறது எனக்கு என் தலைவரின் கொள்கைப் பிடிப்பு.

தாய்மார்களே! பெரும் வீரனின் தலைமையில் நீங்கள் கிளம்புங்கள்! ஓர் மக்கள் புரட்சி வெடிக்கட்டும் நாங்கள் நிச்சயமாக தமிழீழம் காண்போம். அதை வானிலிருந்து எனது 650 தோழர்களுடன் சேர்ந்து பார்ப்பேன் என மனரீதியாக தற்போது நான் உணர்கிறேன். என் மக்கள் நிச்சயம் தமிழீழம் காண்பார்கள்.

எமது மக்களின் விடிவிற்காக நான் பூரண மனத்திருப்தியுடன் இவ் உண்ணாவிரதத்தில் இறங்கினேன். விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் தமது உயிரிலும் மேலாக இங்குள்ள மக்களை நினைக்கிறார்கள். தெளிவான உறுதியான இலட்சியத்துடன் இருக்கிறார்கள். எமது இறுதி இலட்சியத்தை தலைவருடன் இணைந்து நீங்கள் அடைய வேண்டும் என்பதே எனது இறுதி ஆசை வணக்கம்.

*தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும் இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடும்*

— திலீபன்.

*விடுதலைப் புலிகள் வாழவேண்டுமென்றோ ஆளவேண்டுமென்றோ ஆசை கொள்ளவில்லை எமது மக்களின் நிரந்தரமான சுபீட்சமான எதிர்காலம் கிடைக்குமானால் நாம் அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம்.*

— திலீபன்.

பல்லாயிரக்கணக்கான மக்களின் அழுகுரலுக்கு மத்தியில் அந்தக் கம்பீரமான தொனியை இழந்து நா தடக்க, தனது மூன்ரும் நாள் உரையை ஆற்றினர்.

## அமரர் திலீபன் அவர்கள்

எனது அன்புக்கினிய மக்களே!

என்ஞல் பேச இயலவில்லை அறிவித்து விட்டார்கள்; அதனுல் பேச முயல்கிறேன். உங்களை ஏமாற்றக் கூடாது என்பதற்காக பேசுகிறேன். உண்மையாகவே என்ஞல் பேச முடியவில்லை.

நான் இப்போது மகிழ்ச்சியில் மிதக்கிறேன். நீங்கள் பல்லாயிரக் கணக்கில் என் முயற்சிக்கு ஒத்துழைப்பு தந்திருப்பதை என் கண்கள் பார்க்கின்றன. பேச முடியாமல் இருக்கும் என்னை நீங்கள் தரும் உற்சாகம் பேச வைக்கிறது. மறியல் போராட்டம் வெற்றிகரமாக நடைபெறுகிறது என்று அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

"நான் மீட்கப்பட முடியாத இடத்திற்கு சென்று கொண்டிருக்கிறேன். உங்களை விட்டுச் செல்லும் நிலைக்குக் கொஞ்சம் கொஞ்சமாக வந்து கொண்டிருக்கிறேன்"

நான் வாழ் நாள் பூராகவும் நேசித்த மக்களே! நீங்கள் என் முன்னே நிற்கிறீர்கள். சாகும் வேளையிலும் மகிழ்ச்சியுடனேயே இருக்கிறேன், மகிழ்ச்சியுடனேயே சாகிறேன். என்று திலீபன் தனது உரையில் குறிப்பிட்டார். மக்களின் அழு குரல் இதற்கு மேல் அவரைப் பேச முடியாமற் செய்து விட்டது.

*மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்க முடியாது.*

— திலீபன்

# திலீபன் எங்கே ஐயா போகிருய்?

திலீபன்!
உன்னைத் தான் கேட்கிறேன் ....
எங்கே அவசரமாய் ஓடுகிருய்.....!
சொல் தம்பி!
உனக்கு முன்ஞல் போய்விட்ட
மில்லரின் முகவரி தேடிக் கொண்டிருக்கிருயா?

திலீபன்!
நீ எங்களுக்குத் தேவையடா!
உன்னுடைய அழுத்தமான விடுதலை வேட்கை
அசைக்க முடியாத நெஞ்சுறுதி - தெளிவான
அரசியல் அறிவு - வலிமை மிக்க போராற்றல்
கடினமான அமைப்பு வேலைத்திறன் - வளையாத நேர்மை
களங்கமில்லாத தனிமனித ஒழுக்கம் - மிகப்பெரிய
தன்னிழப்பு உணர்வு

திலீபன் நீ எங்கள் தலைவன்
உருவாக்கிய தலைவன் - நீ
எங்களுக்குத் தேவை தம்பி

எவ்வளவு சீக்கிரமாக உன்னுடைய
அழகான சிரிப்பை எங்கள் கண்களில்
இருந்து பறித்துக் கொண்டு ஓடுகிருய்

தமிழீழ மண்ணில் ஒவ்வொரு
தெருவிலும் நீ நடந்த உன் கால் தடம்
அழியாமல் அப்படியே இருக்கின்றது
ஆனுல் நீ......
சிறகுகளைத் தூக்கிவிட்டாய்
வானத்தை அண்ணாந்து
பார்ப்பதைத் தவிர எங்களுக்கு வழி
தெரியவில்லையே தம்பி!
சாப்பிடு என்று உன்னைப்
பார்த்து எப்படிச் சொல்ல முடியும்

நெருப்பாய் நீ நிற்கிறாய்!
உன்னை நெருங்கும் தகுதி
இந்த உலகத்தில் ஒருவனுக்கும்
இல்லை!

பசியோடு கிடந்த விடுதலைத் தேவதைக்கு
தீனி போடுகின்றவனே! எங்கள் வயிறு
எரிகிறதடா!
தம்பி!
நீ எங்களுக்குப் போர் பழக்குகிறாயா?
எத்தனை கம்பீரமாய்ப் படுத்திருக்கிறாய்
உன் கழுத்தில் தொங்கும் சயனைட்குப்பி
தோற்றுப் போய் வெட்கத்தால்
போர்வைக்குள் ஒளித்து கிடக்கிறது

திலீபன்!
நீ பிரபாகரனுக்குப் பெருமை
புலிகளுக்கு எடுத்துக் காட்டு
எதிரிகளுக்கு எச்சரிக்கை
தமிழீழத்துக்கு வெளிச்சம்
..........

மகாத்மா காந்தியின்
பாரத நாட்டுக்கு நீ அகிம்சை
கற்றுக் கொடுக்கிறாய்
பாவிகள் - அவர்களால்
உன்னுடைய சாவைத் தடுத்து நிறுத்த
முடியும் - ஆனால் பாவிகள் உன்னை சாகடித்துக்
கொண்டிருக்கிறார்கள்

காந்தி அடிகளின் மண்ணில்
இருந்து சாவு உன் தொண்டைக்குள்
திணிக்கப்படுகிறது.

திலீபன்!
எந்த ஒப்பந்தத்தை எதிர்த்து
நீ உன் உயிரை எறிய நினைத்தாயோ - அந்த
ஒப்பந்தத்தை எங்களால் இன்று முழுமையாகப்
புரிந்து கொள்ள முடிகிறது

ஜே. ஆர் கையில் இருந்ததுப்பாக்கி – ராஜீவ்
கைக்கு மாறியிருப்பதற்குப் பெயர் தான்
ஜே. ஆர் – ராஜீவ் – ஒப்பந்தம்
இப்போது கடலுக்கு
அப்பால் இருந்து சாவு நம்மைச்
சந்திக்க வருகிறது.

இனிய வீரனே!
நாங்கள் உனக்கு சத்தியம்
செய்து கொடுக்கிறோம்
உன்னுடைய தலைவன் பிரபாகரன்
தலைமையில் என்றைக்கும் நாங்கள் உறுதியாக
நிற்போம்!
சுதந்திரத்துக்கு பசளை
போடுவது எப்படி என்று நீ கற்றுத்
தந்திருக்கிறாய்
உன் கனவுகளுக்கு நாங்கள் நீர் வார்ப்போம்

தம்பி திலீபன்!
நான் பேசிக்கொண்டே போகிறேன்.........
ஆனால் உன் கண்களோ
மங்கல் மங்கலாக
பளிச் சென்ற உன் சிரிப்பு உன்
தடித்த உதடுகளுள் சமாதி
ஆகத் தொடங்கி விட்டதா?
எங்கே ஐயா போகிறாய்?
திலீபன் —
எங்கே ஐயா போகிறாய்

*எமது உரிமைகளை நாமே வென்றெடுக்க வேண்டும். இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்கக் கூடாது.*

— திலீபன்.



கொள்கைப்பற்று நிரம்பிய திலீபன் உண்ணா விரத மேடையில் அமர்ந்துள்ளார். அவரின் கண்களில் தெரியும் விடுதலைக் கனல் மக்களை எழுச்சியடையச் செய்கிறது.

**எம் உயிரினும் மேலான தமிழீழ மக்களே!**

எனக்கு முன் பேசிய ஒரு சில பேச்சாளரின் பேச்சால் தான் நான் பேசவேண்டும் என நினைக்கின்றேன். இது எமது இலட்சியப் போராட்டம் இதை யாரும் கைவிடுமாறு என்னைக் கேட்காதீர்கள். எனது முடிவு எனக்குத் தெரியும். ஏற்கனவே நான் உயிர் வாழ்வது அதிசயமாய் இருக்கின்றது. ஏனெனில் நான் முதல் நாள் உண்ணாவிரதம் இருந்ததை விட அதற்கு அடுத்த அடுத்த நாள் மேலும் உற்சாகமாய் இருந்தேன் இன்று அதை விட உற்சாகமாய் இருக்கிறேன். காரணம் நீங்கள் தரும் ஆதரவும் நீங்கள் இந்தப் புரட்சிக்குத் தயாராகி விட்டதும் தான் அதற்காகத் தான் அந்த ஒன்றே போதும் நான் சாகலாம்.

அணு அணுவாக பிரிந்து கொண்டிருக்கும் திலீபனின் உயிரை பார்க்கப் பொறுக்காத, நான்கு நாட்கள் பாரதத்தை நம்பி நம்பிக்கையை இழந்த மக்கள், ஆற்றமுடியாத இந்தச் சாவில் இருந்து விடுபடுமாறு கதறி அழுது மேடையில் பேசினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் இலட்சியப்பற்று நிறைந்த திலீபன் அவர்கள் மக்கள்முன் தனது நாலாம் உரையை ஆற்றினார். இதுவே அவரது இறுதிப் பேச்சாகவும் அமைந்து விட்டது.

650 பேருடன் 651 வனாக நான் போகிறேன். என்னைப் பற்றி யாரும் வீணாக கவலைப் படாதீர்கள். அலட்டிக் கொள்ளாதீர்கள் ஆனால் நீங்கள் புரட்சிக்குத் தயாராகுங்கள். எனது அவயவங்கள் செயல் இழப்பதை நான் உணர்கிறேன். இனியொரு மனிதனுக்கு என்னால் வாழமுடியாது. என்பது எனக்குத் தெரியும். எனவே அது மட்டுமல்ல இது ஒரு இலட்சியப் போராட்டம். எமது வீரர்கள் ஒவ்வொருவரும் கொள்கைக்காக உயிரைக் கொடுக்கக் கூடியவர்கள். அவர்களும் என்னைத் தொடர்ந்து வருவார்கள்

அவர்களையும் தடுக்காதீர்கள். நாங்கள் நான்கு ஐந்து பேர் சாவதால் எது வித தீங்கும் ஏற்படாது. மக்கள் புரட்சி வெடிக்க வேண்டும். நான் 3 தடவைகள் பேசியிருக்கிறேன். மூன்று தடவையும் திரும்பத்திரும்ப ஒரே கருத்தைத்தான் கூறுகிறேன். அதற்காகத் தான் சாகிறேன். எனது சாவைப் புரிந்து கொள்ளுங்கள். அது தான் இந்த மக்கள் புரட்சி வெடிக்கட்டும். என்ற ஒரே கருத்தைத் தான் கூறுகின்றேன். எனவே தயவு செய்து இலட்சியத்தைக் கைவிடுமாறு கேட்க வேண்டாம். நீங்கள் அவ்வாறு கேட்பது இலட்சியத்தை அவமதிப்பது போல் இருக்கும். நாங்கள் சாதாரணமாக ஆள வேண்டும் என்ற ஆசையாலோ வாழவேண்டும் என்ற ஆசையாலோ இயக்கத்துக்கு வரவில்லை எம் தலைவரும்எம்மை அவ்வாறு வளர்க்கவில்லை. எமது இயக்கமும் அவ்வாறில்லை. தயவு செய்து மீண்டும் கேட்கின்றேன் மன்றுட்டமாகக் கேட்கின்றேன். என் மீது கொண்ட அனுதாபத்தின் காரணமாக அவ்வாறு கேட்காதீர்கள். இலட்சியத்தை அவமதிக்காதீர்கள். தயவு செய்து எனக்கு உண்மையில் (சிரிப்புடன்) பெரும் ஆச்சரியமாய்த் தான் இருக்கிறது. ஏறக்குறைய 72 மணித்தியாலங்கள் கடந்து விட்டது. உண்மையில் நான் (சிரிப்புடன்) நேற்றைய விட அதிக உற்சாகமாக இருக்கிறேன். எனது உடல் நிலையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு வேளை அனைவரதும் பிரார்த்தனையோ எனக்குத் தெரியாது. ஆனல் மீண்டும் மீண்டும் கேட்பது ஒன்றைத்தான். எமது போராட்டம் தொடரப்போகிறது. மக்கள் புரட்சி வெடிக்கப்போகிறது. அந்தப் போராட்டத்திற்கு நீங்கள் தயாராகுங்கள். எனது பேச்சிலேயே நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். நான் இன்று எவ்வளவு தூரம் உற்சாகமாய் உள்ளேன் என்று. நேற்று என்னல் பேசமுடியவில்லை. ஆனல் இன்று (சிரிப்புடன்) தாராளமாகப் பேசமுடிகிறது ஏனே தெரியவில்லை. எனவேதான் உங்களிடம் மீண்டும் மீண்டும் கேட்பது நீங்கள் எங்கள் போராட்டத்திற்கு தயாராகுங்கள் அதைத்தான் நான் மீண்டும் மீண்டும் கேட்கிறேன் நீங்கள் போராடுங்கள் நான் மேலே இருந்து நீங்கள் தமிழீழம் அமைப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பேன். நாம் என்றும் உங்களை விட்டுப் போக மாட்டோம் எங்கள் உடல்மட்டும்தான் போகும் உயிர் என்றும் உங்களோடு ஒட்டியிருக்கும். அதைமறந்து விடாதீர்கள் எம்மைத் தொடர்ந்து எமது தோழர்கள் வருவார்கள். சகோதரிகள் வருவார்கள் அவர்களையும் நீங்கள் தடுக்காதீர்கள். அவர்களுக்கும் வழிவிடுங்கள் நான் ஏற்கனவே பலதோழர்களிடம் கூறிவிட்டேன். நான் உங்களை எதிர்பார்த்துக்கொண்டிருப்பேன்

ஏனையதோழர்களும் அங்கு உங்களை எதிர்பார்த்துக்கொண்டிருப்பர். அவர்களையும் மறுக்காதீர் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு அவர் இலட்சியம்தான் முக்கியம். உயிர் முக்கியமல்ல அவர்களது வாழ்வு முக்கியமல்ல, சாப்பாடோ தண்ணியோ முக்கியமல்ல அவர்களது இலட்சியம்தான் முக்கியம். அதை நிலைநாட்டத்தான் நான் தலைவரால் முதல் முதலாக நியமிக்கப்பட்டேன். தலைவருடன் சண்டையிட்டுத்தான் இவ் அனுமதியைப் பெற்றேன். எனவே எனக்கு எனது முடிவு தெரியும். எனவே தயவுசெய்து நீங்கள் அலட்டிக் கொள்ளாதீர்கள். தயவுசெய்து என்மீது கொண்ட பாசத்தாலோ அல்லது வேறு எந்தக்காரணத்தாலோ தயவுசெய்து பேச்சாளர் எவரும் இந்தக்கருத்துடன் மேடையில் பேசவேண்டாம் இது என்னை அவமதிப்பது போல் உள்ளது. என்னைத் தண்ணீர் குடிக்குமாறு கேட்பது என்னை அவமதிப்பதுபோல் உள்ளது. நான் அதற்காக இங்கு வந்து இருக்கவில்லை. அதைத்தான் உங்களிடம் மீண்டும் மீண்டும் கேட்கிறேன். உண்மையைச் சொல்கிறேன் எனது மூளை ஒன்றையுமே கிரகிக்கவில்லை. (சிரிப்புடன்) ஒரு வேளை மூளை மாருட்டமாய்ப் போய்விட்டதோ எனக்குத் தெரியவில்லை. தயவுசெய்து மன்னியுங்கள் நான் ஒரே விடயத்தை திரும்பத் திரும்பச் சொல்வது எனக்குத் தெரிகிறது. தயவு செய்து மன்னியுங்கள் நான்பேசுவதாக இருக்கவில்லை எனக்கு முன்பேசிய பேச்சாளரால்தான் பேசவேண்டி வந்தது. தயவு செய்து இதைத்தவிர்த்து நீங்கள் மக்களை எழுச்சியூட்டும் வகையிலாகப் பேசுங்கள் நான் எந்த இலட்சியத்துக்காகச் சாகிறேனோ அந்த இலட்சியத்தை அடையக்கூடிய வகையில் மக்களை எழுச்சியூட்டும் வகையில் தயவு செய்து பேசுங்கள் அதைத்தான் விரும்புகிறேன். அதைத்தான் மீண்டும் உங்களிடம் நான் கேட்கிறேன். இறுதியாக என் உயிரினும் இனிய மக்களிடம் இருந்து விடைபெறுகிறேன்.

வணக்கம்

*நான் என்னுயிரிலும் மேலாக நேசிக்கும் மக்களே! உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச்செல்கிறேன், நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழ வேண்டும். இங்கு ஒரு மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்.*

-திலீபன்

எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது. வீரகாவியங்களைப் படைத்திருக்கிறது அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்கின்றது. இவை எல்லாம் எமது ஆயுதப்போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய சாதனைகள் ஆறுல் எமது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது, வியக்கத்தக்கது. எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போர்க்களத்தில் தன்னைப் பலிகொடுத்து ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தைத் திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி. தமிழீழ போராட்டத்தில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டி எழுப்பிய நிகழ்ச்சி, பாரதநாட்டைத் தலைகுனியவைத்த நிகழ்ச்சி, உலக மனச்சாட்சியைச் சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தமென்ன? அவனது இறப்பு ஏன் ஒருமகத்தான நிகழ்ச்சியாக மக்கள் எல்லோரையுமே எழுச்சி கொள்ளச் செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது. திலீபன் உங்களுக்காக இறந்தான். உங்கள் உரிமைக்காக இறந்தான். உங்கள் மண்ணிற்காக, உங்கள் பாதுகாப்பிற்காக,

## தியாக வேங்கை லெப். கேணல் திலீபன்
### அவர்களின் மரணம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்
## திரு. வே. பிரபாகரன்
### அவர்கள் விடுத்துள்ள அறிக்கை.

உங்கள் சுதந்திரத்திற்காக, உங்கள் கௌரவத்திற்காக இறந்தான் தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உயர்ந்த உன்னத தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான பணியைத்தான் அவன் செய்திருக்கிருன்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்.

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதி வாய்ந்த ஒரு இலட்சியப்போராளி என்ற ரீதியில் அவன்மீது அளவு கடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடிதுடித்துச் செத்துக் கொண்டிருக்கும் போதெல்லாம் என் ஆன்மா கலங்கும். ஆனால் நான் திலீபனை சாதாரண மனிதப் பிறவியாக பார்க்கவில்லை தன்னை எரித்துக்கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன். அதில் நான் பெருமை கொண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக்கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை, காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

திலீபனின் மரணம் குறித்து இந்தியா ஆழ்ந்தகவலை தெரிவித்திருக்கிறது. அது அர்த்தமற்ற சாவு என இந்தியத் தூதுவர் கூறுகிறார். தமது உறுதி மொழிகளை நம்பியிருந்தால் திலீபன் உயிர் தப்பியிருப்பார் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் உண்மையில் நடந்ததென்ன நடந்து கொண்டிருப்பது என்ன என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

எமது உரிமைகள் வழங்கப்படும் எமது மக்களுக்கும், எமது மண்ணுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும். தமிழ் மக்கள் தமது பாரம்பரியத் தாய்ப்பூமியில் தம்மைத் தாமே ஆளும் வாய்ப்பு ஏற்படும். பாரதஅரசு எமக்கு அளித்த வாக்குறுதிகளை நம்பி நாம் எமது ஆயுதங்களைக் கையளித்தோம். எமது மக்களினதும் பாதுகாப்பை இந்தியாவுக்குப் பொறுப்பளித்தோம்.

இதனை அடுத்து என்ன நடைபெற்றது என்பதெல்லாம் இங்குவாழும் மக்களுக்குத் தெரியும்.

தமிழ் அகதிகள் தமது சொந்தக் கிராமங்களுக்குச் செல்ல முடியாது முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்கும்போது சிங்களக் குடியேற்றம் துரித கெதியில் தமிழ் மண்ணைக் கபளீகரம் செய்தது. சிங்கள அரசின் பொலிஸ் நிருவாகம் தமிழ் பகுதி

களில் விஸ்தரிக்கப்பட்டது. அவசர அவசரமாக சிங்கள இனவாத அரச இயந்திரம் தமிழ்ப் பகுதிகளில் ஊடுருவியது. சமாதான ஒப்பந்தம் என்ற போர்வையில் சமாதானப்படையின் அனுசரணையுடன் சிங்கள அரசு ஆதிக்கம் தமிழீழத்தில் நிலைகொள்ள முயன்றது.

இந்தப் பேராபத்தை உணர்ந்து கொண்ட திலீபன் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி காணத் திடசங்கற்பம் கொண்டான்.

சிங்கள அரசுடன் உரிமை கோரிப் போராடுவதில் அர்த்தமில்லை. பாரதம்தான் எமது இனப்பிரச்சனையில் தலையிட்டது. பாரதம்தான் எமது மக்களின் உரிமைக்கு உத்தரவாதம் அளித்தது. பாரதம்தான் எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது. பாரதம்தான் எமது ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைத்தது. ஆகவே பாரத அரசிடம் நாம் உரிமைகோரிப் போராட வேண்டும். எனவேதான் பாரதத்துடன் தர்மயுத்தம் ஒன்றைத் தொடுத்தான் திலீபன். அத்தோடு பாரதத்தின் ஆன்மீக மரபில் பெறப்பட்ட அகிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக் கொண்டான்.

நீராகாரம் கூட அருந்தாமல் மரண நோன்பை திலீபன் தழுவிக்கொள்வதற்கு 24 மணித்தியாலத்துக்கு முன்பே நாம் இந்தியத் தூதர் திரு. டிக்ஷிட்டுக்கு முன்னறிவித்தல் கொடுத்திருந்தோம். உண்ணாவிரதம் ஆரம்பமாகி 8 நாள் வரை ஒன்றும் நடைபெறவில்லை. பதிலுக்கு இந்திய அரசின் ஆதிக்கத்தில் உள்ள தொடர்பு சாதனங்கள் குறிப்பாக அகில இந்திய வானொலி எம்மீது விசமத்தனமான பொய்ப்பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டது. திலீபனின் உண்ணாவிரதத்தை மிகவும் கேவலமாக கொச்சைப் படுத்தியது. ஒன்பதாம் நாள் இந்தியத் தூதர் இங்கு வந்தார். உருப்படியில்லாத உறுதிமொழிகளைத் தந்தார் வெறும் உறுதிமொழிகளை நம்பி எமது இனம் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறது. உருப்படியான திட்டங்களை முன்வையுங்கள் எமது கோரிக்கைகளை நிறைவேற்றி வையுங்கள் அதுவரை உண்ணாவிரதம் கை விடப்படமாட்டாது என்றேன். உங்களுக்குத் திலீபனின் உயிரில் அக்கறை இருந்தால் நீங்கள் அவனை வந்து பாருங்கள் எமது மக்களுக்கு முன்பாக அவனிடம் உறுதிமொழிகளைக் கூறுங்கள். நாம் உண்ணாவிரதத்தை வாபஸ் பெறுகிறோம் என்றேன். அதற்கு இந்தியத் தூதுவர் மறுத்து விட்டார்.

எனது அன்பான மக்களே! இந்திய அரசு எமது நியாயமான கோரிக்கைகளை புரிந்து காலம் தாழ்த்தாது உருப்படியான நடவடிக்கைகளை எடுத்திருப்பின் திலீபன் உயிர் பிழைத்திருப்பான். இன்னும் இந்திய அரசு எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் காலம் தாழ்த்தி வருகின்றது. நாம் கேட்டுக் கொண்டபடி ஒரு இடைக்கால அரசை நிறுவி இன்று எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் சிரத்தை காட்டுவதை விடுத்து எமக்கு நிபந்தனைகளை விதிக்கின்றது. எம்மோடு கலந்தாலோசிக்காத ஒரு ஒப்பந்தத்துக்கு எமது அங்கீகாரம் கேட்கின்றது. இப்போதும் ஆயுதங்களை ஒப்படைப்பது பற்றிப் பேசுகிறது. போராட்டத்தை கைவிடச் சொல்கிறது.

நாம் உருப்படியான செயல்முறைத் திட்டங்களைக் கேட்க இந்தியா உறுதிமொழிகளைத் தருகிறது. நாங்கள் விளக்கங்களைக் கேட்க இந்தியா கால அவகாசம் கேட்கிறது. நாம் கோரிக்கைகளை முன்வைக்க இந்தியா நிபந்தனைகளைப் போடுகிறது. இந்தச் சூழ்நிலையில் நாம் போராட்டத்தைக் கைவிட முடியாது. மாறாகப் போராட்டத்தை தீவிரப்படுத்தவேண்டும் தமிழீழ மக்களின் ஒன்றுபட்ட தேசிய எழுச்சியாக எமது போராட்டம் புரட்சிவடிவம் பெறவேண்டும்.

வடக்கு, கிழக்கு அடங்கிலும் உள்ள தமிழ்பேசும் மக்கள் அனைவரும் புலிகள் முன்னெடுக்கும் இந்தச் சாத்வீகப் போராட்டத்தில் அணிதிரள வேண்டும். மக்களின் ஒன்று திரண்ட சக்திமூலமே, மக்களின் ஒருமுகப்பட்ட எழுச்சியின் மூலமே நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கலாம். திலீபனின் ஈடு இணையற்ற தியாகத்திற்கு நாம் செய்யும் பங்களிப்பு இதுதான்.

---

*எமது எதிர்கால சந்ததி வாழ நிச்சயமாக எமக்கோர் நாடு அவசியம். இல்லாவிட்டால் எங்களைப் போல்தான் நாளை எமது எதிர்கால சந்ததியும் துன்பப்படும், வருத்தப்படும்.*

-திலீபன்

---

# சிலுவை சுமந்த திலீபன்

எங்கே என் தம்பி
எங்கே என் தம்பி
இங்கே இருந்தானே; இருந்தவனைக் காணவில்லை
எங்கே என் தம்பி
மெல்ல; மெல்ல ......... அந்த
விளக்கணையும் வேளையிலே
எல்லோரும் சேர்ந்து எண்ணையிடு என்கிறோம்
கல்லான நெஞ்சே நீ
கண் திறந்து பார்க்கவில்லை
நா வரண்டு நா வரண்டு
நாதமணிப் பேச்சிழந்து
பூ சுருண்ட மாதிரியாய் போய் முடிந்து விட்டானே!
காற்றே நீ மூசு
கடலலையே பொங்கி எழு
கூற்றவனு!
அவனைக் கொண்டுவந்து தூக்கிவிடு
எங்கே என் தம்பி எங்கே என் தம்பி
இங்கே இருந்தானே இருந்தவனைக் காணவில்லை
என் இனிய திலீபனே!
ஒரு வார்த்தை
ஒரே ஒரு வார்த்தை மட்டும்
பேசி விடு
தமிழீழம் என்ற தாரக மந்திரத்தைச்
சொல்லி விட்டு மீண்டும் தூங்கிவிடு
மக்கள் சமுத்திரத்தில் மரணித்துவிட்ட வீரனே!
ஒரு வார்த்தை ஒரே ஒரு வார்த்தை
பேசி விட்டுத் தூங்கு
என் இனிய தோழனே!
உனது மரணப் படுக்கை கூட
இங்கே மகத்துவமாகி விட்டது
நீ கண் மூடியபடி தூங்குகிறாய்
அந்தத் தூக்கம் இங்கோர் புயலை உருவாக்குகிறது
உனக்குப் புரிகிறதா
உனக்குப் புரியும்

இந்தப் புயலுக்காகத்தானே நீ அமைதியானாய்
நீ பேசாமல் படுத்திருக்கிறாய்
அந்தப் படுக்கை இங்கோர்
பூகம்பத்தை வரவழைக்கிறது
உன் சாவே இங்கோர் சரித்திரமாகி விட்டது
செத்த பின் ஊர் கூடித்
தேம்புவது தான் இங்கு வழக்கம்
ஆனால்
ஊரே தேம்பிக் கொண்டிருக்கும் போது
மரணித்த வரலாறு
உன்னுடன் தான் ஆரம்பமாகிறது
சாவு பலதடவை உன்னைச் சந்திக்க வந்து
தோல்வி கண்டது
இப்போது
சாவை நீயாகச் சந்திக்கச் சென்று
வெற்றி கண்டு விட்டாய்
என் இனிய திலீபனே
நீ கையில் ஆயுதம் ஏந்திய போதும்
உன்னை அருகில் இருந்து பார்த்துள்ளோம்
நீ நெஞ்சில் அகிம்சையை ஏற்றிய போதும்
அருகில் இருந்து பார்த்துள்ளோம்
எந்த வித்தியாசமும் தெரியவில்லை
போராளிக்குரிய போர்க்குணமே
உன்னில் ...... தெரிந்தது
இந்திய அரசே!
உனது மௌனம்
இங்கோர் மரணத்தை நிகழ்த்தி விட்டது
இந்திய அரசே!
உனது ஆதிக்க அகம்பாவம்
இங்கோர் தியாகத்தைச் செயலிழக்கச் செய்து விட்டது
திலீபன் அமைதியானானே ஒழிய
அழிந்து விடவில்லை
அவன் சுருண்டு கிடப்பதைப் பார்த்தே
பலர் எழுந்து கொண்டனர்.
இந்திய அரசே!
இது உனக்குப் புரிகிறதா
தம்பி திலீபன் உன்னிடம் என்னதான் கேட்டான்?

எங்கள்
சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கவிடு என்றான்
எங்கள் மண்ணின் இறைமையைத் தா என்றான்
இது குற்றமா?
இதற்காகத்தனே போராடினான்
இதற்காகத்தானே வாதாடினான்
இதற்கு என்ன பதில் தரப்போகிறாய்
உனது பதிலை
நேற்று வந்த விமானத்திலும் எதிர்பார்த்தேன்
தாமதித்து விட்டாய்
நீ கடத்திய ஒவ்வொரு நொடிப் பொழுதும்
இங்கோர் புயலை உருவாக்கி விட்டாய்
திலீபன் என்ற புயல்
உன்னைச் சும்மா விடாது
உசுப்பியே தீரும்.
எங்கே என் தம்பி
எங்கே என் தம்பி
இங்கே இருந்தானே, இருந்தவனைக் காணவில்லை
எங்கே என் தம்பி
என் இனிய திலீபனே!
நிம்மதியாய்த் தூங்கு
நிலம் வெடிக்கப் போகிறது
நிம்மதியாய்த் தூங்கு நிலம் வெடிக்கப் போகிறது
காற்றே நீ மூசு
கடலலையே பொங்கி எழு
கூற்றவனே!
அவனைக் கொண்டு வந்து தூக்கி விடு

நான் ஆத்மரீதியாக உணர்கிறேன். இன்றில்லாவிட்டாலும் என்றே ஒரு நாள் எனது மக்கள் நிச்சயமாக விடுதலையடைவார்கள்.

-திலீபன்

# பாரதமே! நீ பதில் சொல்!

திலீபன் போய்விட்டான் ......... காந்தியின் உடலைத்தான் கோட்சே அழித்தான். இன்றைய பாரதமோ காந்தீயத்தையே கொன்றுவிட்டது.

அகிம்சைக்கு மதிப்பளிக்காத பாரதம் இன்று! அதன் முழு உருவமும் அம்பலப்படுத்தப்பட்டு விட்டது.

கண்ணீராலும், இரத்தத்தாலும் வரையப்பட்டுக் கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அப்பத்தைப் பிரித்துக் கொடுக்கப் புறப்பட்ட குரங்கின் நிலையில் பாரதம் எமது போராட்டத்திற்குள் புகுந்தது.

போராட்ட உணர்வு சிறிதேனும் இல்லாத, தங்களை அர்ப்பணிக்கத் தயாரில்லாத கூட்டங்கள், எமது மண்ணில் எமது பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கத் திராணியற்ற கூட்டங்கள், அவர்களை வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தன.

குடிகாரனுக்கு எப்படி குடிக்காமலிருக்க முடியாதோ போதைவஸ்துப் பாவிப்பவனுக்கு எப்படி அது இல்லாமல் இருக்க முடியாதோ, சூதாடிக்கு எப்படி சூதாடாமல் இருக்க முடியாதோ அதேபோல் " ஏ. சி. காரும் துப்பாக்கியையும் பதவியையும் கண்ட இந்தக் கூட்டங்கள் அவற்றை மீண்டும் பெறுவதற்காய் எதையும் செய்யத் தயாராகிவிட்டனர்.

பாவிகள்......! இன்று திலீபனைப் பறிகொடுத்து நிற்கிறோமென்றால் அதற்கு இவர்கள்தாம் காரணம்.

நாங்கள் இந்திய மக்களைத் தாம் நம்பினோம். இவர்கள் வேறுயாரையோ நம்பி கடைசியில் இத்தனை காலம் இந்தப் போராட்டத்தைக் கட்டிக்காத்து நாளாந்தம் மரணித்த எம் புலிகளை கேலியும் செய்கிறார்கள்.

இன்று திலீபனின் மரணத்திற்கு முழுப் பொறுப்பும் ராஜீவ்தான். ராஜீவ்! நீர் அயல்நாட்டு ஆயுதம், அயல் நாட்

டுக் கார், அயல் நாட்டுக் கல்வி, அயல்நாட்டு மனைவி என்றெல்லாம் அயல்நாட்டு மோகத்திலேயே நிற்கிறீர். அதை நாம் கவனத்திலெடுக்கவில்லை அயல் நாட்டு மண்ணும் உமக்குத் தேவையா............? சீ ...... கேவலம் இனிமேல் உமது பெயரை "ராஜீவ் கோட்சே" என்று மாற்றிக் கொள்ளும்.

பாரதத்தின் சாபக்கேடு நீர். சுதந்திரப் போராட்டம் என்ருல் கிலோ என்ன விலை? என்று கேட்கும் உமக்கு இவை எல்லாம் என்னவென்று புரிய நியாயமில்லை.

முப்பது வருடப் பிரச்சனைக்கு மூன்று நாளில் ஒப்பந்தம் செய்த உம்மால் நீர் கையெழுத்திட்ட ஒப்பந்தத்திற்கு உட்பட்ட விடயங்களை உள்ளடக்கிய கோரிக்கைகளுக்கு பதிலளிக்க பன்னிரண்டு நாட்கள் போதாமல் விட்டது. ஆம் இது இலங்கை இந்திய ஒப்பந்தமே தவிர ஈழத் தமிழருக்கான ஒப்பந்தமல்ல என்பதைச் செயலில் காட்டிவிட்டீர்.

எமது வீரர்கள் உயிரைக் கொடுத்துப் பெற்ற ஆயுதங்களைப் பறித்தெடுத்த பின் இப்போது அவர்களை கைது செய்வதோடு கொலைகூடச் செய்கிறீர்கள்.

இந்திய நாட்டில் ஏதாவது விடயத்தில் மக்கள் கேள்வி கேட்டுப் போராடத் தொடங்கினுல் சோடா பாட்டில், சைக்கிள் செயின்மூலம் அவற்றைக் கட்டுப்படுத்தி விடுவதுண்டு. அதே பாணியை இங்கு நடைமுறைப் படுத்தலாம் என நினைக்கிறீர் போலும்.

மக்களாகிய நாம் உணர்வு பூர்வமாகவே போராட்டத்தில் கலந்து கொண்டோம் என்பதை இந்தியா புரிந்து கொள்ளச் சிலகாலம் எடுக்கும் என்றே நினைக்கிறேம். எனெனில் இந்தியாவின் நலனைமட்டும் பேணுபவர்கள் என்றுலும் பரவாய் இல்லை. சொந்த நலனைப் பேணுபவர்களே உம்மைச் சுற்றி நிற்கிருர்கள். சி. ஐ. ஏ. ஏஜென்டான உன்னி கிருஷ்ணன் விஷயம் இதை உறுதிப்படுத்துகிறது.

உலக விடுதலைப் போராட்டங்களில் "சயனைட்" என்பதை விதியாக எடுத்துக் கொண்டதாக எந்த இயக்கமும் இல்லை. கண்ணீரும், இரத்தமும், உயிரும் கொடுத்து கட்டி வளர்க்க

பட்டது எமது போராட்டம். வானத்தில் இருந்து ஹெலிகொப்டர் சுடும்போதும் இரண்டரைலட்சத்திற்கு மேல் மேதின ஊர்வலத்தில் கலந்து கொண்டவர் நாம். உங்களின் சைக்கில் செயினுக்கோ, சோடா பாட்டிலுக்கோ வெருண்டோடும் கூட்டத்துடன் ஒப்பிட்டு அதேபாணியில் கையாள முயன்றால் இந்தியாவுக்கு கிடைக்கப் போவது மூக்குடைவே.

"ஏழை சிந்திய கண்ணீர் கூரிய வாள்" என்ற எமது நாட்டு மொழிவழக்கு நினைவுக்கு வருகிறது. அன்று யாழ் பஸ் நிலையத்தில் இந்திய ராணுவத்தினரைப் பார்த்து "பாழ்பட்டுப் போவானே" என்று ஒரு மூதாட்டி திட்டியதைப் பார்த்தோம் எமது உடம்பு புல்லரித்தது.

ஆயுதங்களுடன் தன்னை நெருங்கிய அந்தச் சிப்பாய்களைக் கண்டு அந்த மூதாட்டி கொஞ்சமும் பயப்படவில்லை. பொம்பரோடும் ஷெல்லோடும் வாழ்ந்து பழக்கப்பட்ட மக்கள் நாங்கள். மரணத்தைக் கண்டு பயப்படுபவர்களைத்தானே மிரட்ட முடியும். மரணம் என்பதை ஊதித்தள்ளும் சமாச்சாரமாக எண்ணும் மக்கள் எம்மை இவர்கள் என்ன செய்துவிட முடியும்? மக்களாகிய நாம் கண்ணாடிக் கூண்டுக்குள் நிற்கவோ இரும்புக் கவசம் அணிந்து செல்வதற்கோ விருப்பமில்லாதவர்கள் இன்னொரு விடயம் கல்வித் தரத்திலும் மேம்பட்டு நிற்கும் நாம் எதையும் பகுத்தறியும் ஆற்றல் கொண்டவர்கள். கண்டவருக்கு கற்பூரம் கொழுத்தி அபிமான நடிகைகளுக்கு கோயில்கட்டிக் கும்பிடும் மக்கள் கூட்டம் போன்றே எம்மைக் கணக்கிலெடுக்கிறது இந்தியா.

இந்தியாவின் போக்கைக் கண்டு காந்தியே கண்ணீர் வடிக்கும் நிலைமை இன்று உருவாகியுள்ளது. புலிகளில் இரண்டாயிரம்பேர்தான் ஆகவே இது பெரிய பிரச்சனை இல்லை என்றும், இது புலிகளின் போராட்டம் என்றே பாரதப் பிரதமர் இதைக் கொச்சைப்படுத்தியுள்ளார். இன்று பெண்கள் குழந்தைகள் பங்கு பற்றுகிறார்கள் என்று இந்தியா கூறுகிறது. இதை ஒரு மக்கள் போராட்டம் என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது. நித்திரையாயிருப்பவனை எழுப்பலாம் நித்திரை போல் பாசாங்கு செய்பவனை எப்படி எழுப்ப முடியும்

எங்களுக்கு வானத்திலிருந்து அரிசி போட்டது இந்தியா. அது வாய்க்கரிசிதான் என்பதை சிலநாட்களிலேயே புரியப் படுத்தி நிற்கின்றது. காலம் கடந்தாவது இந்தியா இதை உணர்ந்து கொள்ளுமா?

எமது வீரர்கள் ஆளவேண்டுமென்றோ, வாழவேண்டுமென்றோ ஆசைப்பட்டவர்களல்ல என்பதைத் திலீபன் செயலில் காட்டி விட்டான். நாங்கள்விடும் கண்ணீருக்கு இந்தியாவே நீ பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

*ஒரு மாபெரும் சதிவலைக்குள் சிக்கி வரும் எம் மக்களை எப்படியாவது விடுவிகக வேண்டும்.*

— திலீபன்

*என் போராட்ட வரலாற்றுச் சாதனைகளையிட்டு நான் மாபெரும் மகிழ்ச்சியும் பூரண திருப்தியும் அடைகின்றேன்.*

— திலீபன்

# ஓய்ந்த வானம்பாடி

இனிமையும், எழிலும், லயமும், நயமும், கானமும், கம்பீ
ரமும், அன்பும் நிறைந்த அந்தக்குரல் மறைந்து விட்டது.

சரோஜினி நாயுடு மறைந்தபோது ஒருவர் இப்படி எழு
தியிருந்தார் இப்போது இதே வரிகள் மீண்டும் நினைவுக்கு
வருகின்றன.

" வானம்பாடி " எனப் பெயர் பெற்றவர் பாரதத்தில்
சரோஜினி நாயுடு. சென்ற ஆண்டு செப்டெம்பர் 26 இந்த
மண்ணில் தமிழீழக்கானம் பாடிய இளங்குயில், இந்த மண்ணை
எள்ளளவும் சுயநலப் பற்றற்று தன் இனம், கொடுமைகளில்
இருந்து விடுதலை பெற்றுச் சுதந்திரக்காற்றை சுவாசிக்க வேண்
டுமென்று, ஒரே மூச்சுடன் ஓடித்திரிந்த ஒருகுரல், தம்இனத்
தின் ஓசையை உலகுக்கு கேட்க வைப்பதற்காக மூச்சை
நிறுத்திக் கொண்டு விட்டது.

*எப்போது பார்த்தாலும் சிரித்த முகத்துடன்
தன்னை ஒருபொருட்டாகக் கருதாது தேச விடுதலைக்
காய் ஓடித் திரிந்த திலீபனை பாரதத்தின் பாதகச்
செயலினால் இழந்து ஒரு வருடமாகிவிட்டது. ஆனால்
பாரதத்தின் நிலையோ...???*

அழகான தெளிந்த எதிர்காலம் நோக்கும் கண்கள், தலை
வாரிக் கொள்ளக்கூட நேரமில்லாமல் ஓடித்திரிந்த கால்கள்,
" தமிழினம், தமிழினம், தமிழீழம் " எனக் குரல் எழுப்பிக்
கொண்டிருந்த அந்த அழமான உதடுகள், கோடு போட்ட
சேட் அழகுமிளிரும் உடற்கட்டு எல்லாமே .............. இதனை
எப்படி முடிப்பதென்றே மனம் விம்முகிறது!

கண்களே கண்ணில் நீருள்ளமட்டும் கதறி அழுங்கள் என்று
அகிம்சைக்கான புதிய அத்தியாயத்தை ஆரம்பித்த அண்ணல்
காந்தி அடிகள் அவர்கள் இறந்த செய்திகேட்டு கல்கி எழுதி
யிருந்தார். இப்போது இனத்தின் வாழ்வுக்காக, இனத்தின்

விடுதலைக்காக தன்னையே தேய்த்து அழித்து, மக்கள் எல்லோரையும் கண்ணீர் கடலினுள் விட்டுச் சென்ற தியாகத்துக்காக நாம் எப்படி அழுவது?

பேசமுடியாதபடி எவரைப் பார்த்தாலும் பேயறைந்தவர் போலவே காணப்பட்டனர். அங்குமிங்குமாக விம்மல்கள், தேம்பி அழும் குரல்கள் கல்லாய்ப்போன மனசுகளை கரைய வைத்துக் கொண்டிருந்தனர் இதயம் வேகுகின்றது.

திலீபனுக்கு வயது எத்தனை? பலரது கேள்வி இதுதான்

இந்த வயதுக்குள் இத்தனை இனப்பற்று? இத்தனை மொழிப் பற்று? இத்தனை மண்பற்று? வேறு நாடுகளில்தான் இப்படி நடக்கும். எங்கள் நாட்டில் ........ என்று வேடிக்கையாகக் கேட்டவர்கள் வாயடைத்துப்போய் இருக்கிறார்கள்.

தனது வாழ்வின் ஆரம்ப அத்தியாயத்தில் இன விடுதலைக்கான புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறான் திலீபன்.

தன்னைவிடத் தான்பிறந்த மண்ணை, தன் இனத்தை, தன் தாய்மொழியை நேசித்தவன், தீரன் திலீபன் என்பதை யாரும் மறுக்க முடியாதபடி எதனையுமே எதிர் பார்க்காமல் செய்து விட்டான் அவன். யாருமே எதிர்பாராமலே செய்து விட்டான்

எதனையும் எதிர்பாராமல் செய்வதுதான் தியாகம் என்பதனை அவன் எப்பொழுது அறிந்திருந்தானோ?


திலீபா!

" இந்த மண்ணும் கடலும் வானும் மறைந்து முடிந்தாலும் மறக்க முடியாதடா உனது நினைவைப் பிரிக்க முடியாதடா " என்றொரு குரல் எங்கும் பரவிக் கேட்கிறது.

திலீபன் எங்குமே போகவில்லை அவன் எமது அன்னைகளின் அன்புக் கரங்களில் இன்னும் பச்சைக் குழந்தையாக இன்னும் இளமை மிடுக்குடன் பக்குவமாய்ப் படுத்திருக்கிறான் அவன் தமிழ் அன்னைகளின் அரவணைப்பில் இருக்கும் சொந்த மகன்.

பாரதமே! நீ இதை அறிவாயா? நீ அறியத்தான் போகிறாய் எதிர்காலம் உனக்குத் தீர்ப்பைச் சொல்லும்.

தமிழினத் தலைவனும்
தமிழினத்துக்காய் தன்னுயிர் தந்தவனும்



சாகும் வரை உண்ணா விரதமிருக்கும் லெப். கேணல். திலீபனை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத் தளபதி திரு. வே. பிரபாகரன் அவர்கள் சந்தித்துப் பேசுகிறார்.

NATIONAL LIBRARY SECTION,
MUNICIPAL LIBRARY SERVICES,
JAFFNA.

## காலமானது நீயல்ல; காலம்தான்

ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழு
செப்டெம்பர் – 26......
திலீபனே —
எமது இதயங்களின் மீது
பாறையை வைத்து விட்டுப்
போனுயே......!

இலைகளையே
இழந்து கொண்டிருந்த
மரம்
அன்று
ஒரு பூவை இழந்தது.

நட்சத்திரங்களை
இழந்து கொண்டிருந்த
வானம் —
அன்று
சந்திரனை இழந்தது

கண்கள்
பார்ப்பதற்கென்பதை
மறந்தோம்.........

அழத்தான் என
அர்த்தப்படுத்தினேம்.

விடிந்த தேசம்
அன்று ஏனே
இருட்டாகவே இருந்தது.

இதுவரை
உன் பெயரைத்தான்
நாம் உச்சரித்தோம்.
இப்போது
எம்மை உச்சரிக்கிறது
உனது பெயர்.

இதுவரை
கண்ணீரைத் தான்
நாம்
சிந்திஞேம்
இப்போது
எம்மைச் சிந்துகிறது
கண்ணீர்.

இது ஒரு
வசந்தம் முடிவதற்கு
முன்பே வந்த
இலையுதிர் காலமோ!

நாம் என்ன செய்வது
நரம்புகளில்
தீப்பற்றியெரிகிறதே.

இதோ —
உன்னை இழந்த தேசம்
உறங்கிக் கிடக்கிறது.
வழிந்த
வார்த்தைகளுக்குள்
நாம்
புதைந்து கிடக்கிஞேம்.

உனது விரல்கள் அசையும் வேளை
எமது
இதய வீணை பாடுமே!
எங்கே
உனது விரல்கள்.

உனது உதடுகள்
விரியும் போது
நெஞ்சில்
வெளிச்சம் தெறிக்குமே
எங்கே
உனது கம்பீர உதடுகள்.

விழியைத் தொலைத்து விட்டு
வெளிச்சத்தைத் தேடுகிறது
இமை!

புயலாகப் புறப்பட்டுத்
திரிந்த — நீ
எப்படி
தென்றலாகச் சிதையச் சம்மதித்தாய்?

நீ
எழ வேண்டுமென
நாம்
பாரத தேசத்தை
பார்த்திருந்தோம்

அந்த
அகிம்சையின்
அஸ்திவாரம் அசையவில்லை
நீ
எழாமலேயே போய் விட்டாய்

உனது
சிறகுகளைத்
தேடுகிறது வானம்!

உனது
பார்வைகளைத்
தேடுகிறது தேசம்
உனது
பாதைக்கு மரணமில்லை
உனது
பாதத்துக்கு மரணமில்லை

விழுந்தது
வேலி — ஆனாலும்
தோட்டம் அசையவில்லை

மனிதன் தாயின்
கருப்பையில் தான்
முளைக்கிறான் — ஆனால்
போராளியோ
தன் நெஞ்சிலிருந்தே
முளைக்கிறான்.

நீ
காலமாகவில்லை
இங்கே
காலம் தான்
காலமாகிக் கிடக்கிறது

ஏ! எல்லோரும்
காளிதாசனைக் கூப்பிடுங்கள்
ரகு வம்சத்தை
மாற்றியெழுத வேண்டும்

அதில் திலீபனின் பெயரைத்
தியாகியெனப் பொறிக்கச்
சொல்வோம்
தீயில் துளிர்த்த
புஸ்பமெனப்
போற்றுவோம் அவனை.



நான் என் மனதிற்கு நேர்மையாகவும் தூய்மையாகவும் என் எனது பொறுப்பைச் செய்தேன். ஆனால் நான் எனது மக்களுக்கு எனது பணியை முழுமையாக்க வில்லை என்பதையிட்டு பெரும் கவலையடைகிறேன்.

— திலீபன்

# திலீபன் கண்மூடிய போதுதான் தமிழ்ச் சமூகம் கண் திறந்தது

திலீபன் ஒரு யுகத்தின் ஆரம்ப கர்த்தா. புரட்சி இடியின் புது மின்னல். புரட்சி கீதத்தின் முதல் வரி. எமது மக்களை மூடியிருந்த இந்திய மாயை என்னும் திரையை விலக்கி உண்மையின் சொரூபத்தை எமக்குக் காட்டிய இனத்தின் வழி காட்டி. அவன் கண்மூடிய போதுதான் எமது சமூகம் கண் திறந்தது. பிராந்திய வல்லரசுகள் புவிசார் அரசியல் சூழ்நிலை களை தமக்கு இசைவாக்கிக் கொண்டு தமது நலன்களை முதன் மைப்படுத்தி ஈழத்தமிழர் தியாகத்தை தாம் அறுவடை செய்ய எண்ணித் தான்தோன்றித் தனமாகவும் எம்மைக் கலந்து ஆலோசியாது ஒரு தலைப்பட்சமாகவும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டு எம்மீது பாரியளவிலான ஒடுக்கு முறைகளை கட்டவிழ்த்து விட்டபோது இத்தகைய இன ஒடுக்கு முறை களுக்கு எதிராக ஒரு புதிய போராட்ட வடிவத்தை முன் வைத்தவன் திலீபன்.

"போராட்ட வடிவங்கள் மாறலாம்
போராட்ட இலட்சியம் மாறாது".

என்ற தலைவர் பிரபாகரன் அவர்களது அறைகூவலுக்கு தானே பொருளாகி பொருள் விளக்கம் கொடுத்த உதாரண புருஷன் திலீபன் ஆகும். திலீபனின் தியாகப் போராட்டத்திற்கான பின்னணியை ஒரு கண்ணோட்டம் நோக்குதல் வேண்டும்.

## சுதுமலையில் ஆகஸ்ட் 4-ம் திகதி

"ஈழத்தமிழரின் ஒரே பாதுகாப்பு சாதனமாக இருந்து வந்த ஆயுதங்களை இந்திய அரசு எம்மிடம் இருந்து பெற்றுக் கொள்வதிலிருந்து எமது மக்களின் பாதுகாப்பு என்ற பெரும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறது. ஆயுதக் கையளிப்பு என்பது இந்தப் பொறுப்பு மாற்றத்தைத்தான் குறிக்கிறது".

"நாம் ஆயுதங்களைக் கையளிக்காது போனால் இந்திய இராணுவத்துடன் மோதும் துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்படும். இதை நாம் விரும்பவில்லை. இந்தியாவை நாம் நேசிக்கிறோம்",

"பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் என்னை அழைத்துப் பேசினார். அவரிடம் எமது பிரச்சனைகளை மனம் திறந்து பேசினேன். இந்த ஒப்பந்தத்தை சிங்கள இனவாத அரசு ஒருபோதும் நிறைவேற்றப் போவதில்லை, என்பதையும் இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைத்தேன். எமது மக்களின் பாதுகாப்பு பிரச்சினை பற்றி அவரிடம் எடுத்துக் கூறினேன். எமது மக்களின் பாதுகாப்புக்கு அவர் உத்தரவாதம் அளித் தார். பாரதப் பிரதமரின் உறுதிமொழியிலும் நேர்மையிலும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது".

மேற் குறிப்பிட்ட பந்திகளில் காணப்படும் வாசகங்கள் சுதுமலை அம்மன் கோயில் முன்றலில் 1987-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4-ம் திகதி பல லட்சக்கணக்கான தமிழ்ப் பொதுமக்கள் முன்னிலையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் இதயபூர்வமாக எடுத்துக் கூறப்பட்ட விடயங்களாகும். மேலே குறிப்பிட்ட அவரது பேச்சில் இருந்து தமிழ் மக்களின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு இந்தியாவும் இந்தியப் பிரதமரும் முழுப் பொறுப்பையும் ஏற் றுக் கொண்டமை தெளிவாகின்றது. அதுமட்டுமன்றி இந்தியா வுடன் ஆயுத ரீதியாக விடுதலைப்புலிகள் மோதுவதை விடுதலைப் புலிகள் துளி கூட விரும்பவில்லை என்பதும் தெளிவாகின்றது ஆனால் இந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக இந்தியா நடந்து கொண்டதா? தமது அளப்பரிய தியாகத்தால் எமது தாயகத் தின் ஒரு பகுதியை தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்த ஒரு விடுதலை இயக்கத்தின் தலைவர் நீட்டிய நேசக்கரத்தை இந்தியா பற்றி கொண்டதா? இந்தக் கேள்வி களுக்கு ஒரு உடன்பாட்டு ரீதியான பதிலை ஒருபோதும் கொடுக்க முடியாது என்பதைப் பின்னைய நிகழ்வுகள் தெளிவு படுத்தியுள்ளன.

1987-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ம் திகதி ஆயுத ஒப் படைப்பு இடம் பெற்ற பின்னர் ஈழத்திற்குள் இறக்குமதி செய்யப்பட்ட சமூகவிரோதக் கும்பல்களை கையாட்களாக வைத்துக் கொண்டு விடுதலைப் புலிகளை அழிப்பதில் பாரதம் கவனம் செலுத்தியது. இதனை மூன்று வழிகளில் கையாண்டது. முதலாவது விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறித் துக் கொண்ட இந்தியா சமூக விரோதிகளுக்கு ஆயுதங்களை

வழங்கி அவர்கள் மூலம் விடுதலைப்புலிகளை ஒடுக்கும் நடவடிக்கையை தீவிரப்படுத்தியது. இரண்டாவது பொதுமக்கள் மத்தியில் இதே சமூகவிரோதக் கும்பல்களை வைத்து கொலைகளையும் கொள்ளைகளையும் மேற்கொண்டு மக்கள் மத்தியில் அமைதியற்ற சூழ்நிலையை உருவாக்கியது. இவ்வாறு செய்வதன் மூலம் இதற்கான பழியை விடுதலைப்புலிகள் மேல் சுமத்தியது. அவ்வாறு சுமத்துவதன் மூலம் மக்களை விடுதலைப்புலிகளிடமிருந்து அந்நியப்படுத்திவிட முயன்றது. மூன்றாவதாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னரும் தீவிரம் பெற்ற சிங்கள இனவாத அரசின் தமிழினவிரோதப் போக்குகளை கண்டும் காணாமல் விட்டுவிட்டது. இவ்வாறு செய்வதன் மூலம் சிங்கள இனவாத அரசான யு. என். பி. அரசை பதவியில் வைத்துக் கொண்டு பாதுகாக்க எண்ணியது.

## விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல்கள்

இந்திய இராணுவம் ஈழத்திற்குள் தரையிறக்கப்பட்ட நேரம் தொடக்கம் விடுதலைப்புலிகள் மீதான இராணுவ ரீதியான ஒடுக்கு முறைகளை மேற் கொள்வதிலேயே அவர்கள் அக்கறையுடையவர்களாக இருந்தார்கள். ஏனெனில் விடுதலைப் புலிகளை அழிக்காமல் ஈழப்போராட்டத்தை முற்றாக அழிக்க முடியாது என்பதை இந்தியா உணர்ந்து கொண்டிருந்தது. தீவிர இலட்சியப் பற்றோடு போராட்டத்தில் முன்னணியில் நின்றவர்கள் அவர்களேயான படியாலும் போராட்டம் முனைப்படைய முழுக் காரணமும் அவர்களே என்றபடியாலும் எதிர் காலத்தில் தமிழ் மக்களுக்கு ஒரு கௌரவமான நிரந்தர தீர்வையும் நிரந்தரமான பாதுகாப்பையும் வழங்கக் கூடியவர்களாக விடுதலைப் புலிகள் விளங்கியமையையும் இந்தியா நன்கு உணர்ந்தும் தெரிந்தும் வைத்திருந்தது. அத்தோடு தமிழ் மக்களின் ஒன்று திரண்ட சக்தி விடுதலைப் புலிகளுக்கு பின்னால் நிற்பதையும் அவர்களது ஏகோபித்த விடுதலை ஸ்தாபனமாக விடுதலைப்புலிகள் அமைப்பு விளங்குவதையும் உணர்ந்து கொண்ட இந்திய உளவு ஸ்தாபனமான "றோ" ஈழப் போராட்டத்தை முற்றாக நசுக்கி விடுவதாயின் விடுதலைப்புலிகளை முற்றாக ஒடுக்கியும் அழித்தும் விடுவதன் மூலமே சாத்தியமாகும் என்பதைப் புரிந்து கொண்டது. ஆனால் முதலில் தானே அதனை முன்னின்று செய்யாமல் ஒரு இரும்புத் திரைக்குப்

பின்னால் நின்று கொண்டு ஆயுதம் தாங்கிய குழுக்களை ஆசை வார்த்தைகள் கூறி விலைக்கு வாங்கி அவர்களைக் கொண்டு இத்தகைய நடவடிக்கைகளை முதலில் மேற்கொண்டது. இந்த ஆயுதம் தாங்கிய குழுக்களின் சுயநலப் போக்கால் தியாகமும் விடுதலை வேட்கையும் கொண்ட விடுதலைப் புலிகளின் போராளிகள் பின்வருவோர் அநியாயமாகக் கொல்லப்பட்டனர்.

10-8-87 — காளிதாசன் செல்வக்குமார் (செல்வம்) திருமலை
26-8-87 — கில்மன் (அடம்பன்)
26-8-87 — அர்ச்சுனா (கல்வி எட்டாக்காடு) மன்னார்
26-8-87 — ரஞ்சன் (பிச்சைக்குளம்)
2-9-87 — டென்சில் (பன்றி விரிச்சான்)
4-9-87 — கப்டன் தனம் (இ. வசந்தராசா) தண்ணீர் ஊற்று
4-9-87 — 2வது லெப் கண்ணன் (சிறீசேதுகாவலர்) வவுனியா
5-9-87 — கைலை (கோபாலசிங்கம் வன்னியசிங்கம்) நொச்சிக்குளம்
5-9-87 — இரத்தினம் (சிவக்குமார்)
6-9-87 — அமீன் (நெடுங்கேணி)
6-9-87 — கிருபா (நெடுங்கேணி) காணாமல் போனவர்
12-9-87 — இராசேந்திரன் (பகீரதன்) காங்கேசன்துறை
12-9-87 — மயில் (பண்டாரிக்குளம்)
12-9-87 — சிவம் (சிலாபத்துறை)
13-9-87 — யோகன் (சுப்பிரமணியம் தயாநிதி) வேப்பங்குளம்

இவர்களை மட்டுமன்றி வேறும்பல விடுதலைப்புலி உதவியாளர்கள் இந்தியாவால் இறக்குமதி செய்யப்பட்ட சமூக விரோதக் கும்பல்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். வேறு சிலர் சுட்டுக் காயப்படுத்தப் பட்டனர். அல்லது கடத்திச் செல்லப்பட்டு காணாமற் போயினர்.

## சமூக விரோத செயல்கள் அதிகரிப்பு

1986ம் ஆண்டு நடுப்பகுதிக்குப் பின்னர் குடாநாட்டில் ஆயுதம் தாங்கிய சமூக விரோதிகளின் செயல்கள் பெருமளவில் கட்டுப்படுத்தப் பட்டமையால் கொள்ளை, களவு போன்ற சமூக விரோத செயல்கள் பெருமளவில் குறைந்து காணப்பட்டன. இதனால் மக்களது அன்றாட வாழ்க்கை சுமுகமான முறையில்

நடைபெற்றது. 1985 ம் ஆண்டு நடுப்பகுதியில் சிறீலங்கா இராணுவம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட பின்னர் மக்கள் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்களை பெருமளவில் விடுதலைப் புலிகளே கண்காணித்து வந்தனர். ஆனால் 1987 ம் ஆண்டு ஆகஸ்ட் 5 ம் திகதி விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் பலாலியில் வைத்து இந்திய இராணுவத்திடம் ஒப்படைக்கப் பட்ட பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட குழுக்கள் திடீரென குடாநாட்டின் பல பாகங்களிலும் பரவலான முறையில் பெரும் கொள்ளைச் சம்பவங்களிலும் வீடு உடைத்தல் போன்றவற்றிலும் ஈடுபடலாயினர். இதனால் மக்களின் வாழ்க்கை சீர்குலைந்தது. மக்கள் மீண்டும் தமது பாதுகாப்பு வேலைகளை விடுதலைப்புலிகளே பொறுப்பேற்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். இதனால் மக்களின் வேண்டுகோள்களுக்கு செவிசாய்த்து விடுதலைப்புலிகளும் இரவு வேளைகளில் கேந்திர முக்கியத்துவம் பெற்ற வீதிச் சந்திகளில் சென்றிகளை அமைத்து இரவுநேர மக்கள் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடலாயினர். இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டமையால் மக்கள் மகிழ்ச்சியுற்றனர். ஆனால் சமூகவிரோத சக்திகள் இந்திய இராணுவத்தின் துணையுடன் மக்கள் விரோத செயல்களை தீவிரப் படுத்துமுகமாக விடுதலைப்புலிகள் மீது தாக்குதல்களை மேற் கொள்ளலாயினர். இவ்வாறாக மக்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் இருவர் 5-9-87 இரவு கொக்குவில் குளப்பிட்டி சந்தியில் வைத்து சமூகவிரோதிகளால் தாக்கப்பட்டனர். தாக்கப்பட்ட இரு விடுதலைப் புலிகளது பெயர்கள் ஆ. ஜெயக்குமார் மற்றவர் கருணாகரன். இவர்களை ஒரு வானில் வந்த கோஷ்டியினரே தாக்கினர். இந்த வானில் வந்த கோஷ்டிக்கு பாதுகாப்பாக இவர்களுக்குப் பின்னால் கவச வாகனங்களில் வந்த இந்திய இராணுவத்தினர் இந்த இரண்டு விடுதலைப் புலிகளையும் தூக்கி தமது கவசவாகனங்களில் போட்டுக் கடத்திக் கொண்டு சென்றனர். இந்த இரு போராளிகளும் யாழ்ப்பாணம் கோட்டை அமைதிப் படை முகாமுக்குள் கொண்டு செல்லப்பட்டனர். அமைதிப் படை முகாமுடன் தொடர்பு கொள்ளப்பட்டபோது தாம் அவ்வாறு யாரையும் கடத்தவில்லை எனவும் இது தொடர்பாகத் தமக்கு எதுவும் தெரியாது எனவும் அங்கிருந்த இந்திய அமைதி காக்கும் படையின் அதிகாரிகளால் தெரிவிக்கப் பட்டதாக ஈழநாடு செய்திப்பத்திரிகை 6-9-87 அன்று செய்தி வெளியிட்டது.

# சிங்களக் குடியேற்றம்

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் சூழ்நிலையை தனக்குச் சாதகமாக்கிக் கொள்வதில் சிறீலங்கா அரசு எப்போதுமே கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றது. சட்டவிரோதமான சிங்களக் குடியேற்றங்களை தமிழ் மண்ணில் ஏற்படுத்துவதில் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளது. இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபின் சட்டவிரோதமான குடியேற்றங்கள் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தீவிரம் பெற்றமையை நாம் நன்கு அவதானித்தல் வேண்டும்.

எல்லைக் கரையோரமான வவுனியா மாவட்டத்தில் கள்ளிக்குளம், தம்பனை, கொக்குவெளி, வீமன்கள்ளி, செட்டிக்குளம், நேரியகுளம் ஆகிய கிராமங்களில் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான வாரமே சிங்களக் குடியேற்றம் நடைபெற்றது. இந்த சிங்களக் குடியேற்றத்திற்கு ஈரப்பெரிய குளத்திலுள்ள சிங்கள இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியான கேணல் ரத்னுயகா என்ற இனவாதியே பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான்.

தனித்தமிழ் பிரதேசமான மணல் ஆறு அல்லது பறையனாறு என்றழைக்கப்பட்ட மண்ணில் வெலிஓயா திட்டம் என்ற பெயரில் ஒரு சிங்களக் குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வெலிஓயா திட்டத்தின்கீழ் சூரியனாறு, முந்திரிகைக் குளம், கென்ற்பாம் டொலர் பாம், சிலோன் தியேட்டர்ஸ், கன்னட்டி, நாயாறு ஆகிய தமிழ்ப் பிரதேசங்கள் உள்ளடக்கப் பட்டன. வடமாகாணத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் இடையிலுள்ள எல்லைப் பிரதேசத்தை அநுராதபுர மாவட்டத்துடன் இணைக்கவோ அல்லது தனியான சிங்கள மாவட்டமாக இதனைப் பிரகடனப் படுத்தலாமோ என்று இப்போது சிறிலங்கா அரசு ஆராய்ந்து வருகின்றது. இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவாகி ஒரு வருட காலத்துள் ஒரு சிங்கள மாவட்டம் தமிழ் மண்ணில் உதயமாகின்றது.

வவுனியா வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஊஞ்சல்கட்டி கிராமத்தில் சூரியனாறு பகுதியில் 106 சிங்கள வாக்காளர்கள் தேர்தல் இடாப்பில் இரவோடு இரவாக சேர்க்கப் பட்டனர். பட்டிருப்பு தொகுதியிலுள்ள 19 ம் கட்டை என்ற இடத்தில் அமைக்கப்பட்ட சிங்கள இராணுவ அதிரடிப் படை முகாமைச் சுற்றியுள்ள பகுதியில் கட்டப்பட்ட 55 வீடுகளில் சிங்கள மக்கள் குடியேற்றப் பட்டனர். இதனால் அச்சம் காரணமாக கெவுனியாமடு, தீவிலான முதலான பகுதிகளிலிருந்து தமிழ் மக்கள் வெளியேறினார்கள். இதைவிட மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காணிகளுக்கு சட்டப்படி காணி உறுதிப் பத்திரம் மட்டக்களப்பு கச்சேரியில்தான் வழங்கப் படவேண்டும். ஆனால் சிங்கள அரசாங்கம் அம்பாறை கச்சேரியில் காணி உறுதிகளை வழங்கியது. கல்குடா தொகுதியில் மீன்பிடித்தல் தொழிலில் ஈடுபட சிங்கள மீனவர்கள் மீண்டும் அங்கு சென்று குடியமர்த்தப் பட்டனர்.

## சிறீலங்கா இராணுவத்தின் அடாவடித்தனங்கள்

இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதும் சிறீலங்கா இராணுவம், பொலிஸ், ஊர்காவல் படையினரின் அடாவடித்தனங்கள் குறையவேயில்லை. தொடர்ந்து அரச பயங்கரவாதம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப் பட்டுக் கொண்டேயிருந்தது. இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதியான 29–07–87 அன்று மூதூர் மல்லிகைத்தீவில் 14 தமிழர்கள் சிறீலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர், ஜே. ஆர். – ராஜீவ்காந்தி ஒப்பந்தத்திற்கு எதிராக தென்னிலங்கையில் மூண்ட இனக்கலவரத்தின்போது களுத்துறை என்ற இடத்தில் ஒன்பது தமிழர்கள் சிங்கள இனவெறியர்களால் வெட்டிக் கொல்லப்பட்டனர். பூநகரி 4–ம் கட்டை இராணுவ முகாமிற்கு முன்னால் சென்ற ஈரோஸ் உறுப்பினர்களான தேவதாஸ் (முல்லைத்தீவு), செந்தில் குகன் (கைதடி) ஆகியோர் 04–08–87 அன்று இந்த இராணுவ முகாமில் இருந்த சிங்கள இராணுவத்தால் கொல்லப்பட்டனர். இதே திகதியில் திருமலை சாம்பல்தீவு என்ற கிராமத்தில் சிங்கள

கறுப்புச் சட்டைக்காரர்களால் யோசப் செபஸ்தியான் என்ற 4 வயதுக் குழந்தை ஒன்று உட்பட 4 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது என்ற எண்ணத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்குத் தொடுவாய் என்ற கிராமத்திற்கு திரும்பிச் சென்ற தமிழ் அகதிகள் மீது இலங்கை இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. திருமலையில் 06–08–87 அன்று திருமலை சந்தியில் புலிக்கொடி ஏற்றிய ஆறுமுகநாதன் என்பவர் மீது சிங்கள ஊர்காவல்படை கைக்குண்டு வீசி அவரைக் கொன்றது. இதே போல் 28–08–87 அன்று மட்டக்களப்பு ஒட்டமாவடியில் இரண்டு முஸ்லீம்கள் சிங்கள ஊர்காவல் படையால் தாக்கப்பட்டு உயிரோடு எரிக்கப்பட்டனர். 31–08–87 அன்று தம்பலகாமம் பிரதான வீதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயமும் தமிழர் வீடுகளும், சைவாலயமும், பூசகரின் வீடும் சிங்கள இராணுவத்தாலும் ஊர்காவல் படையாலும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. 03–09–87 அன்று மூதூர் உதவி அரசாங்க அதிபர் ஜனுப் ஹபீப் முகம்மது சிங்கள ஊர்காவல் படையால் சுட்டுக் கொல்லப்பட்டார். விடுதலைப் புலிகளின் ஆதரவாளரான இவரது கொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் பலத்த கண்டனம் தெரிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதே போல் சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபரும் நல்லூரைச் சேர்ந்தவருமான விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளரான விக்னராஜா சுட்டுக் கொல்லப்பட்டார்.

## இந்திய இராணுவ அட்டகாசங்கள்

இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஜுலை மாதம் 29-ம் திகதி மாலை 3–15 மணியளவில் கைச்சாத்திடப்பட்டது. அதைத் தொடர்ந்து அன்றைய தினமே மாலை 6–15 மணியளவில் இந்திய விமானம் தனது இராணுவ துருப்புகளை பலாலியில் தரை இறக்கத் தொடங்கியது. ஆரம்பத்தில் சிறீலங்கா இராணுவத்தினரின் ஒடுக்கு முறைகளிலிருந்து தமிழ் மக்களை இரட்சிக்க வந்த தேவ தூதர்கள் போல் காட்டிக் கொண்டபோது அந்த மாயையை நிஜங்களின் நிதர்சனம் என நம்பிய தமிழர்

கள் இருக்கவே செய்தார்கள். ஆனால் நாட்கள் நகர நகர இவர்களின் வருகையின் நோக்கத்தை கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் உணரத்தலைப்பட்டனர். அவர்களும் தமது நோக்கத்தை கொஞ்சம் கொஞ்சமாக செயல்படுத்த முனைந்த போதுதான் எமது மக்களும் இவர்களை இனம்காணத் தொடங்கினர்.

ஆரம்பத்தில் புலிகள் வேறு மக்கள் வேறு என எடைபோட்ட இந்தியப் படையினர் புலிகளை இனம் காணவும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மக்களை திசை திருப்பி விடவும் சில தந்திரோபாயங்களைக் கையாண்டனர். அதற்காக இவர்களால் இறக்குமதி செய்யப்பட்ட ஆயுதம் தாங்கிய குழுக்களை பயன்படுத்தத் தொடங்கினர்கள்.

கொக்குவில் குளப்பிட்டி சந்தியில் மக்கள் பாதுகாப்புக்காக ஈடுபட்டிருந்த இரண்டு விடுதலைப் புலிப் போராளிகளான ஆ. ஜெயக்குமார், திரு. கருணாகரன் ஆகியோர் மீது 05-09-87 அன்று இரவு சமூகவிரோதக் கும்பல் ஒன்றினால் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. முதலில் ஹயஸ் வான் ஒன்றில் வந்த இந்தக் கும்பல் இந்தப் போராளிகள் மீது தாக்குதல் மேற்கொள்ளவே இந்தக் கும்பலுக்குப் பாதுகாப்பாக இந்த வானுக்குப் பின் கவச வாகனங்களில் வந்த இந்திய அமைதி காக்கும் படையினர் இந்த இரண்டு விடுதலைப் புலிகளையும் கடத்திக் கொண்டு கோட்டை இராணுவ முகாமுக்குச் சென்றனர். மறுநாள் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் தலையிட்டு இந்திய இராணுவத்திடமிருந்து இவர்களை மீட்டு எடுத்தனர். இந்த செய்தி 06-09-87 அன்று ஈழநாடு பத்திரிகையிலும் வெளியிடப்பட்டது.

இதன் பின்னர் ஒருநாள் மன்னார் இலுப்பைக்கடவை பாடசாலை ஒன்றில் முகாமிட்டிருந்த சிறீலங்கா இராணுவ முகாமை அகற்றி அதனை மீண்டும் செயல்பட வைக்குமாறு கோரி சென்ற விடுதலைப் புலிகளின் மன்னார் அரசியல் பிரிவு பொறுப்பாளர் சலீம் இந்திய அமைதிப்படை தளபதி லெப். கேணல். டிலோன் அவர்களால் துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டார். சலீம் பலவந்தப்படுத்தப்பட்டு துப்பாக்கி முனையில் வாக்கு மூலம் தருமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார்.

மட்டக்களப்பில் 12-09-87 அன்று விடுதலைப் புலிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட பொதுமக்கள் கருத்தரங்கு ஒன்றைக் குழப்புகின்ற நோக்குடன் அன்று காலை பத்து மணி முதல் இரவு பத்து மணி வரை இந்திய அமைதிகாக்கும் படையின ரால் அப்பகுதி எங்கும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது விடுதலைப் புலிகளின் கூட்டத்தைக் கலைக்கவும் கல்முனைக் கலவரங்களின் பின்னணி சக்திகளைப் பாதுகாக்கவுமே இந்த ஏற்பாடு என தளபதி மாத்தையா கண்டனம் தெரிவித்தார்.

## போராட்டத்தின் தவிர்க்க முடியாமை

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு விடுதலைப் புலிகளால் ஆயுதங்கள் 5-8-87 அன்று ஒப்படைக்கப்பட்ட பின்னரும் தமிழ் மக்கள் மீதான இராணுவரீதியான ஒடுக்கு முறைகள் குறைந்த பாடில்லை இவ்வளவு காலமும் சிறீலங்காவின் இரா ணுவம், விமானப்படை, கடற்படை, சிறீலங்கா ஊர்காவற்படை, சிங்களக் காடையர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த இராணுவ ரீதியான ஒடுக்கு முறைகள் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் மேலதிகமாக இந்தியப் படைகளும் அவர்களால் கொண்டு வரப்பட்ட சமூகவிரோத சக்திகளும் விடுதலைப் புலிகள் மீதும் தமிழ் மக்கள் மீதும் கொடூரமான அடக்கு முறைகளைப் பிரயோகித்தார்கள். மறுபுறம் இந்தக் களே பரங்களுக்கு மத்தியில் கடந்தகாலக் கலவரங்களால் இடம் பெயர்ந்த மக்களை மீள குடியமர்த்தல் என்ற பெயரி லும் அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல் என்ற பெயரிலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இம்மாகாணங்களைச் சாராத வெளியார் பெருமளவில் குடியேற்றப் பட்டனர்.

இந்தச் சூழ்நிலையில் இத்தகைய இராணுவ ஒடுக்குமுறை களுக்கும் நிலச் சூறையாடலுக்கும் எதிராக ஒரு போராட்டம் நடத்தப்படுவது இன்றியமையாதது மட்டுமன்றி தவிர்க்கப்பட முடியாததுமாகும்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரை இந்தியாவுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராட வேண்டும் என்ற எண்ணம் துளி கூட இருக்கவில்லை. ஆனல் இந்தியாவின் ஒவ்வொரு செயலும் அல்லது தக்க தருணத்தில் செய்யாமையும் ஒருதலைப்

ட்சமாக சிறீலங்கா அரசுக்கு சார்பாக நடந்து கொண்டு வந்தமையும் விடுதலைப் புலிகளை போராட்ட சூழ்நிலைக்கு தள்ளிக் கொண்டேயிருந்தது. ஆயுதங்களை ஒப்படைத்து அரசியல் நீரோட்டத்தில் இணைந்து ஜனநாயக வாழ்க்கைக்குத் திரும்பிய அவர்களை இந்தியாவின் நடவடிக்கைகள் அச்சத்தையும் ஐயப்பாட்டையும் வளர்த்து அவர்களை மீண்டும் போராட்ட சூழ்நிலைக்கே தள்ளிக் கொண்டு போய்விட்டன. அப்படியிருந்தும் அவர்கள் பொறுமையைக் கடைப் பிடித்தனர். மறு பக்கத்தில் எந்த இலட்சியத்திற்காக அவர்கள் ஆரம்ப காலமுதல் ஆயுதம் ஏந்திப் போராடி வந்தார்களோ அந்த இலட்சியம் நிறைவு பெற இலங்கை – இந்திய ஒப்பந்தம் தடைக்கல்லாக விருந்தபோதும் கூட அவர்கள் இந்தியாவை நேசிப்பதால் நாம் அவர்களுக்கு எதிராக ஆயுதம் தூக்கிப் போராட மாட்டோம் எனக் கூறி வந்தார்கள். இந்த நிலையில் நான் தலைவர் பிரபாகரன் அவர்களின் "போராட்ட வடிவங்கள் மாறலாம் போராட்ட இலட்சியம் மாறாது" என்ற கருத்தமைக்கு ஏற்ப திலீபன் புதியதொரு போராட்ட வடிவத்தை 15-9-87 அன்று நல்லூர் முருகன் ஆலய முன்றலில் ஆரம்பித்தான். விடுதலைப் புலிகள் மற்றவர்களிலும் பார்க்க வித்தியாசமானவர்கள் என்பதை உணர்த்து முகமாக நீராகாரம் கூட அருந்தாமல் பூரண உண்ணா நோன்பினை அவன் ஆரம்பித்தான். தமிழ் மக்கள் நலனை நேசித்த அவன் ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து தனது போராட்டத்தை ஆரம்பித்தான்.

## திலீபனின் ஐந்து கோரிக்கைகள்:-

(1) பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறீலங்காவின் சிறைகளில் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

(2) புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றங்கள் யாவும் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

(3) இடைக்கால அரசு அமைக்கப்படும் வரை புனர்வாழ்வு என்ற பெயரிலும் நடத்தப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்படல் வேண்டும்.

(4) வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுதல் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

(5) ஊர்காவல் படைகளின் ஆயுதங்கள் மீளப்பெறப்படல் வேண்டும். பாடசாலைக் கட்டிடங்களிலுள்ள இராணுவம் வாபஸ் பெறப்பட வேண்டும்.

## கோரிக்கைகளின் நிலைமை

இந்த ஐந்து கோரிக்கைகளில் எதுவுமே இன்று திலீபன் தியாக மரணமடைந்து ஒரு வருடமான பின்பும் கூட நிறைவு செய்யப்படாதுள்ளது. திலீபன் இறந்த போது பூசாவிலும் ஏனைய சிங்களச் சிறைகளிலும் வாடிய 1200 பேர் இன்றும் அங்கேயே சிறைவைக்கப் பட்டுள்ளார்கள். அவர்கள் தம்மை விடுவிக்குமாறு கோரி இப்போது சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள். இதைவிட காங்கேசன் துறையில் இந்திய இராணுவத்தின் சிறைகளில் சுமார் 1200 க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

புனர் வாழ்வு என்ற பெயரில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை தொடர்ந்து மேற்கொள்ளப் பட்ட சிங்களக் குடியேற்றம் திலீபனின் மரணத்தின் பின்னரும் இன்றும் தீவிரமாக நடைபெறுகின்றது. எந்தக் கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் உண்ணா நோன்பினை மேற்கொண்டு தியாக மரணத்தை தழுவிக் கொண்டானோ அந்த மரணத்திற்கான காரணிகள் அகர்த்தப் படாமலும் அவன் மரணிக்கும்போது முன்வைத்த கோரிக்கைகள் எதுவுமே நிறைவு செய்யப் படாமலும் அவனது முதலாவது நினைவு அஞ்சலி ஆண்டு எம்மைக் கடந்து செல்கின்றது. ஆனால் அவன் ஈழத் தமிழ் வாழ்வில் ஏற்படுத்திய வரலாற்றுச் சிறப்பு மிக்க தியாகம் யுகம்யுகமாக அவனது நாமத்தின் சின்னமாக சுடர்விட்டுக் கொண்டேயுள்ளது.



உடல் சோர்வுற்ற நிலையில் உறுதி தளராத திலீபன் தனது இறுதிக் கட்டத்தை அடைந்து கொண்டிருக்கிறார்.

நூலகப்
நூலக
யாழ்ப்பாணம்

## தேசபிதாவே.........
## பாரதத்தின்
## தேசபிதாவே......

தேசபிதாவே
பாரதத்தின்
தேசபிதாவே

எங்கள் ஊர்
திலீபனை
உங்களுக்குத்
தெரியுமா......?

உங்களது
உண்ணாவிரதம்......
உன்னதம் நிறைந்தது......
இருபத்தியொரு நாள்
நீரைமட்டும்
அருந்தியபடி
நீங்கள் இருந்தீர்கள்

உங்களது போராட்டம்
மனிதத்துடன்
நிகழ்ந்ததினால்
வெற்றியும்
பெற்றீர்கள்

நாங்கள்
மோதியது
யாருடன்

உங்களது
பெயரை
வைத்திருப்பவர்கள்
உங்களுக்கு
களங்கத்தை
ஏற்படுத்தி விட்டார்களே!

உங்களது
அருகிலிருக்கும்
இந்திராபிரியதர்சினியிடமும்
தேசவிடுதலை வீரர்களிடமும்
கூறுங்கள்
திலீபன்
மட்டுமே
எனது பெயரை
வைக்கும்
தகுதியுடையவன்
என்று.........!

தண்ணீர் கூட
அருந்தாது
தியாகியாகிவிட்ட
அந்தச்
சிறுகொழுந்து
பன்னிரு நாட்கள்
உங்களைக் காண்பதற்காய்
நல்லூர்......வீதியில்
காத்துக்கிடந்தது

பொட்டி ராமுலு
சங்கரலிங்கம்
பொபிசாண்டஸ்
என்பவர்களையும்
விடவும்
இவனது
தியாகம்
பெறுமதியானதும்
அளப்பரியதும்
என்று
அவர்களிடம்
கூறுங்கள்.

# தியாக திலீபனின் பார்வையில் சிங்களக் குடியேற்றம்:"

ஆங்கிலேயரின் காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை (சிறீலங்கா – தமிழீழம்) சுதந்திரமடைந்த பின்னர் தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்தும், அவர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த நிலங்களை கபளீகரம் செய்தும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைச் செய்தும், அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் சொந்த நாட்டிலேயே இரண்டாம் தர குடிமக்களாக, அடிமைகளாக, அனாதைகளாக ஆக்கும் நோக்குடன் கடந்த 40 ஆண்டுகளாக மாறி மாறி, ஆட்சி செய்த பிற்போக்கு, இனஒதுக்கல், ஒற்றையாட்சி, ஒரேமதக் கொள்கையுடைய சிங்கள பேரினவாத அரசுக்கெதிராக வட கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களால் முடுக்கி விடப்பட்ட இடைவிடாத நீண்டகால போராட்டத்தின் ஒரு முக்கிய நிகழ்வு தான் அமரராகிவிட்ட தியாகச்சுடர் திலீபன் அவர்கள் மேற்கொண்ட நீராகாரம்கூட அருந்தாமல் தன்னையே தமிழீழத்துக்கு தமிழ் பேசும் மக்களின் விடிவுக்காக மேற்கொண்டு உயிர் நீத்த உண்ணாவிரதப் போராட்டமாகும்.

1987ம் ஆண்டு யூலைத் திங்கள் 29ம் நாள் தமிழீழ மக்களின் ஒப்புதலின்றி தமிழீழ மக்களுக்கு உதவுகின்றோம் அவர்களுடைய இழந்து விட்ட உரிமைகளைப் பெற்றுத் தருகிறோம். மூன்றிலொரு பங்கு வடகிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு அமையும், அதற்கான போராட்ட உணர்வுகளை மதிக்கிறோம். வட–கிழக்கு மக்களை சிறிலங்கா இராணுவம் ஆட்சியாளரின் துணையோடு இம்சைப் படுத்தலை முற்று முழுதாக எதிர்க்கிறோம். அம்மக்களின் போராட்ட உணர்வுகளை இராணுவ நடவடிக்கை மூலம் அல்லாது, பேச்சு வார்த்தை மூலமே தீர்வு காணப்படல் வேண்டும் என்று கூறிக்கொண்டு தமிழ் மக்களின் எழுச்சியை அசட்டை பண்ணிய இந்தியநாடு அது தன்னுடைய அபிலாசைகளையும் இந்துமா சமுத்திரத்தில் தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்யவும், தான்தான் அப்பிராந்தியத்தில் ஒரே ஒரு வல்லரசு என்ற நப்பாசையில் இதுவே தகுந்த தருணம் என எண்ணியதும் மிகவும் சாணக்கியமாக சிறீலங்கா பேரினவாத முதலாளித்துவ பச்சோந்தி

அரசோடு அவசர அவசரமாக தமிழ் பேசும் மக்களை பகடைக் காய்களாக பாவித்து, செய்து கொண்டது தான் இலங்கை இந்திய ஒப்பந்தம். அதைத்தொடர்ந்து தமிழீழத்துக்கு அனுப் பிவைக்கப்பட்டது இந்திய அமைதி காக்கும் படை என்னும் தமிழர்களை அழித்தொழிக்க வந்த அசுரப்படை ( *So Called Indian Peace Keeping Force* ).

இவ் ஒப்பந்தத்தை தமிழீழ மக்களோ அல்லது அம்மக் களின் அபிலாசைகளை முன் எடுத்துச் செல்லும், அல்லது இறுதி மூச்சுவரை போராட்டக் களத்தில் நின்று தங்களை தமிழீழ மண்ணுக்கு அர்ப்பணித்துக் கொண்டு இருக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளோ ஏற்றுக்கொள்ளவும் இல்லை ஒப்ப மிடவும் இல்லை.

நாம் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டா லும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை அமுலாக்கியே தீரு வோம் என இந்தியா கங்கணம் கட்டி நின்றது. அதை ஆட் சேபிப்பதில் எதுவித அர்த்தமும் இல்லை. அது எமது வல்ல மைக்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் வல்லரசு நிட்சயித்து முடிவு செய்திருக்கும் போது நாம் என்ன செய்ய முடியும் என்ற நிலையில், எமது மக்களின் ஒப்புதல் இன்றி இவ் ஒப் பந்தம் எம்மை நிராயுத பாணிகளாக்குகின்றது. இவ் ஒப்பந் தத்தை நாம் இம்மியளவும் ஏற்றுக் கொள்ளவில்லை. நாம் ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்து கையளிக்காது போனால் இந்திய இராணுவத்துடன் மோதும் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக நேரிடும். இந்திய வீரனுக்கு எதிராக நாம் ஆயுதங் களை நீட்ட தயாராக இல்லை. ஆகவே எமது ஆயுதங்களை இந்திய அமைதிப் படையிடம் ஒப்படைக்க முடிவு செய்கிறோம். ஈழத் தமிழரின் உயிருக்கும் பாதுகாப்பிற்கும் இந்தியா தான் பொறுப்பாக இருக்க வேண்டும். என்று சுதுமலையில் ( யாழ்ப் பாணம் ) நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் தலைவர் வே. பிரபாகரன் உறுதியாகக் கூறினர்.

1. ஸ்ரீலங்கா இராணுவத்தினல் கைது செய்யப்பட்ட 17 போராளிகளையும் கொழும்பிற்கு கொண்டு செல்வதிலி ருந்தும் ,

2. ஒப்பந்தத்தை அடுத்து இந்திய அமைதிப்படைக்கு முன்னாலே வடகிழக்கு மாகாணங்களின் எல்லைப் புறத்தே புனர்வாழ்வு அமைச்சின் அனுசரணையுடன் திட்டமிட்டு நடைபெறும் சிங்களவர்களைக் குடியேற்றுவதிலிருந்தும்,

இந்திய அமைதிகாக்கும் படையால் ( இந்தியா ) தடுத்து நிறுத்தி இலங்கை - இந்திய ஒப்பந்த விதிகளைக் காப்பாற்ற முடியாத இந்தியாவின் கையாலாகாத் தனத்தையும் தமிழ் பேசும் மக்களின் ஒட்டு மொத்தமான எதிர்ப்பையும் வெளி உலகுக்குக் காட்டவும், இந்தியாவுக்கு இடித்துச் சொல்லவுமாக சுதுமலையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற்றுமொரு பிரகடனமான

" போராட்ட வடிவங்கள் மாறலாம் இலட்சியம் மாறாது "

என்ற முடிவிற்கேற்பவும் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் அவர்கள் 15-9-1987 அன்று நீராகாரம் ஏதும் அருந்தாமல் சாகும்வரை உண்ணா நோன்பு விரதத்தை ஆரம்பித்து 26-9-87 அன்று வீரத்தியாக மரண மெய்தினர்.

(1) பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் இன்னும் சிறைக் கூடங்களில் தடுத்து அல்லது அடைக்கப்பட்டோர் விடுவிக்கப்படல் வேண்டும்.

(2) புனர் வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றம் உடனடியாக தடுத்து நிறுத்தப்படல் வேண்டும்.

(3) இடைக்கால அரசு நிறுவப்படும் வரை "புனர்வாழ்வு" என்று அனுமதிக்கும் சகல வேலைகளும் நிறுத்தப்படல் வேண்டும்.

(4) வட - கிழக்கு மாகாணங்களின் பொலிஸ் நிலையங்கள் திறக்கப் படுவதை உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

(5) இந்திய அமைதிப் படையின் மேற்பார்வையில் ஊர்காவற் படை என அழைக்கப் படுவோருக்கு வழங்கப் பெற்ற ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள் பள்ளிக் கூடங்கள் ஆகியவற்றில் குடிகொண்டுள்ள இரா ணுவ பொலிஸ் நிலையங்கள் மூடப்படல் வேண்டும்.

இராணுவ அடக்குமுறைதான் எமது பிரச்சனை அல்ல இவையே பாரிய பிரச்சனை என எம்மக்கள் எண்ணிய திலிருந்து மீண்டு விட்டோம். இனி ஒன்றுமில்லை நிம்மதி யாக இருக்கலாம் என்று நினைக்கக்கூடும். ஆனால் இனி மேல்தான் நமக்கு மீளமுடியாத பிரச்சனைகள் உருவாகப் போகின்றன. "பொருளாதாரம்" "குடியேற்றம்" என் பன இனிமேல்தான் எம் மக்களை நிம்மதியற்ற வாழ்விற்கு உட்படுத்தப் போகின்றன.

மக்களின் பங்கு, அவர்களின் ஒத்துழைப்பு இருந்தால் தான் எம்மை எதிர்நோக்கும் சகல பிரச்சனைகளையும் நாம் முறியடிக்க முடியும். நமது வருங்கால சந்ததி நிம்மதியாக வாழ, நாம் இழந்துவிட்ட மண்ணை மீட்ப தற்கும் எமது பாரிய பங்களிப்பைச் செய்ய வேண்டும்."

அந்நியரான ஒல்லாந்தரை விரட்ட வெள்ளைக் காரனுடன் சேர்ந்தோம், வெள்ளைக்காரனைத் துரத்த சிங்களவருடன் சேர்ந்தோம், சிங்களவரைத் துரத்த இந்தியருடன் சேர்ந் தோம். ஆனால் இன்று என்ன நடந்தது சிங்களவர் இந்தியருடன் சேர்ந்து எம்மை நசுக்குகிறார்கள். ஒல்லாந் தர் கோட்டையான யாழ் கோட்டையில் இன்று யார் இருக்கிறார்கள்.

வடகிழக்குப் பகுதிகளில் உள்ள எல்லைப் பிரதேசங்களில் எப்படி எப்படி எல்லாமோ சிறீலங்கா இனவாத அரசி னால் திட்டமிட்டு சிங்களவர் குடியேற்றப்படுகிறார்கள். பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மண், காலம் காலமாக அனுபவித்த மண் எப்படி கபளீகரம் செய்யப் படுகின் றது.

- எமது மக்கள் சொந்த மண்ணிலிருந்தே விரட்டியடிக்கப் படுகின்றார்கள், கொல்லப்படுகிறார்கள், பெண்கள் கற்பழிக்கப் படுகிறார்கள், உடமைகள் சூறையாடப் படுகின்றன, அழிக்கப்படுகின்றன.
- பேரினவாத அரசு சிங்கள மக்களை குடியேற்றுவதில் தான் அதிக அக்கறை காட்டுகிறது. தமிழ் மக்களைக் குடியேற்றுவதில் அப்படியில்லை.
- சிங்களக் குடியேற்றத்திற்கு பண உதவி, பொருள் உதவி கடன் உதவி, போக்குவரத்து வசதி யாவும் செய்து கொடுக்கப் படுகின்றது.
- அப்படிக் குடியேற்றப்படும் சிங்கள மக்களுக்கு வீட்டுக் கடன் அதற்கான உபகரணங்கள், விவசாயக் கடன் அதற்கான விதைநெல், பசளை, உழவு, கடற் தொழிலுக் கான வள்ளம், உபகரணங்கள் யாவும் தாராளமாக உதவப்படுகின்றன.
- போதாமைக்கு பாதுகாப்பின்மையால் தமிழர்கள் விட்டுச் சென்ற வீடுகளிலும் சிங்களவர் குடியேறுவதற்கு உடந்தையாக விருக்கின்றது!
- பாதிக்கப்பட்டவர்கள் என்று கூறிக்கொண்டு, வெளிநாட்டு உதவியுடன் சிங்களமக்களை அவசர அவசரமாக குடியேற்றுகின்றது.
- சிலசில இடங்களில் சிங்களவரின் விருப்பத்திற்கு மாறாகவும் குடியேற்றப் படுகிறார்கள்.
- சிறைச்சாலைகளில் உள்ள சிங்களக் கைதிகளை புனர் வாழ்வு என்ற போர்வையில் அதிக பணச் செலவுடன் குடியேற்றுகிறார்கள்.
- மகாவலித் திட்டம் என்றும் கல்லோயாத் திட்டம் என்றும் மாதுறு ஓயா திட்டம் என்றும், வெலி ஓயா திட்டம் என்றும் பலப்பல குடியேற்றங்கள் மூலம் எமது மண்ணைப் பறிக்கிறார்கள்.

திலீபன் விட்டுச் சென்ற பணியை மேற்கொள்வோமாக

★

# நினைவுச் சிதறல்

தியாக வேள்வி ஒன்று
திறம்பட நடந்தது
இலட்சிய முடிவொன்று
இலக்கினை இழந்தது
ஏனின் ...............
சளைக்காத விளைவினால்
சரித்திரம் பிறந்தது
தன் மானத்திற்காக
தனி நாடு கேட்டது
இன வெறிப் பிறப்பின்
இதயச் சுடலையில்
தப்பாய்ப் பட்டதால்
தண்டிக்க விளைந்தனர்
அடக்கு முறை என்னும்
திட்டமிட்ட குழியை
அஹிம்சை கொண்டு
சரி செய்ய நினைத்தான்
அடக்கப் பட்டவர்களும்
ஒடுக்கப் பட்டவர்களும்
சுவாசிக்க விரும்பும் அந்த
எதிர் காலத்தை எண்ணி
இவன்

இதயம் இடிந்தவன்
சுதந்திர வேள்விக்கு
நிரந்தர மாயினான்
ஆம்..................... இவன்
மலரொன்றிற்காக
மரணித்த மனிதன்
உடன் பிறப்புக்களுக்காக
உயிர் விட்ட புனிதன்
அதனால் தான்...........
மனங்களி லெல்லாம்
வணங்கப் படுகிறான்
நிஜங்களிலெல்லாம்
நினைக்கப் படுகிறான்
ஆம்....................
விடிவு ஒன்றிற்காக
முடிவு செய்யப்பட்டவன்
எழிச்சி ஒன்றிற்காக
புரட்சி செய்தவன்
மனங்களில் பிறந்து
ஓராண்டு தான்.

எமது போராட்டப்பாதை அமைதி தழுவியதாகவோ அல்லது இரத்தம் தோய்ந்ததாகவோ அமையவேண்டுமெனத் தீர்மானிக்க வேண்டியவர்கள் இங்குள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்களே.

— திலீபன்

# நிஜங்களின் நிதர்சனம்

இந்திய - இலங்கை ஒப்பந்தம்
ஈழத் தமிழர் இனப்பிரச்சனைக்கு
இனியதோர் தீர்வை தந்தது என்று
எமது மக்கள் எண்ணியிருந்த வேளையில்

ஈழநாட்டில் வானத்தில்
இரைந்தபடி பறந்து கொண்டிருந்த
இந்திய விமானப்படை விமானங்கள்
இலட்சக்கணக்கான இந்திய இராணுவத்தினரை
இலங்கை மண்ணில் இறக்கிக் கொண்டிருந்தன

அதிகாரப் பரவலாக்கல்
அமுதம்போல் எம் மக்களுக்கு இனித்தபோது
ஆயுத ஒப்படைப்பு என்பது
ஆலகால விஷம் போலிருந்தது எம் போராளிக்கு

ஆக்கிரமிப்புப் படையின் அனுமதியுடன்
அனுசரவாக இதுவரை இருந்து வந்த
ஆயுதக் கும்பல்கள் அட்டகாசங்களும்
அராஜகங்களும் செய்யத் தொடங்கின

விடுதலைக்காக போராடி வந்த
வீரத்தியாகங்கள் பல புரிந்த
வீரவேங்கைகளாம் விடுதலைப் புலிகளை
ஆயுதக் கும்பல்களின் அராஜகங்களும்
அமைதியாக இருக்க வைக்கவில்லை

எல்லையில் சிங்களக் குடியேற்றம்
எம் மண்ணில் படையின் அட்டகாசங்கள்
இன்னமும் சிறையில் எமதிளைஞர்
தொடரும் இனப்படுகொலைகள்

இவற்றை எதிர்த்தே
எமது தமிழீழ மக்கள்
தொடுத்திட்ட அகிம்சைப் போராட்டம்
தோல்வியில் முடிந்ததுவே

...ிய நூலகப் பிரிவு
...கர நூலக சேவை
...ழ்ப்பாணம்.


அகிம்சையால் பிறந்த பாரதத்தின்
ஆட்சியாளர்கள் - எம் மக்களின்
அகிம்சைப் போராட்டங்களை துச்சமென
அவமதித்துத் தூக்கியெறிந்தனர்

வெகுண்டனர் எம் வேங்கைகள்
உயிர் தன்னைத் துச்சமென மதித்து
உண்ணாவிரதப் போர் தொடங்கினர்

தமிழரசின் தலைநகராம் நல்லூரிலே
திலீபன் என்றொரு வீரவேங்கை
தண்ணீரின்றி விரதமிருந்து
தனதுயிரை இம்மண்ணுக் களித்தான்

வளர்ந்து சென்ற பிரச்சனைகளின் மத்தியில்
வடமராட்சிக் கடல் தன்னில்
வஞ்சகம் கொண்ட இலங்கைக் கடற்படையிடம்
வகையாகப் பிடிபட்டனர் எமது தளபதிகள்

தற்காப்பு ஆயுதம் வைத்திருந்தோரை
தாக்குதலுக்குச் சென்றனர் எனக்கூறி
கொழும்பு கொண்டு செல்ல இலங்கையரசு முயன்றபோது
குப்பிதனை கடித்த வேங்கைகளும் உயிர் துறந்தனர்

சத்தியம் அறிந்து வெகுண்டெழுந்து
சத்தமிட ஆரம்பித்த எம் மக்கள்மீது
சுத்தமில்லாத மனதுடன் இங்கு வந்த படையினர்
சூழ்ச்சிகரமான யுத்தத்தைத் தொடுத்தனர்

விடுதலைக்காக போராடிய எமது வேங்கைகளும்
வீரமுடன் இவ்யுத்தத்தையும் எதிர்கொண்டனர்
மூன்று நாட்களில் முற்றாக அழித்து விடுவோம் — இந்த
முப்பது ஆண்டு காலப் போராட்டத்தை — என
மார் தட்டிய இந்திய இராணுவம்
முறையாக அடிவாங்கியது எமது மண்ணில்

தொடர்ந்து ஏற்பட்ட இழப்புக்களைக் கண்டு
துவண்டுபோன அமைதிப்படை
மானம் மரியாதையில்லாமல்
மங்கையர் தம் கற்பை அழித்து
மூதாதையர் தம் உயிர் குடித்து
மகிழ்ச்சியுடன் உறங்கிய குழந்தைகளைக் கொல்வது

வறியவர்கள் மிகக்குறைந்த
வளமான எமது மண்ணில்
வெறியர்கள் இரத்த
வெறி பிடித்து அலைந்தார்கள்

அழகான புதிய வீடுகள்
அருமையாக உயர்ந்து நின்ற கட்டிடங்கள்
ஆயிரக்கணக்கில் தரைமட்டமாகின
அமைதிப்படையின் கோரத்தால்

அகதி முகாம்களில் எமது மக்கள்
அனுபவித்த துன்பங்கள் துயரங்களை
எங்கு சென்று நாம் சொல்வோம்
எப்படி நாம் மறப்போம் வாழ்க்கையில்

ஆக்கிரமிப்பு யுத்தம் தொடருது - இங்கு
இன்னமும் அராஜகம் நடக்குது
அமைதிப் படையின் அட்டகாசங்கள் முடியவில்லை - இங்கே
அமைதி இன்னமும் ஏற்படவில்லை

மாணவர்கள் படிக்க பல தடைகள்
மக்கள் வேலைசெய்யப் பல தடைகள்
மத்தியான வெயிலில் மக்கள்
மறித்து இருத்தப் படுகின்றனர் வீதிகளில்

தாக்குதல்கள் படையினரில் நடாத்தப்பட்டால்
தடியடிப் பிரயோகம் மக்கள் மீது
குண்டுகள் படையினர் மேல் வீசப்பட்டால்
கொடுமைகள் பலநடக்குது மக்கள் மேலே
படையினர் தாக்குதல்கள்

படித்தவர் பாமரர் வேறுபாடின்றி
அப்பாவி மக்கள் அனைவர் மீதும்
அநியாயமாக நடாத்தப்படுகின்றனர்

தொடரும் துன்பங்களை இனியும்
தொடர்ந்திடாமல் தடுத்திடுவோம்
துஷ்டர்கள் தம்மை எம் மண்ணிலிருந்து
தூரவிரட்டி அடித்திடுவோம்

விடுதலைக்காக போராடிய
வீரமறவர் எம்மக்கள்
மடிதலை துச்சமென
மகிழ்ந்திடுவார் எம்மக்கள்

மக்கள் ஆதரவு கொண்ட
மகத்தான போராட்டம் நடத்திடுவோம்
மண்ணுலகில் புதியதோர்
மறவர் சமுதாயம் அமைத்திடுவோம்

எந்தத் தேசத்து இராணுவம்
எம்மை அடக்க முனைந்தாலும்
இந்த மண்ணில் மைந்தர்கள்
இம்மியளவும் கொள்கையை விட்டு விலகார்

புரட்சிப் பூக்கள்
இரத்தத்திலேயே பூக்கும்
புரட்சிகர எண்ணம் பெற்ற சமுதாயம்
புரட்சி நடத்திடவே துடிக்கும்

விடுதலைக்காக இன்னுயிரை ஈந்த
வீர வேங்கைகளே
உங்கள் புரட்சி கீதத்தை
நாங்கள் பாடுவோம்
உங்கள் வழி நாம் செல்வோம்
எங்கள் குரல்கள் நெரிக்கப்படினும்
உரத்துப் பாடுவோம் விடுதலைக் கீதம்.

★

# நாய்களோ..................

இரவின் அமைதியைக் குலைத்துக் கொண்டு எங்கோ வெகு தொலைவில் இடியோசையுடன் விழுந்து கொண்டிருந்த பீரங்கிக் குண்டுகள் அவனது வீட்டு அயற்புறங்களிலும் விழத் தொடங்கிவிட்டது. வீட்டுக்குள் நுழையாமல் வாசலோடு நிற்கும் அவனது வீட்டு நாயும் வெடிச் சத்தத்துக்கு அஞ்சி அங்கும் இங்கும் ஓடி ஊளையிட்டுவிட்டு ஆற்ருமல் வீட்டுக்குள் நுழைந்து ஒரு மூலையுள் நடுங்கிக்கொண்டு குந்தியது. வழமையாக அடீக்! என்று அதட்டி வெளியேற்றும் பரமு பாதி இருளையும் ஓட்டாத அந்தக் குப்பி விளக்கின் ஒளியில் தனது அதட்டலை எதிர்நோக்குவது போல் அடிக்கடி அவனைப் பார்க்கும் அந்த நாயை அவன் இரக்க உணர்வுடன் பார்த்தான். அடுத்த மூலையில் பயம் கலந்த பார்வையுடன் தூங்காமல் இருக்கும் இருபிள்ளைகளையும் அணைத்துக் கொண்டு வாசலையே பார்த்தபடி அமர்ந்திருக்கும் தனது மனைவியைப் பார்த்து விட்டு ஒரு பெருமூச்சுடன் சத்தங்கள் வரும் திசையை நோக்கி காதுகளைத் திருப்பினுன்.

வறிய குடும்பத்தில் பிறந்தும், தனது அயராத முயற்சியினுல் கல்வி கற்று, இன்று யாழ்ப்பாணம் கச்சேரியில் ஒரு எழுது வினைஞனுக கடமையாற்றும் பரமானந்தம் சக ஊழியர்களால் பரம் என்று அன்பாக அழைக்கப்படுவான். பாடசாலை நாட்களில் இருந்து அவனிடம் இருந்த புத்தகங்கள் படிப்பது, சமூகப் பணிகளில் ஈடுபடுவது போன்ற நல்ல பழக்கங்கள் இன்றுவரை அவனிடம் வளர்ந்து வந்தது. தொழிலாளர் பிரச்சனையில் அவனை முன் நிற்க வைத்தது. இதனுல் சமூகப் பிரச்சனைகளைத் தெளிவாகவும் முன்னேக்கியும் பார்க்கத்தெரிந்திருந்த அவனுக்கு இன்றைய யுத்த நிலைமைகள்கூட பல ஆண்டுகளுக்கு முன்பே எதிர் பார்த்ததுதான். தன்னைப்போல் வறுமையால் வாடும் மக்களுக்கும் விடுதலை வேண்டும் என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொண்டபோதே தனது தேசத்தை அடையாளம் காணவும் அதனை நேசிக்கவும் கற்றுக் கொண்டான். நடந்து கொண்டு இருக்கும் கொடுமைகளைக் கண்டு மனம் குமைவதைத் தவிர எதையுமே செய்ய முடியாத நிலையில் அவன் இருந்தான்.

" கோயிலடிக்குப் போவமே"

உறக்கத்துக்குச் செல்லும்வரை எதையாவது செய்து குழப்படிப் பிள்ளைகள் என்று பெயரெடுத்த தனது இரு பிள்ளைகளும் அஞ்சி ஒடுங்கி தன்னை அணைத்தபடி இருப்பதைக் கண்டு பொறுக்க முடியாத நிலையில் அவனது மனைவி கேட்கிருள்.

" அங்காலிப் பக்கம் தான் விழுகுது போலை கிடக்குது"

" அந்தப் பள்ளிக்குடத்துக்காதல் போவம்......பிள்ளையள் பயப்பிடுதுகள் "

" போகலாம் தான் ...... ஆனு அம்மாவை என்ன செய்யிறது "

பரமுவின் இந்தக் கேள்வியுடன் அவர்களிடையே மீண்டும் அமைதி அயலில் உள்ளவர்கள் அனைவரும் அன்று மாலையே கோயில்களுக்கோ பள்ளிக் கூடங்களுக்கோ சென்றிருந்தனர். அவர்கள் அந்தப் பயங்கர சூழலிலும் தனிப்பதற்கு பரமுவின் தாயாரின் உடல்நிலைதான் காரணம். எழுந்து நடக்க முடியாத அளவிற்கு நோய்வாய்ப்பட்டிருந்த அவளைப் போக்குவரத்து வசதிகள் இல்லாமல் எங்கும் கொண்டு செல்ல முடியாத நிலையில் அவர்கள் தவித்தார்கள்.

" அம்மா......ஆச்சி தானே அம்மா முதல் சாகிறது......"

ஆறு வயது நிரம்பிய அவனது மகளின் பிஞ்சு மனத்தின் சூழல் பதிவுகள் ஒழிவு மறைவின்றி வெளிவருகின்றது.

" சீ அப்படிச் சொல்லக் கூடாது"

மகளின் வார்த்தைகளால் பதட்டமடைந்த தாயாத் அவசரமாக அவளது வாயை பொத்தியபடி கூறுகின்ருள்.

சிறிதுநேர இடைவெளிக்குப்பின் வீடே அதிர்ந்து விழுவது போல் பலத்த சத்தத்துடன் ஒரு ஷெல் அயல் வீட்டில் வீழ்கிறது " அம்மா" என்று அலறியபடி குழந்தைகள் தாயாரை அணைத்துக் கொள்கின்றன. அவன்கூட தனது உடலை கதவின் உட்புறம் இழுத்துக் கொள்கிருன்.

" ஐயோ ...... என்னைப் பாராமை ...... இந்தக் குஞ்சு கனோடை எங்கையாவது ஓடித்தப்புங்கோ மோனையன் நான் இதிலை கிடப்பன் "

என்னையின்றி அணையப்போகும் கைவிளக்கின் ஒளியில் அந்தப் பழைய கட்டிலில் படுத்திருந்தபடியே தலையை உயர்த்தி கூறிவிட்டு மீண்டும் சாய்கிறாள் பராமுவின் தாயார்.

" ஓ ......இனியும் குழந்தைகளை வைச்சிருக்க இயலாது ராணி வெளிக்கிடும் உங்களைக் கொண்டுபோய் விட்டிட்டு நான் வாறன் "

" வயது போனவையை ஒண்டும் செய்யாங்கள் ........... சாப்பாடு குடுத்து வைச்சிருப்பாங்கள் "

மனைவியின் இந்த வார்த்தைகளை மன ஆறுதலுக்காகச் சொல்லும் வார்த்தைகளாகவே கருதிய பராமு கட்டியிருந்த ஆடு மாடுகளை அவிழ்த்து விட்டு விட்டு வந்தான். ஷெல்லுக்கு ஓரளவு பாதுகாப்பான இடத்தில் தாயாரை கட்டிலோடு தூக்கி வைத்தான். இரவுச் சாப்பாட்டிற்காகத் தயாரித்த உணவை மறுநாட் தேவைக்காக கட்டிலருகே பாதுகாப்பாக மூடிவைத்த பராமுவின் மனைவி தண்ணீர் போன்ற இதர பொருட்களையும் எடுத்து வைத்தாள்.

மனைவியையும் குழந்தைகளையும் பள்ளிக்கூடத்தில் விட்டு விட்டு வந்துவிட வேண்டுமென்ற முடிவுடன் பராமு சைக்கிளில் ஏறி அமர்ந்தான். வயதில் சிறிய பெண்பிள்ளையான வித்தியா வைக் கான்ரிலில் இருத்தியபடி மனைவி ஏறி அமர்கிறாள் கபிலன் பின்பக்கத்தில் ஏறி பராமுவைக் கட்டிப்பிடித்தபடி இருக்கிறான். அவனது நாயும் அவர்களைப் பின்தொடர்ந்து செல்கிறது.

மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் ஏற்பட்ட கும்இருட்டில் மனித நடமாட்டம் இல்லாத வீதிகளுக்கு ஊடாக ஒருமைல் தொலைவில் உள்ள பாடசாலையை அடைகின்றனர். வெள்ளைச் சீலையில் அகதி முகாம் என்று பெரிதாக எழுதப்பட்டிருந்த எழுத்துக்கள் அந்த இருளிலும் கண்ணுக்குத் தெரிகின்றன.

அந்தப் பெரிய கட்டிடங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிலசில மெழுகுதிரிகள் மட்டும் எரிகின்றன. அகதிகள் இரவு உணவை முடித்துக்கொண்டு உறக்கத்துக்குச் செல்லும் வழமையான நேரம் ஆனால் அன்று கேட்டுக் கொண்டிருந்த செல் சத்தங்கள் அவர்களை விழிக்க வைத்திருந்தது. பாய்கள் சேலைகள் விரித்துப் படுப்பதற்கு இடம் பிடித்துக் கொண்டு பலர் குந்தியிருக்கிறார்கள், சிலர் எழுந்து நடமாடுகின்றனர். ஒவ்வொருவரும் தமது பாதுகாப்பைப் பற்றி உணர நேர்ந்ததால் இடத்துக்கான சண்டை அவர்களிடையே மூழ்கிறது.

பாடசாலை மைதானத்தில் எந்த நாயை எது கடிப்பது என்ற முடிவில்லாமலேயே அகதிகளோடு வந்த நாய்கள் அனைத்தும் சேறு மேலெழ மாறி மாறிக் கடிபடுகின்றன.

“ஏனப்பா சண்டை பிடிக்கிறீயள் இஞ்சை எல்லா இடமும் பாதுகாப்பான இடம்தான் கப்றினோட கதைச்சிருக்கினமாம் போய் அவரவரிடத்தே இருங்கோ”

அகதிமுகாம் பொறுப்பாளர் ஒருவரின் உரத்த குரலுடன் கூட்டம் கலைகின்றது. சமூகத்தில் எல்லா நிலைகளிலும் மக்கள் விழிப்படையாதவரை நியாயமும் நீதிகேட்பவர்களின் குரல்களும் அடக்கப்படும் என்பதைக் கண்டு பழகியிருந்த பரமுவுக்கு வியப்பைத் தராத போதும் பெருந்தொகையான மக்கள் தன்னுணர்வின்றி எவற்றுக்கும் தலையசைப்பவர்களாக ஆக்கப்பட்டிருப்பதைக் கண்டு அவன் மனம் வருந்தினான். அந்தப் பாதுகாப்பற்ற கட்டிடத்திலும் நுளைவாயிலில்தான் ஒரு சிறிய இடம் பரமுவுக்கு கிடைத்தது. போர்வையை விரித்து மனைவியையும் பிள்ளைகளையும் படுக்க வைத்துவிட்டு பிள்ளைகள் உறங்கும்வரை வாசலைப் பார்த்தபடி குந்தி இருந்தான் அவனது நாயும் வாசலோரமாக வந்து மண்ணில் படுத்துக் கொள்கிறது. தாயாரை தனிமையில் விட்டுவந்த உணர்வு உறுத்துகிறது மனைவியிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்று அவன் எழுந்த போதுதான் அந்தக் கட்டிடத்தின் மீது ஷெல்கள் அடுத்தடுத்து வீழ்கின்றன. அவலக் குரல்கள் வானைப் பிளக்கின்றது எரிந்த ஓரிரு மெழுகுவர்த்திகளையும் அச்சத்தால் பதறி ஓடியவர்கள் அணைத்துவிட பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் எல்லோரும் இடிபட்டு மிதிபட்டு கட்டிடத்துக்கு வெளியே வந்து விழுபவர்களும்| மைதானத்தை நோக்கி சிதறி

ஓடுபவர்களாகவும் அவதியுறுகின்றனர். வாசலோரமாக படுத்திருந்ததால் உறங்கிக் கொண்டிருந்த பிள்ளைகளை இழுத்து அணைத்தபடி பராமு வெளியே வந்து பாதுகாப்பான இடத்தில் படுத்துக் கொண்டான்.

"சிதறி ஓடாமல் பாதுகாப்பாய் விழுந்து படுங்கோ"

அந்த அவலக் குரல்களின் மத்தியில் பராமு உரத்துக் கத்துகிறான். அச்சத்தால் செய்வதறியாது திகைத்து நின்றவரை பாதுகாப்பான இடங்களில் படுக்க வைக்கிறான்.

மீண்டும் பல ஷெல்கள் தொடர்ந்து வீழ்கின்றன. மீண்டும் அவலக் குரல்கள் உயர்கின்றன சிறிதுநேர அமைதியின் பின் எல்லோரும் எழுந்து இரண்டுமாடிக் கட்டடத்தை நோக்கி ஓடுகின்றனர். அனுமதி கேட்காமலே சனத்திரள் கட்டடத்துக்குள் நுளைந்து நிற்கின்றது. கட்டடத்தின் மேல்மாடியில் இருந்த இளைஞர்கள் காயப்பட்டவருக்கு தம்மாலான மருத்துவ உதவிகளைச் செய்கின்றனர்.

இரவு முழுவதும் எவருமே கால் நீட்டி உறங்க இடமற்றவர்களாக அந்த மழைக்காலக் குளிரிலும் வியர்வை சிந்தியபடி நெருங்கி அமர்ந்திருக்கின்றனர். தொடர்ந்தும் கட்டடத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் குண்டுகள் இடையிடையே விழுந்தபடி இருக்கின்றன.

இடையிடையே சிலர் தம் மன உழைச்சல்களை அக்கம் பக்கம் பார்த்து மிக அவதானமாக தாழ்ந்த குரலில் கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தனர். அதைத் தவிர ஷெல் விழுந்த அமளிக்குள் உறவினரைப் பிரிந்தவர்கள் இருண்ட அறைகள் ஒவ்வொன்றுக்கும் முன்னாலும் நின்று கொண்டு பெயர்களைக் கூப்பிடுவதும் காயமடைந்தவர்களின் முனங்கல்களுமே மிஞ்சி நிற்கிறது.

"மாமி என்ன பாடோ தெரியாது"

தனக்கருகே இருக்கும் பராமுவுக்கு கேட்கக் கூடியதாக மெதுவாக கூறுகிறாள் அவனது மனைவி.

"அந்தப் பக்கம் சத்தங்கள் இப்ப கேக்கேல்லை. உங்களை இந்த நிலைமையிலை விட்டு விட்டு எப்படிப் போறது? விடியப் போய்ப் பாப்பம்"

அவனை சமாதானப் படுத்த இப்படிக் கூறிய போதும் தாயாரின் நிலைக்காக மிக வருந்தினான். வறுமையான சூழலிலும் தன்னை வளர்த்து ஆளாக்கிய தாயாரை தனிமையில் தவிக்க வைத்து விட்டு விட்டு எதுவுமே செய்ய முடியாதவனாய் அஞ்சி ஒடுங்கி கைகட்டி இருக்க வேண்டிய தனது நிலையை நினைத்த போது அவனது கண்களில் கண்ணீர் பனித்தது. அந்த இருளில் விழித்திருக்கும் அகதிகள் தாம் கண்டு வந்த கேள்வியுற்ற சம்பவங்களைத் தமக்குள் பரிமாறிக் கொள்கின்றனர். பங்கருக்குள் வைத்து குடும்பத்தோடு புதைத்த சம்பவங்கள், கற்பழிப்பு தீ, வாள்வெட்டுக்கள் போன்ற கொடுமைகளைப் பற்றிக் கேள்வியுற்ற போது எல்லோருமே அந்த யுத்த நிலைமைகளை தாங்கிப் பழக்கப்படும் ஒரு நிலைக்குத் தள்ளப்படுவதை பரமு உணர்ந்தான். தனது தாயாருக்கு மட்டுமல்ல எந்த உயிருக்குமே உத்தரவாதமில்லாத ஒரு நிலைக்கு முழுமக்களும் தள்ளப்படுவதை அறிந்தான்.

அதிகாலையில் நிலம் வெளித்ததும் வீட்டுக்குப் போய் முகம் கால் சமுவலாம் என்ற முடிவுடன் கட்டிடத்தை விட்டு வெளியே வந்து மனைவி பிள்ளைகளையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டான். எங்கோ படுத்திருந்த அவனது நாயும் ஓடி வந்து வாலை ஆட்டி விட்டு அவனைப் பின் தொடர்ந்தது. தெருவில் சன நடமாட்டம் இல்லாதது அச்சமூட்டுவதாக இருந்தது. எதிரே வந்த ஒரு வயோதிபரும் அடிக்கடி பின்புறம் பார்த்தபடி ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தார்.

" தம்பி தம்பி எங்கை போறியள் "

பரமுவின் சைக்கிளை தூரத்திவரும் பொழுதே கைகாட்டி கத்தி மறிக்கிறார். பதட்டத்துடன் மூச்சிரைக்க நின்ற முதியவர் முன் சைக்கிளை நிறுத்திக் காலூன்றுகிறான் பரமு.

"நாங்கள் வீட்டை போகவேணும் ...... ஏன் பெரியவர் உங்காலை போகேலாதே"

ஐயோ ...... உங்காலை போகேலாது தம்பி ...... தம்பி உங்களை மாதிரி பார்க்கப் போன பெடியனை அங்கை சுட்டுப் போட்டிருக்கு ...... பத்தைகள் எல்லாம் ...... அவங்கள் தான் நிக்கிறாங்கள் தம்பி ...... உதிலை நிக்காமை எங்கையாதில் ஓடித் தப்புங்கோ.

அதே பாபரப்புடன் ...... முதியவர் ...... தனது நடையைத் தொடர்கிறார். பரமு காலையூன்றியபடி எங்கு செல்வது என்று அறியாதவனாக நிற்கிறான்.

"உங்கை போக வேண்டாம் திரும்புங்கோ ......"

"அம்மாவை நினைக்கத்தான் மனவருத்தமாகக் கிடக்கு"
"அவங்கள் ஒண்ணுஞ் செய்யாங்கள்"

"ஓ இதிலை நின்டு என்ன செய்யிறது. பள்ளிக்கூடமும் பாதுகாப்பில்லை. நல்லூருக்குப் போறதெண்டாலும் அவங்களைக் கண்டுதான் போக வேண்டும். வேலணைக்குப் போவம்"

சைக்கிள் வேறு பாதையை நோக்கித் திரும்பி விரைகிறது. பாமுவின் நாயும் இளைக்க இளைக்க பின்னால் ஓடி வருகிறது. சிறிது தூரம் சென்றதும் தெரு நாய்கள் பல அதனைச் சூழ்ந்து கடிக்க அவைகளை விலக்கி விட்டு அது ஓடி வர முயல்கின்றது. அவைகள் விடவில்லை அதைச் சூழ்ந்து கடிக்கின்றன.

அந்தக் காட்சியைக் கண்ட பரமுவின் மனைவி சயிக்கிளில் இருந்தபடியே விக்கி விக்கி அழத் தொடங்கி இது வரை அவள் மனதுக்குள் அடக்கி வைத்திருந்த வேதனைகள் விக்கலும் கண்ணீருமாக வெடித்துச் சிதறுகிறது. குழந்தைகள் ஏதும் அறியாதவர்களாக திகைத்தபடி தாயின் முகத்தைப் பார்க்கின்றனர்.

"ராணி அழாதையும் தெருவிலை நிண்டு ஒப்பாரி வைக்கிறதே? எங்களுக்கு மட்டுமே இது; ஊரோடை ஒத்தது தானே"

பாமு சயிக்கிலை நிப்பாட்டி மற்ற நாய்களிடமிருந்து தனது நாயை மீட்டு வீட்டுக்குச் செல்லும் பாதை வழியாகக் கலைத்து விடுகிறான்.

"வீட்டுக்குப் போச்சுதெண்டா அம்மாவுக்கு உதவியாக இருக்கும். ராணி இப்படியான நேரத்திலை தான் நாங்கள் உறுதியாய் இருக்க வேண்டும் ...... நாங்கள் கலங்கினால் பிள்ளையளும் கலங்கிப் போகும்" கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பரமுவின் மனைவி சைக்கிள் ஏற பயணம் தொடர்கிறது.

"83 பேர் படுகொலை"

அந்தச் சந்தியில் பேப்பர் விற்கும் பையனின் குரல் உரத்துக் கேட்கிறது. நாளாந்தம் பத்திரிகை பார்க்கும் பழக்கமுடைய அவன் அவனுடன் சயிக்கிளில் நின்றபடியே காலைஊன்றி பேப்பரை வாங்கி தலைப்புக்களை பார்த்து விட்டு மடித்து பைக்குள் வைக்கிறான். அவனது நண்பன் அட்டெண்டர் ஆறுமுகத்தின் நினைவு அவனுக்கு வருகிறது.

சந்தி தாண்டியதும் நீண்டு கிடக்கும் மனித நடமாட்டமற்ற அந்தப் பெருவெளியைத் தாண்டியே தோணித்துறைக்குச் செல்ல வேண்டியிருந்தது. கால வரையறையற்ற ஊரடங்குச் சட்டம் இரண்டாவது மாதமாகி அமுலில் இருந்த போதும் "உங்காலை போகலாமே" என்ற கேள்வியை மாறி மாறிக் கேட்டபடி மக்கள் நடமாடிக் கொண்டிருந்தனர். அந்த வெளியிலும் ஓரிருவர் நடமாடிக் கொண்டிருந்தது, பரமுவுக்கு ஆறுதலாக இருந்தது. தெருவிலும் வயலிலும் தெரிந்த டாங்கிகள் நகர்ந்த ஆழமான தடங்கள் அந்தப் பகுதியிலும் இராணுவம் வந்து போயிருப்பதை தெரியப்படுத்தியது.

தூரத்தே தெருவோரத்தில் நாய்கள் தின்று கொண்டிருந்தது மனித உடல்தான் என்பதை கண்டு கொண்டான் அதைத் தாண்டியே அவர்கள் செல்ல வேண்டியிருந்ததால் எப்படிக் குழந்தைகளின் பார்வையைத் திருப்புவது என்ற எண்ணத்துடன் எதிர்ப் பக்கத்தில் இருந்த வயல்வெளியைத் திரும்பிப் பார்த்தான். மாரிமழை நீரின் குளிர்மையுடன் நிமிர்ந்து வளர்ந்த பச்சையினம் நெற் பயிர்கள் கம்பளம் போல காட்சியளிக்கிறது. அதனிடையே அச்சமற்று உலாவும் அழகான வெள்ளைக் கொக்குகள்.

"வித்தி, அங்காய் அதிலை தெரியிறது என்ன பறவை சொல்லு பாப்பம்"

"கொக்கு"

அவன் எதிர்பார்த்ததை விட விரைவாகவே அவனது சிறிய மகன் பதில் சொல்கிறான். அதற்கிடையில் அந்த இடத்தை தாண்டி விட வேண்டுமென்று அவன் நினைத்தான். அது முடியவில்லை.

"இஞ்சை பாருங்கோ"

மனைவியின் திகைத்த குரலோடு குழந்தைகளின் பார்வையும் அங்கு திரும்பி விட்டது.

"சுதந்திரத்தின் பெறுமதியை உணராத நாட்டிலே மனிசற்றை நிலை இது தான்"

அந்தக் காட்சியைக் கண்ட ஆத்திரத்தில் பரமுவின் வாயில் இருந்து வந்த அந்த வார்த்தைகள் காற்றோடு காற்றாக கலக்கின்றன. சைக்கிள் அந்த வெளியில் மௌனத்துடன் விரைகிறது.

"அங்காரப்பா ஹெலி வருகுது"

"நடக்கிறது நடக்கட்டும் பயப்படாமை இரும்"

"இந்த ஹெலி சுடாதப்பா"

பின்புறமாக அவனைக் கட்டி அணைத்தபடி அமர்ந்திருக்கும் அவனதுமகன் கூறிய வார்த்தைகள் கண்டு பிடிப்பல்ல,... சனங்கள் அடிக்கடி கூறக் கேட்டதுதான். ஹெலி வேறு திசையை நோக்கிச் செல்ல அவர்களிடையே எழுந்த பதட்டம் தணிகிறது.

சைக்கிள் துறையை நெருங்குகிறது. தோணிகள் துறையில் கட்டப்பட்டு சன நடமாட்டமின்றி துறை வெறிச்சோடிக் கிடக்கிறது.

அங்காலை போகவா ......? ஹெலிக்காரன் இப்பான் சுட்டுப் போட்டுப் போறான் ...... பொழுது சாய வாங்கோ...... பார்த்துப் போவம்.

ஓலைக் கொட்டிலுக்குள் இருந்து தலையை உள்ளே இழுத்துக் கொள்கிறான். அந்த இடத்தில் நிற்பது பாதுகாப்பில்லை என்பதை அவனது நடத்தையும் பேச்சும் தெளிவு படுத்துகிறது. சற்றுத் தொலைவில் உள்ள கோயிலை நோக்கி அவர்கள் செல்கின்றனர். அவர்களைப் போலவே தோணிக்காகக் காத்திருப்பவர் பலர் அங்கு கூடி நிற்கின்றனர். மதிய வேளை ஆகிவிட்டது; பசி எல்லோருக்கும் பழகி விட்டது. குழந்தைகளுக்காக அருகில் உள்ள கடைகள் எல்லாம் தேடி அலைந்தும் இரண்டு கச்சான் அல்வாத் துண்டுகள் மட்டுமே கிடைத்தது.

அவர்கள் அவற்றை மென்று கொண்டிருக்கும் போதே அங்கு நின்ற இரு சிறுவர்கள் வாசற்படியில் யாரோ பக்தர்கள் வைத்து வணங்கிய செம்பகத்திப் பூக்களை எடுத்துப் பசியினுல் மெல்கின்றனர்.

"ஏய் ...... சாமிக்கு வைச்சதை தொடக் கூடாது ......"

கோயிலுக்குப் பொறுப்பானவர் ...... அவர்களை முதுகில் அடித்து விரட்டியபடி அதட்டுகிருர். அந்தக் குழந்தைகள் அச்சத்துடன் விலகி நின்று பரிதாபமாகப் பார்க்கின்றனர்.

"என்னய்யா ...... இந்த நேரத்தில் இப்படி நிற்கிறியள்"

அந்தக் காட்சியைக் கண்டு மனம் நொந்தவனுக பாமு தான் கேட்கிருன்.

"இல்லைத் தம்பி ...... உதுகள் எப்பவும் இப்படித்தான்"

"உதுகள்" என்ற வார்த்தையில் இருந்த தொனிப் பொருளை பாமு உணர்ந்து கொண்டான். ஒரு பெருமூச்சுடன் அவரது முகத்தைப் பார்க்க விரும்பாதவனுய் மறுபக்கம் திரும்புகிருன்.

மாலை மங்கி இருள் கவிகிறது. அக்கரைக்குச் செல்ல அனைவரும் தோணித் துறைக்குச் செல்கின்றனர். அங்கு அவர்களின் வரவை எதிர்பார்த்திருந்த ஓட்டிகள் ...... இராணுவம் ரோந்து வரக்கூடும் என்று கூறி அவர்களை துரிதப்படுத்தி தோணியில் ஏற்றுகின்றனர். பாமுவும் கைக்கிலை ஓட்டியுடன் சேர்ந்து தூக்கி தோணியில் வழமாக சரித்து வைத்து விட்டு ஏறுகிருன். மறுகரையில் கரிய இருளைத் தவிர ஒரு மின்மினி யின் வெளிச்சம் கூடத் தென்படவில்லை.

"அங்காலை ஹெலி சுட்டு இருபத்தாறு பேர் சரியாம்"

கடைசியாக வந்து ஏறிய பயணி சொல்லிய அந்த செய்தி அனைவரையும் திகைக்க வைக்கிறது.

"மெய்யே தம்பி ...... ஆர் ஆரெண்டு தெரியுமே"

"ஆரெண்டு தெரியாது ...... பெண்புரசுகள் ...... குழந்தை கள் எல்லாம் தான்"

எல்லோரும் தோணியில் வந்து போகும் தத்தமது உறவினர்கள் ஊரவர்களை நினைத்துக் கொள்கின்றனர்.

"ஒரே இருளாக் கிடக்கு எப்படித் துறையிலை ......கொண்டு போய் விடுவாய்"

அந்தக் கரையிலும் சில இடங்களில் ராணுவம் நிலை கொண்டிருந்ததால் அந்தப் பயணிகள் அச்சத்துடன் தான் அப்படிக் கேட்டனர்.

"என்ன பயப்படுகிறியளோ? நீங்க கால் வைச்சு இறங்கிற இடத்தையே அரக்காமல் கொண்டு போய் விடுறனே அந்தா தெரியுது ஒரு பெரிய வெள்ளி. அதையும் அணியத்தையும் நேர்பிடிச்சு நாங்க சரியாக் கொண்டு போய் விடுவம்"

அவர்களின் உரையாடலைக் கேட்ட பாமுவுக்கு கண் முன்னால் காணும் அவலங்களிலும் அடிமைத் தனங்களிலு மிருந்து மக்கள் தம்மை விடுவித்துக் கொள்ள உறுதியான ஒரு தோணியும் விவேகம் உள்ள ஓட்டியும் தேவை என்று அவன் அடிக்கடி கூறுவது ஞாபகம் வந்தது. ஏன் என்று கேட்கும் உணர்வில்லாமல் ஏன் என்று கேட்க எவருமில்லாமல் அவர்கள் ஒதுக்கப்பட்டார்கள்.

ஓட்டி கூறியது போல சிறிதும் பிசகாமல் தோணி துறையை அடைகின்றது. ஹெலியால் சுடப்பட்டு பிரிந்து போய்க் கிடக்கும் படகுகள் அங்கும் இங்கும் கவிழ்ந்து கிடக்கின்றன. இருபத்தாறு உயிர்களின் இரத்தம் காயாத அந்த மண்ணில் ...... அந்த இருளில் இறங்கி அக்கரை செல்கின்றன.

பரமு மனைவியையும் பிள்ளைகளையும் பாதுகாப்பாக அங்கு விட்டு விட்டு தாயாரைப் பார்ப்பதற்காக இரண்டு மூன்று நாட்களாக அலைந்தான். அவனது வீட்டைச் சுற்றி யுள்ள இடங்களிலும் மிக மோசமான தாக்குதல்கள் நிகழ்ந்து கொண்டிருந்தது. மிக ஆபத்தான குறுக்கொழுங்கைகளுக் கூடாகச் சென்றும் ...... அங்கு போக முடியவில்லை. நான்காம் நாள் முகாம்களில் உள்ளவர்கள் வீடு திரும்பலாம் என்று அறி வித்ததுடன் மனைவி பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு வீட்டுக்குச் சென்றான்.

அவன் கேள்வியுற்ற சம்பவங்களிலிருந்து தனது தாயாருக்கும் எதுவும் நடந்திருக்கலாம் என்ற முடிவுக்கு வந்த பாமு தன்னைத் தேற்றிக் கொண்டு வழிவழியே மற்ற இடங்களில் நடந்த சம்பவங்களை மனைவிக்கும் கூறி, அவளையும் தயார்ப்படுத்திக் கொண்டு வந்தான்.

குறிப்பிட்ட தூரத்துக்கப்பால் சைக்கிளை நிறுத்தி விட்டு கைகளை உயர்த்தியபடியே செல்ல வேண்டியிருந்தது. பிள்ளைகள் இருவரையும் ஆளுக்கொருவராக தூக்கியபடி அவசியமான இடங்களில் ஒரு கையை உயர்த்திக் கொண்டு செல்கின்றனர். எங்கு பார்த்தாலும் இராணுவத்தினரின் தலைகளே தெரிகின்றன. அவர்களால் நொருக்கப்பட்ட சைக்கிள்கள் குவிந்து கிடக்கின்றன. தெருவெங்கும் மின்சாரக் கம்பங்களும் இடிந்து கிடக்கும் மதில்களும் ஷெல்களால் சேதமுற்ற வீடுகளும் இடையிடையே அரைகுறையாக எரிக்கப்பட்ட பிரேதங்களின் தசைகளும் எலும்புக் கூடுகளுமே காட்சியளிக்கின்றன. எங்கு சென்றாலும் பிணவாடை மூக்கைத் துளைக்கின்றது.

அவர்கள் அகதிகளாக தங்கியிருந்த பாடசாலையின் இரண்டு மாடிக் கட்டிடம் இடிந்து கிடக்கிறது. பரமு தனது மனைவிக்கு அந்த மைதானத்தை சுட்டிக் காட்டியபடி மெதுவாக ஏதோ சொன்னான். அச்சத்துடன் ஒரு இடுகாட்டை நோக்குவது போல மைதானத்தை அவள் திரும்பிப்பார்த்தாள்

வீடு நெருங்கி விட்டது. மதில்களுக்கு மேலாக தலையை நீட்டிய இராணுவத்தினர் ஏதோ கேட்கின்றனர். தனது வீட்டைப் பார்க்கப் போவதாக பரமு ஆங்கிலத்தில் கூறியதும் தலையை அசைக்கின்றனர்.

சீமேந்தாலான சுவரின் ஒரு பகுதி மட்டுமே எஞ்சி நிற்க வீடே எரிந்து சாம்பலாகக் காட்சியளிக்கிறது.

"ஐயோ, ...... எங்கடை வீடு"

பரமுவின் ...... மனைவி உரக்கக் கத்தியபடி ...... அழுகிறாள். எரிந்து கருகி தாறுமாறாக விழுந்து கிடக்கும் மரந்தடிகளையும் விலக்கி வீட்டின் முன்புறம் செல்கிறான். அவன் அருமையாகச் சேர்த்த புத்தகங்கள் இருந்த அலுமாரி இருந்த இடமே தெரியாமல் ...... சாம்பலாய் கிடக்கிறது. ஆவலுடன் உள் நுழைந்து தாயார் படுத்திருந்த இடத்தைப் பார்க்கிறான். பரமு ......

அரைகுறையாக எரிந்து கருகியபடி மண்டை ஓடும் எலும்புகளும் அங்குமிங்கும் சிதறிக் கிடக்கின்றன.

பாமுவின் கண்கள் ...... ஆத்திரத்தால் அகல விரிய அதில் கண்ணீர் பனித்தது. உடலெங்கும் மயிர்க் கூச்செறிய ஆவேசத்துடன் கேற்றடி மதில் பக்கம் பார்க்கிறுன்.

"ஐயோ மாமியையும் சுட்டெரிச்சுப் போட்டாங்களோ',

பின் தொடர்ந்து வந்த பாமுவின் மனைவி தலையில் கை வைத்து கத்துகிருள்.

"ராணி யுத்த களத்திலே ஒப்பாரி வைச்சுப் பிரயோசனமில்லே. நாங்கள் யுத்தம் செய்யேல்லே, ஆனல் யுத்தத்தை நோக்கி இழுக்கப்படுயம்" பரமு தன் மனைவியைத் தேற்றிக் கொண்டு உறுதியாகச் சொல்கிறுன்.

"அப்பா இஞ்சை எங்கடை நாய் செத்துக் கிடக்கு"

பாதி உருகிப் போய்க் கிடந்த தனது விளையாட்டுத் துப்பாக்கியை தேடி கையில் எடுத்தபடியே பரமுவின் மகன் கத்துகிருன். எல்லோரது முகங்களுந் அங்கு திரும்புகின்றன ......

சுதந்திரத்திற்கு விலையாக எங்கள்
உயிரையே கொடுக்கத் தயாராக உள்ளோம்.

- தலைவர் பிரபாகரன்.



# தரணியிற் தீபம் ஆனாய்

வீணரை எதிர்த்து நின்று
விடுதலைத் தீயில் வெந்து
ஆண்டுகள் ஒன்றைச் சென்ற
ஆருயிர்த் தமிழே திலீபா!

தமிழ் தந்தான் வீதியிலே
தமிழுக்காய் உயிர் தந்தாய்
உனையிழந்த இந் நாளில்
உயிர்த் தமிழ்கள் கதறுதடா!

உரிமையைக் "கோட்டையில்" பேசி
உணர்ச்சியாய்யுரும் பிராயில் பேசி,
நல்லூரில் "நா" நடுங்கப் பேசி,
நாமழ நீ பிரிந்தாயே!

அயல் நாட்டான் தலையீட்டால்,
அரும் தமிழே உனையிழந்தோம்
இதயம் வெடிக்கும் இந்த
இந் நாளும் நன்றோ!

ஓலக்கம் தனில் அமர்ந்து,
ஒப்பந்தம் நரிகள் செய்தே,
அடிமையாய் ஆக்க எண்ண,
அகிம்சையில் போர் தொடுத்தாய்!

காந்தியின் தேசம் நோக்கி;
கலங்கிடும் தமிழைக் காக்க;
அகிம்சையாய் விரதம் பூண்டு;
ஆவியைத் துறந்தாய் நீயே!

காந்தியின் தேசம் என்றார்,
காத்திடும் அகிம்சை என்றார்,
உணவு நீர் ஒறுத்த உந்தன்
உணர்வினை மதித்தார் இல்லை!

உறுதியில் மலையைப் போன்று
உணர்வினை தமிழாய் கொண்டு
தமிழரின் உரிமை காக்க
தரணியிற் தீபம் ஆனாய்!

மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும். அது நிச்சயமாகத் தமிழீழத்தை, எனது இறப்பின் மூலம் பெற்றுத்தரும். இதனை வானத்திலிருந்து இறந்த ஏனைய போராளிகளுடன் சேர்ந்து நானும் பார்த்து மகிழ்வேன்.

- திலீபன்

# விடியலை நோக்கி . . . . . .

வேட்டுக்களின் முழக்கம் சற்று ஒடுங்கி சத்தங்கள் அருகிக் கொண்டிருந்தது. அந்த அதிகாலைப் பொழுதில், மார்கழி மாதத்தின் கடும்குளிர் ஏனோ அந்த அகதி முகாமில் முடங்கிக்கிடக்கும் நெஞ்சங்களை உறைய வைக்கவில்லை. தலைக்கு மேலாக உறுமிக் கொண்டு செல்லும் ஒவ்வொரு "ஷெல்"லும் தங்களைக் கடந்து விட வேண்டும் என்பதே அவர்களின் வேண்டுதலாக இருந்தது. நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அந்த நிகழ்வுகளின் கறைகள் அவர்கள் நெஞ்சை விட்டு இன்னும் அகலவில்லை. தாழமுடியாத இழப்புக்களின் சுமைகளை தாங்கும் வலுவற்று மூலைக்கு மூலை ஒட்டிய வயிற்றுடன் இருக்கும் அப்பாவி மக்களின் ஏக்கப் பெருமூச்சுக்கள் காற்றுடன் கலந்து கொண்டிருந்தது.

மின்சார இணைப்புக்கள் அத்தனையும் துண்டிக்கப்பட்ட நிலையிலும் மத்தியதர வர்க்கத்தினர் வீட்டில் இருந்து ஓடிவரும் போது கையில் அகப்பட்ட "ரான்சிஸ்ரரை" திருகிக் கொண்டிருந்தனர். இந்திய வானொலி தனது முதல் நிகழ்ச்சியான மங்கள வாத்தியத்தோடு அன்றைய நிகழ்ச்சியையும் தொடங்கியது. அக் கரகரத்த வாத்திய இசை அம் முகாமில் பட்டு அவலமாகத் தெறித்துக் கொண்டிருந்தது. அப் பொருத்தமற்ற இசையினைக் கேட்டு உயிரிழப்பையோ உடமையிழப்பையோ எதிர்நோக்காத அதிஸ்ரசாலிகள் சிலர் கடந்த சம்பவங்களையும் அச்சம்பவங்கள் உருவாவதற்கு அடிப்படையாய் இருந்த காரண கர்த்தாக்களையே அவை உருவாவதற்கான சூழ்நிலையையோ சரிவர உணராது அநாவசியமாக தியாக வேங்கைகளைத் தமது வாய்க்கு வந்தவாறு பல்வேறு விதமாக விமர்சித்துக் கொண்டிருந்தனர். பிரச்சனைகளின் தாக்கம் சிறிதேனும் உணரப்படாத அவர்களின் பசப்பு வார்த்தைகள் பலரது நெஞ்சங்களுக்கு பேராத்திரத்தை ஊட்டியது. மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது இருந்தது அவர்களின் நிலை.

முகாமின் வெளியில் காக்கிச் சட்டையணிந்த அவர்களின் சப்பாத்துக்கள் இடையுறாது சரசரத்துக் கொண்டிருந்தது

அர்த்தம் புரியாத பேச்சுக்களும் அவர்களின் விசமத்தனமான
பார்வைகளும் அங்குள்ளோருக்கு வெறுப்பினை ஊட்டிய கு-
ழந்தைகளின் இடையுறாத அழுகை எதிர்காலத்தையே இருளச்
செய்தது. அந்த அதிகாலையில் ஒட்டிய வயிற்றுக்கு ஒரு துளி
நீராயினும் ஊற்ற விடாது சோதனை செய்வதற்காக வந்து குழுமிக்
கொண்டிருந்தனர் அந்நிய ராணுவத்தினர். பல்வேறு
மொழியிலான அவர்களது பேச்சுக்கள் எவருக்கும் உணர்த்தாது
வெறுமனே காற்றோடு கலந்து கொண்டிருந்தது. இளவயதானவர்
கள் மட்டுமன்றி வயோதிபர் கூட வந்தவர்களுக்குப் புரியாத
அந்த அடையாள அட்டையைக் கையில் ஏந்திய வண்ணம்
அலைந்து கொண்டிருந்தனர். முகாமை அண்டி பெருத்த சத்
தத்துடன் அதிர்ந்து சென்று கொண்டிருந்த சங்கிலித் தொடர்
வாகனங்களின் இரைச்சல் முகாமை உலுப்பியெடுத்தது. முகா
மில் அத்தனை பேரும் ஐயோ! ஐயோ! என்று அபயக்குரலெழுப்
பினர் முதல்நாள் பிரம்படி லேனில் அதே தாங்கி இயந்திரம்
பல அப்பாவி மக்களையும் வீடுகளையும் நெரித்துப் பலியெடுத்த
அந்த சம்பவம் பற்றிய அந்த செய்தி முகாமிலும் பரவி
இருந்தது. எனவே அவர்கள் கத்தியமைக்கு நியாயம் இருக்
கத்தான் செய்தது. அந்த இராட்சத வாகனம் முகாமைக்
கடந்தவுடன் இயமனின் வாயில் விழப்போய் ஏதோ தற்செ
யலாய் நிலத்தில் விழுதல் போன்ற ஓர் உணர்வினை அனுபவித்து
மீண்டனர். கூக்குரல்கள் ஓரளவு ஓய்ந்த அந்தக் காலைப்
பொழுதில் பார்வதிக்கிழவி மாத்திரம் ஓயாமல் புலம்பிக் கொண்
டிருந்தாள். அவளின் கணவன் கந்தப்புக் கிழவன் கடும்
தொய்வு காரணமாக விரிப்பதற்கு ஒரு துணியேனும் இல்லாத
அந்த குளிர்ந்த வெற்று நிலத்தில் சேடம் இழுத்துக் கொண்
டிருந்தார். தந்தையின் இறப்புக் கோலத்தைக் கண்டு களத்
திலே அண்ணனை இழக்கக் கொடுத்ததோடு தாயாவது தங்
களுக்கு மிஞ்சவேண்டுமென்ற அற்ப ஆசையோடு தங்களைத்
தாங்கள் கட்டுப்படுத்த முயன்று தோற்றுத் தாயைச் சமா
தானப் படுத்திக் கொண்டிருந்தனர் வயதுக்கு வந்த அவர்
மூன்று குமருகளும்.

அந்நேரம் காக்கி உடையணிந்த அந்நிய நாட்டுச்
சிப்பாய்கள் அவர்களை நெருங்கி ஏதேதோ கட்டளையிட்டனர்.
எஞ்சிய அவளுடைய மூன்று குழந்தைகளும் நிலை தடுமாறின
அவர்களின் காமகாந்தப் பார்வைக்கு ஈடுகொடுக்க முடியாது
இறக்கும் தறுவாயில் இருக்கும் தந்தையிடம் அடைக்கலப்

ஆனால் அவர்களைக் கண்ட பார்வதிக் கிழவியோ சீறும் சிங்க மானாள். தனது வாய்க்கு வந்தவாறு, ஈழத் தமிழரின் பாதுகாப்புக்கு பாத்திரமானவர்கள் என்று சொல்லிக் கொண்டு வந்து அமைதிக்கு உலைவைத்த அமைதிப்படையைப் பொரிந்து தள்ளினாள். பாஷை புரியாது என்ற நம்பிக்கையில் அவள் அப்படிச் செய்யவில்லை பாஷை தெரிந்திருந்தால்கூட அவள் அப்படித்தான் செய்திருப்பாள். ஏனெனில் அவளுக்கு அவளுடைய மகனின் இழப்புக்குப் பின்பு வாழ்வே வெறுத்திருந்தது. அவளைப்போலவே எண்ணுக்கணக்கற்று கிடந்த அகதி முகாங்களில் மகன்மாரைக் பலி கொடுத்த வயோதிபத் தாய்மார்களின் நிலையும் இருந்தது.

சிறிதுநேர இடைவெளிக்குப் பின்னர் அங்கு வந்த காக்கியுடையினர் தங்களுடைய உண்மையான சொரூபம் குழந்தைகளுக்கு தெரிந்து விடக்கூடாது என்று அஞ்சி கடைகளில் உடைத்து எடுத்த மிட்டாய்களை குழந்தைகளுக்கு விநியோகம் செய்து கொண்டிருந்தனர். ஆனால் சில குழந்தைகள் உணர்ந்தோ உணராமலோ அவற்றை வாங்க மறுத்து வீரிட்டுக் கத்திக் கொண்டிருந்தனர்.

நேரம் நண்பகலாகியும் பெரும்பாலான வயிறுகள் வெறுமையாகவே இருந்தது செல்வந்தர்கள் ஏதோ வழி செய்து "பிஸ்கற்" றுக்களை கடித்துக் கொண்டிருந்தனர். பசியின் அகோரத்தாலோ பகலே இரவுபோல ஒளியற்றுக் கிடந்தமையாலோ அங்குள்ள பலர் படுத்து கண்களை மூடியே இருந்தனர். கண்களை மூடியிருந்தனரே தவிர நித்திரை செய்தனர் என்று சொல்ல முடியவில்லை. மீண்டும் வேட்டுக்கள் அதிர்ந்தன சற்று நேரத்தின் பின்புதான் உணரக்கூடியதாய் இருந்தது அவை வானில் இருந்து வீழ்ந்த வேட்டுக்கள் என்பது மிகவும் தாழப்பறந்து கொண்டிருந்தது அந்நிய நாட்டு "ஹெலி கொப்ரர்" காரணம் இல்லாமல் வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருந்தது முகாமில் இருந்த மக்கள் பெரிதாய் பதற்றப்படவில்லை. ஏனெனில் இந்த ஒலியிலும்விட அகோரமான பலவற்றை அவர்கள் கேட்டுச் சலித்தவர்கள். சற்று நேரத்தின் பின்புதான் காரணம் புரிந்தது ராணுவத்தினரின் யாரோ பெரியவர் அவ் வீதிவழியாகப் பவனி வருகிறார் என்பது. வீதியில் சனநடமாட்டம் இல்லாமையினால் அவர்கள் அவசியமற்ற அந்த வேட்டுக்கள் யாருக்கும் எதுவும் செய்யவில்லை.

சற்று நேரத்துக்குப் பின்பு பாரிய சத்தத்துடன் ஒரு ஷெல் முகாமைக் கடந்து வீழ்ந்து வெடித்தது தொடர்ந்து அடித்த கைப்பழக்கத்தில் அது அடித்திருக்கலாம் என்று மக்கள் தங்களுள் பேசிக் கொண்டனர். இன்னமும்கூட அதே வானொலி "நேசக்கரங்களை" தீட்டிக் கொண்டிருந்தது இன்னமும் பார்வதிக்கிழவி புலம்பிக் கொண்டே இருக்கிருள்.

அர்த்தமில்லாதவாறு யாருக்காகவோ விடிந்த பொழுது தோற்றுப்போய் மங்கிக் கொண்டிருந்தது. நேரகாலம் தெரியாத முற்றுகை நடப்பது சகயமாகி விட்ட அந்த நாட்களில் வழமைப்படி சோதனை இடுவதற்காக அந்த நேரத்தில் முற்றுகையிட்டனர். பின்பு பதினைந்து வயதுக்கும் நாற்பது வயதுக்குமிடையிலான அனைவரையும் முகாமுக்கு முன்னிருந்த வளவுக்குள் இருத்தி வைத்தனர் நேற்றைய தினம் பெய்த மழையின் ஈரம் இன்னும் காயவில்லை. அருகிலே மனிதரின் பிணங்களும் அதை தின்னக்கூட நாதி அற்றுக் கிடக்கும் நாய்களின் சடலமும் வித்தியாசமின்றிக் கிடந்தன.

அனைவரும் இருள் மண்டியிருந்த வானத்தையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தனர். திடீரென அந்த வானில் தோன்றிய மின்னல் அவர்களுக்கு ஏதோ ஒரு நம்பிக்கையினை ஊட்டியிருக்க வேண்டும். அவர்கள் நாளை விடியப்போகும் பொழுதை எண்ணி விழித்தே இருக்கின்றனர்.

*மரணம் ஒரு தடவைதான் வரும். அதற்காக மானத்தை விற்றுச் சீவிக்க முடியுமா? இறப்புக்குப் பயந்து இனத்தை அழியவிட முடியுமா?*

-திலீபன்



நான் ஆத்ம ரீதியாக உணர்கிறேன். இன்றில்லாவிட்டாலும் என்றே ஒருநாள் எனது மக்கள் நிச்சயம் விடுதலை அடைவார்கள்.

## தீர்க்கதரிசி திலீபன்

நெஞ்சுக்கு நெருக்கமான நண்பனே!
நீ
பூவிரிந்தது போலச் சிரித்ததும்
போர் முகத்திலே போய்த் திரிந்ததும்
சாவிழுங்கிய சரித்திரம் ஆகுமோ?
சந்தம் வழிந்த கவிதை கிழியுமோ?

உன்னுடன் பேசிக் களித்த நாட்களும்
உன் புகழ்பெற்ற "கோட்டை வாசல்" பேச்சும்
நீ அமரனுன "நல்லூரின் வீதி"யும்
எல்லாம் நினைவில் இருக்கிறது
ஆனால் ...... அதன் பிறகு?
சுதந்திர வீணையின் நரம்புகள் அறுந்தன
அந்நியக் காற்றிலே ...... தீபங்கள் அவித்தன
காட்டெருமை எங்கள் கடப்புக்குள் மேய்கிறது
வீட்டுக்குக் காவலென விட்ட நாய் கடிக்கிறது.

நீ சொன்ன சாத்திரங்கள் இப்போது,
சபை யேறு கின்றன
திலீபனே! நீ தீர்க்க தரிசியே தான்
வேறு பெயரில் வேறு உருவில்
மீண்டும் உன்னை எதிர் பார்க்கும்.

— நண்பர்கள்.

---

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை சிங்கள இனவாதப் பூதம் விழுங்கும் போது, இந்தியா எமது நிலைப்பாட்டை ஆதரிக்க வேண்டி ஏற்படும்.

— தலைவர் வே. பிரபாகரன்

---

★

# உன்னைப் பார்த்து இந்த உலகம் சிரிக்கின்றது.

திலீபன்!
ஆம், வெற்றித் தேவதையின் வீர மைந்தன்
திலீபன் இந்த 20-ம் நூற்றாண்டின் அகிம்சாமூர்த்தி
திலீபன்! மறைந்தும் தமிழ் மக்கள் நெஞ்சமெல்லாம் இன்றும்
வாழ்ந்து கொண்டிருக்கும் வீரத் திருமகன்
இந்த வெற்றித் திருமகனின் வீரத்தையும், துணிவையும்,
அகிம்சையையும்
உலகில் எங்குமே காணமுடியாது தன் இனத்திற்காக
மொழிக்காக
மண்ணுக்காக நீர், ஆகாரம் எதுவுமின்றி உயிர்நீத்த உலகின்
முதல் மகன், மூத்த மகன்.

தமிழுக்காக சிறை சென்றவர் ஆயிரம், ஆயிரம்
தமிழுக்காக உதிரம் கொட்டி போராடியவர் ஆயிரம், ஆயிரம்
தமிழுக்காக உயிர் கொடுத்தோர் ஆயிரம், ஆயிரம்
இவையெல்லாம் வரலாற்றில் வழமையான வரலாறு
ஆனல் கழுத்தில் நஞ்சோடு, நெஞ்சத் துணிவோடு, சாவை
எதிர் நோக்கி
போராடும் வீரப் புலிகள் வரலாறு பண்டைய தமிழன் சரித்
திரத்தில் இல்லை
புற நானூற்றில் இல்லை
விழித்தகண் வேல்கொண்டெறிய அழித்திமைப்பின் ஒட்டன்றோ
வன் கணவர்க்கு என்று உறிய திருக்குறளில் இல்லை
புலிகளின் வீரம், புலிகளின் போர், புலிகளின் கொள்கை
இவை தனிச் சரித்திரம், தனி முத்திரை
புலிகள் என்றல் வீரம், போர் என்றல் புலிகள்
தமிழரின் வரலாற்றில், காவியத்தில் ஒரு தனி ஏடு புதிய
அத்தியாயம்
எங்கே அசைக்க முடியாத துணிவும் வீரமும் இருக்கின்றதோ
அங்கே அகிம்சையும், அமைதியும் பிறக்கின்றது

ஒரு வீரன் அன்று சொன்னான் எங்களுக்கு வாள் பிடித்து
சண்டை போடவும் தெரியும், கலப்பை எடுத்து உழவும்
தெரியும் என்று

அதைப் போல புலிகளுக்கு துப்பாக்கி பிடித்து சண்டை
போடவும் தெரியும்

துப்பாக்கியை கீழே வைத்து அகிம்சையாக போராடவும்
தெரியும்

இதே வழியில் தான் மாபெரும் தியாகத்தை திலீபன் செய்தான்
ஈழத் திருநாட்டின் தாய்குலத்தின் ரத்தம் கண்ணீராய் ஓட
வீரமுடன் போராடிய புலிகள் அமைதியாய் சோகமாய்
சூழ்ந்திருக்க

இந்த உலகமே விழித்திருக்க, எம்மை காக்க வந்த
அமைதிப்படை

எம்மை புறக்கணிக்க அந்த இளம் வீரனின் விலைமதிப்பற்ற
உயிர் அணு, அணுவாக பிரிந்ததே, என்ன கொடுமை, என்ன
அநியாயம்

கால் ஒடிந்த ஆட்டுக்கா கண்ணீர் விட்ட புத்தர் பிறந்தநாடாம்
அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாடாம்,
உடன் கட்டை ஏறினால், மரண தண்டனையாம் அன்னை பாரத
மாதாவின்

நீதிமன்றத்தில், இங்கே ஈழத்தில் ஒரு உயிர் அணு அணுவா
பிரிந்ததே, அதைத் தடுத்ததா உங்கள் சட்டம்?
அதைத் தடுத்ததா உங்கள் அகிம்சைக் கொள்கை?
அதைத் தடுத்ததா உங்கள் அமைதிப்படை, எங்கே உங்கள்
கருணை

எங்கே உங்கள் நீதி அங்கு ஒரு நீதி, இங்கு ஒரு நீதியா?
சட்டம் காக்கப் போட்ட வேலி பயிரைத் தின்பதா? இதுமட்டுமா
இந்த தியாக சிற்பியின் வரலாறு ஏன் மூடிமறைக்கப்பட்டது
நாம் சிறுபான்மையினர் என்பதாலா? இல்லை உங்கள் நாடகம்
அம்பலத்திற்கு வந்து விடும் என்பதாலா?
நாங்கள் உங்களிடம் கேட்பது பொன்னையல்ல, பொருளையல்ல
உணவையல்ல

எமது மண்ணை, எமது மொழியை, எமது இனத்தின் சுதந்
திரத்தை

உலகத்தார் கண்களில் மண்ணைத் தூவி எமக்கு சுதந்திரம்
வழங்கி

இருக்கிறீர்கள், எப்படி? எப்படியான சுதந்திரம் கூண்டைத் திறந்து
கிளியை வெளியே விட்டு உலகத்திற்கு காட்டி அதே நேரத்தில்
ரகசியமாக கிளியின் இறக்கை இரண்டையும் வெட்டி நீ பறந்து
போ, இதுவா நீங்கள் தந்த சுதந்திரம்? இதுவா சுதந்திரம் இல்லை

இது நீங்கள் செய்த தந்திரம்
தாயகத்தின் சுதந்திரமே எங்கள் கொள்கை
தன்மானம் ஒன்றேதான் எங்கள் செல்வம்
ஒற்றுமையோடு பகைவர்களை ஓட வைப்போம்
எங்கெல்லாம் தமிழ் மக்கள் வாழ்கின்றார்களோ,
எங்கெல்லாம் தமிழ் மொழி பேசப்படுகின்றதோ
எங்கெல்லாம் அடிமை விலங்கொடிக்க துப்பாக்கி ஏந்தி போராடுகின்றார்களோ,
அங்கெல்லாம் இந்த திலீபன் இருப்பான் அவர்கள்
சுதந்திர உணர்வில்' உயிரில்
இந்த திலீபன் கலந்திருப்பான் ......
அவன் வரலாற்றை மறைக்க முடியாது இன்றும் இதோ எங்கள் திலீபனின்
வீரமாமுகம் தெரியுதே அது வெற்றிச் சிந்து பாடுதே
தோன்றத்தான் போகின்றது ஈழத் தமிழரின் தனி உரிமைச் சமுதாயம்
மறையத்தான் போகின்றது தனி மனிதன் ஆதிக்கம்
மலரத்தான் போகின்றது ஈழத்தமிழரின் புது வாழ்வு
இதோ. அண்ணல் காந்தியும், அன்னை இந்திராவும், உம் பாட்டனார் நேருவும்
உன்னைப் பார்த்து சிரிக்கின்றார்கள் ஏன் இந்த அகில உலகமே
உன்னைப் பார்த்துச் சிரிக்கின்றது.

திலீபன் திருநாமம் வாழ்க.

கோட்டையிலே நமது கொடி பறந்திட வேண்டும்
கொள்கை வீரர் தியாகங்களை ஏற்றிட வேண்டும்.

# மழை மேகம்

செங்கதிர்ப் பரிதிவட்டம் கிழக்கு வானில் மெல்ல மெல்ல மேலெழுந்து கொண்டிருந்தது. எம்மண்ணில் ஓடிய குருதி வெள்ளத்தை நினைவூட்டுவதாக அதன் செவ்வொளி தமிழீழ மண்ணில் செம்மை பரப்பிக் கொண்டிருந்தது. பறவை இனங்களின் விடியல் கீதம் முன்னரைப்போல் பூபாளம் இசைக்கவில்லை. முகாரியாய் மெல்லவே ஒலித்தது. சோர்வாகக் காற்று வீசியது. தூரத்தேயிருந்து அம்மன் ஆலயமணி துல்லியமாக ஒலித்தது.

" நல்லா விடிஞ்சுட்டுது " என்ற வண்ணம் இராசையா வாத்தியார் அவசர அவசரமாக எழுந்தார்.

மனைவி நாகம்மா ஒன்பதே மாதமுடைய பேரன் சீலனை அணைத்தபடி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். சீலன் வாயில் பால்ப் போச்சியொன்று இருந்தது. " ம்...... " என்ற பச்சாதாபம் கலந்த பெருமூச்சுடன் வாத்தியார் திரும்ப அசுமாத்தம் உணர்ந்து விழித்த நாகம்மா தன்னை வாஞ்சையுடன் பற்றியிருந்த பேரனின் கையை மெதுவாக அகற்றி விட்டு பரபரப்பாக எழுந்தாள். இனி அவள் ஒரு தொழிற்சாலை இயந்திரம் தான்.

வாத்தியார் காலைக்கடன்களை முடித்துவிட்டுப் பூரண ஆசார சீலராக நெற்றியில் திருநீறு துலங்க திண்ணைக்கு வரும்போது அவரை முந்திக்கொண்டு தேனீர் திண்ணைக்கு வந்தது.

" போற இடத்துக்குப் பார்த்துப் போங்கோ " என்று நாகம்மா அவரை எச்சரிக்கும் போது தெருநாய்கள் சேர்ந்து வித்தியாசமாகக் குலைத்தன. " ம்...... வாறுங்கள் போலை " என்றவாறு வாத்தியார் ஒழுங்கையைப் பார்த்தார்.

வேலிக்கு மேலாகச் சட்டியைக் கவிழ்த்தாற்போல் இரும்புத் தொப்பியும் வேலிக்குக் கீழ் இடைவெளியால் கறுப்பும் பச்சையுமாகச் சப்பாத்துகள் வரிசையாகச் சென்றன.

" எப்பத்தான் இவங்கள் துலையப் போறுங்களோ? " என்று முணுமுணுத்தபடி வாத்தியார் முற்றத்தில் இறங்கினுர். " நல்லாப் போனுங்கள் இவ்வளவு சுகம் கணடவங்கள் போவாங்களே? " என்றுள் நாகம்மா.

இராசையா வாத்தியார் மனைவியை ஒருமுறை வாஞ்சையுடன் பார்த்தார். காலம் அவள் உடலில் எழுதிய கோலங்களை விட அங்கு நடந்த அசம்பாவிதங்கள் சிந்தனையிட்ட ஓவியங்கள் அதிகம். மெலிந்த உருவம் வாத்தியாரை விட ஆறுவயது குறைவான போதிலும் வயது அதிகமானது போன்ற தோற்றம். முகத்தில் வைராக்கியத்தின் உறுதி. அத்துடன் எதையோ இழந்த சோகம். இழப்புகளையும் கொடுமைகளையும் அநுபவித்து வற்றிப்போன நெஞ்சங்கள் தான் இன்று அவர்களது சொத்தாகும்.

தேநீரை அருந்திவிட்டு வேகமாக ஒழுங்கையில் இறங்கி நடந்தார் வாத்தியார். எமது வீதிகளில் உறைந்து உலர்ந்த செங்குருதிகளின் வடுக்கள் பிணமாகி நிணம் வடியக் கிடந்த மனிதக்கோலங்கள் அவர் நினைவுகளில் படம் போட்டன.

அவர்களது நாட்டின் எல்லைப்புறத்தில் மனித நடமாட்டமில்லாப் பிரதேசங்களில் காய்ந்து காத்திருந்த வல்லரசின் வீரர்கள் இங்கே பொடியளின் தற்பாதுகாப்புப் போரில் தடுமாறியதும் மீறி முன்னேற முயன்று பரலோகம் பறந்ததும் அந்த வெம்பிரசாரத்தில் அப்பாவி மக்கள் மீது பலம் பொருந்திய இராணுவமொன்றின் மீது முழுப்பலம் பிரயோகித்து போரிடுவது போல் போர்தொடுத்து அழிந்து ஒழிந்ததும் என்றும் எம்மண்ணில் வரலாற்றுக் காவியம், மறையாத கல்வெட்டோவியம்.

வாத்தியார் வெகுவேகமாகத் தன் கால்களை எட்டி நடைபோட்டார். தெருத்திருப்பத்தில் திரும்பியபோது ...... சிலயார் தூரத்தில் இந்திய இராணுவத்தின் அந்த முகாம் அவரது கண்ணில் பட்டது. சற்றும் வேகத்தைத் தணிக்காமல் அந்த முகாமை நோக்கி நடந்தார் வாத்தியார்.

வாசலில் நின்ற சென்றி அவரை மறித்துச் சோதனையிட்டான்· தனது பாஷையில் ஏதோ கேட்க வாத்தியார் பாஷை விளங்காமல் தடுமாறினுர்.

அவரது நிலைகண்டு தமிழ்ச்சிப்பாய் ஒருவனை அந்த இராணுவ சிப்பாய் அழைத்துச் சொல்ல அவன் மொழி பெயர்த்தான்

" என்ன சார் வந்த வேலை "

" மேஜர் ஐயாவைப் பார்க்க வந்தனான் " வாத்தியார் கூறினர்.

" ஏர்லி மோனிங் வந்திட்டீங்க மேஜர் வெளியே வரக் கொஞ்சம் சுணங்கும் அந்த பெஞ்சிலே உட்காருங்க " என்று முற்றத்தில் கிடந்த வாங்கொன்றைக் காட்டினன் அவன்.

இராசையா வாத்தியார் ஒரு பெருமூச்சுடன் தனது சால்வையால் வாங்கைத் தட்டியபின் உட்கார்ந்தார் தன்னைச் சுற்றி ஒருமுறை பார்த்தார்.

முன்னர் அப்பிரதேச மக்களுக்குச் சேவை செய்த சன சமூக நிலையம் இன்று கொடியவர் கூடாரம். எங்குபார்த்தாலும் புரியாத கரடு முரடான பாஷைகளும் அதற்கேற்ற உருவங்களும்.

' எல். ரி. ரி. ஈ. ? " அருகில் வந்த இராணுவத்தினன் ஒருவன் அவரைப் பார்த்துக் கேலியாகக் கேட்ட கேள்வி அது.

அவனுக்கு எதுவுமே கூற விரும்பாமல் தலையைக் குனிந்தார் வாத்தியார்.

ஏன்...... ஏன் இந்தநிலை? எதற்காக இப்படி அவனுக்கு தலை குனிய வேண்டும் அவரது மனம் வேதனைப்பட்டது.

" எனது மண்ணில் எனது உரிமை நாட்டில் நான் எதற்கு அந்நியனுக்கு அடங்கித் தலைகுனிய வேண்டும் " வேதனை தாளாமல் அதன் வெப்ப வியர்வையைத் தனது சால்வையால் ஒற்றிக் கொண்டார்.

அவர் மனதில் பழைய நினைவுகள் அலையலையாக திரைப் படம் போல் கிளம்பியது.

சுசீலா இராசையா வாத்தியார் மகள்.

தமிழ் மகளின் அடக்கம், அழகு, அறிவு சுதந்திரதாகம் கொண்ட ஒரு பூரணப் படுத்தப்பட்ட பெண். அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்துக் குரலெழுப்பத் துணிந்த புதுமைப் பெண்.

தமது ஒரே மகளுக்கு அவளின் தகுதிக்கேற்ப கணவனைத் தேர்ந்தெடுத்து மணமுடித்து வைத்தனர் பெற்ரோர்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த அந்தக் குடும்ப வாழ்வின் இனிய சின்னமாக வந்துதித்தான் சீலன்.

சீலன்...... மீசாலையில் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த போராளியின் நினைவாகக் குழந்தைக்கு அவளிட்ட பெயர்.

"விடுதலை என்பது சுயநலமேடையிலும் சுகபோக மாடியிலும் பிறப்பதல்ல" என்ற கருத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவன் சுசீலாவின் கணவன் கணேசன்.

வாய்வீச்சு மேடைப்பேச்சுப் பேசும் சிலர் சொல்வது போல் " நாங்களும் இறங்கிடுவம் என்னசெய்வது குடும்பகாரர் " என்ற வாய்ப்பாட்டில் பூரண வெறுப்புக் கொண்ட தம்பதிகள் அவர்கள்.

சாடைமாடையாக இதையறிந்த வாத்தியார் ஒருநாள் " தம்பி, என்னென்னவோ விசயம் எல்லாம் கேள்விப்படுறன் " என்று ஆரம்பித்தார்.

"என்ன மாமா?" என்று கேட்டான் கணேசன்.

" இந்த இயக்கத்தோடை கொஞ்சம் பழகுறீங்கள் போலை " கணேசன் மௌனம் சாதித்தான்.

' நீங்கள் குடும்பக்காரன் ஒரு பிள்ளைக்குத் தகப்பனுகப் போறீங்கள் இந்த வடமராட்சியெல்லாம் பிடிச்சுப் போட்டாங்களாம் உந்தக் கரைச்சல் எல்லாம் வேண்டாம் பேசாமல் விட்டிடுங்கோ " என்ருர் வாத்தியார்.

கணேசன் வாத்தியாரை தீர்க்கமாக ஏறிட்டுப் பார்த்தான்.

" மாமா சொல்லிறனெண்டு கோவியாதையுங்கோ இப்பிடிச் சாட்டுச் சொல்லி விலகினல் நாங்கள் எப்ப எங்கட மண்ணிலை மனிசராத் திரியிறது. இண்டைக்கு நான்படுகிற கஷ்டத்தை நாளைக்கு என்ரை மகன் படக்கூடாது தலைநிமிர்ந்து தன்ரை நாட்டிலை தன்மானத்தோடு வாழவேணும் "

இராசையா வாத்தியார் வியப்போடு மருமகனைப் பார்த்தார்.

கணேசன் தொடர்ந்தான்.

" மாமா எதிரியின் துவக்கும் மற்ற ஆயுதங்களும் எங்கட குடும்பக்காரரை விலத்திவிட்டு வெடிக்கிறதில்லை எல்லாரையும் தான் கொல்லுது. குண்டுபட்டு சும்மா சாகிறதைவிட விடுதலைப் போராட்டத்திலை என்ரை பங்களிப்பைச் செலுத்தி சாகிறதிலை நான் பெருமைப்படுவன். இந்தப் போராட்டத்தின் சுமை என்ரை பிள்ளையின்ரை தலையிலை ஏறுமல் இருக்க வேணுமெண்டால் நான் என்ரை இலட்சியத்திலை இருந்து இறங்காமலிருக்க வேணும் " ஒரு வேகத்தோடு சொல்லி முடித்த மருமகனை இப்போது ஒரு புதியகோணத்தில் பார்த்தார் வாத்தியார்.

அங்கு மருமகன் கணேசனில்லை நந்தைக்கு உபதேசித்த கந்தன் தான் அவர் கண்களுக்குத் தெரிந்தது. புதிய அர்த்தத்தைப் புரிந்து கொண்ட வாத்தியார் மெருமிதத்துடன் விடைபெற்றுக் கொண்டார்.

இந்தியத் தலையீடு ...... ஒப்பந்தம் ...... இந்திய இராணுவத்தின் வருகை...... மக்கள் போராட்டம் எனக் காலம் வெகு வேகமாக உருண்டது. அது யாருக்காகவும் காத்திருக்கவில்லை

இந்த நேரத்தில் தான் ஒரு தியாகியின் உண்ணவிரதப் போராட்டம் தமிழீழ வரலாற்றின் புதிய அத்தியாயத்தை எழுதிய சாத்வீகப் போராட்டம் ஆரம்பமாகிறது.

தமிழீழமெங்கும் ஒரே புரட்சி அலை நீர்கூட அருந்தாமல் தனது இளமை மீட்கும் இனிய கீதங்களை மறந்து சுய நலம் துறந்து 40 இலட்சம் மக்களின் விடிவுக்காக நிரந்தர ஒளிக்காக ஒரு தீலீபம் தன்னையே உருக்கிக் கொண்டிருந்தது

வேலியோரம் மதில் மறைவுகளில் யன்னலூடாக வேடிக்கை பார்த்த மக்களை வீதிக்கு இறக்கி விடிவு நோக்கி விடுதலைப் பாதையில் வீறு கொண்டு நடக்க வைத்த தியாகப் போராட்டம் ......

எங்கும் வேகம், எதிலும் வேகம், எவரிலும் வேகம் ......

அகிம்சையை காந்தீயத்தை உலகுக்கு அறிமுகப்படுத்திய இந்திய நாட்டினது அரசிடம் நீதி வேண்டி மெழுகுவர்த்தியொன்று எரிந்துருகிக் கொண்டிருந்தது.

காந்தியின் போராட்டத்துக்கு புதிய வடிவம் கொடுத்து மகாத்மாவுக்கே பாடம் சொன்னது அந்த தீபம்.

ஆயுதமின்றி இரத்தமின்றிப் போராடும் வடிவத்துக்கு ஆயுதமேந்திப் போராடிய போராளி ஒருவன் புதிய பரிணமத்தைக் கொண்டிருந்தான். காந்தியை மறந்த தேசம் அதை அலட்சியப்படுத்தியது அவமானப் படுத்தியது. திலீபம் அணைந்தது.

நாற்பது இலட்சம் மக்களுக்காகத் தன்னைத் துறந்து
தீபம் அணைந்தது

எல்லோர் மனத்திலும் கொந்தளிப்பு
புதிய வேகம்

இந்திய அரசின் பாராமுகப் போக்கின் மீது ஆத்திரம் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த வேளையில் ......

12 போராளிகளின் தியாக மரணம்.

மேலும் தமிழ் மக்களுக்கெதிராக யுத்தமொன்றை வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மீதான தாக்குதல் நடத்தியதன் மூலம் பிரகடனப்படுத்தியது இந்திய அரசு.

அந்த அடக்கு முறைக்கெதிராக ஆயுதம் ஏந்தியது மக்கள் சக்தி. அதிலே கணேசனும் ஒருவன். போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அடக்கு முறைக்கெதிராக ஆவேசத்துடன் போராடினான்.

இந்திய தமிழீழ மண்ணை அநியாயமாக யுத்தம் மூலம் ஆக்கிரமித்துக் கொண்டது. தலைமறைவான போராளிகளில் கணேசனும் ஒருவன்.

ஒரு நாள் ......

தன் மனைவியையும் குழந்தையையும் பார்க்க ஆவலோடு ஒளிந்து வந்திருந்தான் கணேசன்.

கண்ணீருடன் தன் கணவனுக்கு உணவு பரிமாறினாள் சுசீலா

அழுது கொண்டிருந்த குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருக்கும் போது துரோகி ஒருவனின் தகவலொன்றினால் கணேசனின் வீடு சுற்றி வளைக்கப்பட்டது. திடீரென உள்ளே நுழைந்த சிப்பாய்கள் பால் குடித்துக் கொண்டிருந்த குழந்தையைப் பறித்தெடுக்க கணேசன் ஆவேசம் கொண்டு அவர்கள் மேல் பாய அவர்களின் துப்பாக்கிகள் முழங்க துப்பாக்கிக் குண்டுகளால் கணேசன் துளைக்கப்பட்டுப் பிணமாகச் சாய்ந்தான்.

சுசீலா கதறினாள்.

அவளின் அழகு அந்தப் பாதகர்களைக் கவர வெறியுடன் அவளை நெருங்கி கதறக் கதற,

வீரத்தாயின் கற்புமலர் காமுகர்களினால் குதறியெறியப்பட்டது. ஆயிற்று ...... கணேசனின் பிணத்துடன் சிப்பாய்கள் போய்விட்டனர். அயலவர் அங்கு சென்றபோது அந்தக் குழந்தை நடந்த விபரீதம் புரியாமல் மயங்கிக் கிடக்கும் தாயின் மிகுதிப் பாலைக் குடிக்கக் கத்தியது.

அயலவர்களால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சுசீலா, ஆபத்தான கட்டம் தாண்டி உணர்வு வந்த போது அழுதாள், அரற்றினாள், ஆனால் ...... சாவதற்கு மட்டும் அவள் நினைக்கவில்லை.

இந்த நிலைக்குக் காரண கர்த்தாக்களைப் பழிவாங்க வேண்டும். தியாகங்களுக்கும் இழப்புகளுக்கும் பரிகாரம் கோழைத்தனமான தற்கொலையல்ல. பூரணப்படுத்தப்பட்ட விடுதலை. அவள் திடசங்கற்பம் பூண்டாள்.

பூரண சுகமடைந்து வீட்டுக்கு வந்த சுசீலா போராளிகளின் செயற்பாட்டிற்குதவினுள் என்ற பெயரில் கைது செய்யப்பட்டாள்.

வாத்தியாரின் நினைவோட்டத்தை அறுத்தது ஒரு பெண்ணின் குரல்.

" இண்டைக்கு நைற் வரமாட்டன் சேர் "

திடுக்குற்று குரல் வந்த திசையை நோக்கினுர் வாத்தியார்.

ஒரு பெண் ...... இந்த மண்ணிற்குச் சொந்தமானவள் வெளியே வந்து கொண்டிருந்தாள்.
" வை டார்லிங்? " என்று மேஜர் அவள் கன்னத்தைக் கிள்ளியபடி கேட்டான்.

" குடே மை சிஸ்டரின்ட டோட்டருக்கு பேர்த்டே நான் நிற்க வேண்டும் என்ருள் அந்தப் பெண்.
" பாய் பாய் " விடை பெற்ருள்.

எமது தமிழன் மானமும் கலாச்சாரமும் அங்கு விடை பெற்றுக் கொண்டிருந்தது.
வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டார் இராசையா வாத்தியார்

" யெஸ், வட் டுயூ வோண்ட் " என்றவாறு அவரருகில் வந்தான் மேஜர். சுசீலாவைப் பார்ப்பதற்கான அனுமதிப் பத்திரத்தை அவரிடம் காட்டினுர். மேஜர் இன்னுமொரு சிப்பாயிடம் எதோ சொல்ல ...... அவன் அவரை அழைத்துக்கொண்டு போய் ஒரு அறைக்குள் அமரவைத்து விட்டுச் சென்ருன். சிறிது நேரத்தில் சுசீலாவை அழைத்து வந்தார்கள்.

இருவரையும் அருகருகே விட்டுவிட்டு சிறிது தூரத்தில் துப்பாக்கியுடன் காவலிருந்தான் ஒரு சீக்கியச் சிப்பாய். அவன் வாயில் பீடியொன்று புகைந்து கொண்டிருந்தது.

சிறிது நேரம் இருவரும் வேறெங்கோ பார்த்தபடி பேசாமலிருந்தார்கள். இருவரின் மனத்துள்ளும் பாசத்தின் பிரிவின் துயரத்தின் மோதல்கள்.

"அப்பா" துயரத்தில் அடைத்த குரல்

வாத்தியார் மெதுவாகத் தன் மகளின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். அவர் கண்களின் வெளியே குதிக்கத் தயாராகக் கண்ணீர் நிறைந்திருந்தது.

"வீட்டிலை அம்மா, சீலன் சுகமே" சுசீலா கேட்டாள்.

"ம் ...... சுகமாத்தான் இருக்கினம்" சொன்னவர் சிறிது நேர மௌனத்தின் பின் மீண்டும் தொடர்ந்தார்.

"எண்டாலும் நீயில்லாமல் உன்ரை பிள்ளை ......" மேலே பேசமுடியாமல் குரல் தழுதழுத்தது.

சுசீலாவின் அடித் தொண்டையிலிருந்து விசும்பல் ஒன்று வெடித்து அழுகையாகப் பரிணமிக்க அது வாத்தியாரையும் தொற்றிக் கொண்டது. இருவரும் சிறிது நேரம் அழுதனர்.

"அப்பா, என்னைப் பற்றிக் கவலைப்படாதையுங்கோ. சீலனைக் கவலைப்படாமல் உறுதியாக வளருங்கோ. நான் எப்ப வெளியாலை வாறனோ தெரியேல்லை. இண்டைய நிலையை நினைச்சு நினைச்சு நான் கவலைப்படேல்லை. எங்கட இலட்சியப் பாதையிலை இதெல்லாம் சர்வசாதாரணம். என்னைப் போல எத்தனையோ சகோதரிகள் இங்கை இருக்கினம். எங்கட இலட்சியம் நிறைவேற நாங்கள் உறுதியா இருக்கிறம். அடுத்த தலைமுறைக்கு போராட்டம் கைமாறக் கூடாது எண்ட நிலையும் உறுதியும் குலையேல்லை. எண்டாலும் ...... சீலனை உறுதியாய் வளருங்கோ. ஏனெண்டால் சிலவேளை அவன் இன்னொரு திலீபனோ மில்லரோவோ மாறவேண்டி வரலாம். அதுக்கு இப்பவே அவனைத் தயாராக்குங்கோ. இதுதான் நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய உதவி" அவள் குரல் தழுதழுத்தாலும் இலட்சியத்தின் வேட்கை அதில் தொனித்தது.

வாத்தியார் அவளது கையை இறுகப் பிடித்து உறுதியளிக்கும் போது பீடியுடன் உறவாடிய அந்தச் சீக்கியன் நேரமாகி விட்டது என்று அழைத்துப்போக வாத்தியார் சிறிது நேரம் அவள் போவதையே பார்த்து விட்டு திரும்பி வெளியே வந்தார்.

மேஜருடன் குலாவிய அந்தப் பெண்......

கொண்ட இலட்சியத்தில் தளராத சுசீலா ......

ஓ ...... இன்னும் தமிழன் தன்மானமும் கலாச்சாரமும் பண்பாடும் விடை பெறவில்லை. சிறைக்குள்ளும் வேட்கையோடு வளர்ந்து கொண்டுதானிருக்கிறது.

வெளியே வாத்தியார் வந்தபோது வீதியின் இருமருங்கிலும் இராணுவச் சிப்பாய்கள் தொலைத்த ஏதோ பொருளைத் தேடுவதுபோல் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்

அவர்களைத் தாண்டியதும் வாத்தியார் ஒருமுறை நின்று திரும்பிப் பார்த்தார்.

" ஓ ...... அந்நியர்களே உங்கள் காலடிகள் இந்த மண்ணை விட்டு ஓடும் நாள் வெகு தூரத்திலில்லை. அதனால் இப்போது நடந்து போங்கள் " மனதுள் சொலியபடி தன் வீடு நோக்கி நடந்தார் உறுதியோடு.

இப்போது மழைமேகம் வானில் திரண்டு கொண்டிருப்பதால் வெயிலின்றி மந்தாரமாய் இருக்கின்றது. விரைவில் அவை கலைந்து மீண்டும் சூரியஒளி பூமியை ஆக்கிரமிக்கத்தான் போகிறது.

# திலீபனின் தாகம்

தமிழீழத் தாகத்தால் தண்ணீரும் குடியாமல்
ஊன் இன்றி உடலும் சோர்ந்து
பட்டினி கிடந்து பத்தியம் காத்து
எம்மை பைத்தியம் ஆக்கி விட்டு
பறந்து விட்டாயே அண்ணா
பரமனடி சேர்ந்து விட்டாய்.

அண்ணனே நீ சென்று ஓராண்டு சென்றாலும்
அன்று நீ சொன்ன அரசியல் விளக்கங்கள்
எம் காதுகளில் கேட்குதையா
" மக்கள் போராட்டம் தொடரட்டும்
புரட்சி வெடிக்கட்டும் புதுயுகம் மலரட்டும்
மக்களே விழித்தெழுங்கள் தமிழீழம் காண்போம் " என்றாய்.

உன்னினத்தின் இடர் கண்டு இளவயதில் போர்சென்றாய்
ஓலமிடும் உன்னினத்தின் ஓயாத் துயரத்தில்
சொல்லில் அடங்காதாம் நீ பட்ட துயரங்கள்
புத்தனையும் காந்தியையும் சிந்திக்க வைத்தவனே
வித்தகனே உன்வீரம் வீணாகிப் போகாது விடி விளக்காய்
விண்ணில் நீயிருந்து உன் தோழருடன் காண்பாய் தமிழீழம்.

ஈராறு மாதங்கள் சென்றதண்ணா நீ சென்று
சத்தியமாய் சொல்கின்றோம் உன்னெண்ணம்
நிச்சயமாய் நிறைவேறும் சத்தியத்தின் புத்திரனே
உன்னை சாகடித்தவர்கள் சாக்கடைகள் பித்தர்கள்
நீயோ காந்தியையும் வென்று விட்ட தமிழ்த்தாயின்
தவப்புதல்வன் தாகம் தீருமண்ணா உன் தமிழ்த் தாகம்.

ராஜீவ்காந்தி நீயொரு மைனஸ் காந்தி
பாரதத் தாயின் துகிலை உரிந்தாய் - எம்
பார்த்தீபனின் உயிரைக் குடித்தாய்
அண்ணல் காந்தியை அடித்து உதைத்தாய்
சாத்வீகத்தை சாகடித்தாய் பச்சைக் குருத்தைப்
பறித்து விட்டாயே உனக்குத்தான் நோபல் பரிசு.

நஞ்சு தின்று செத்தாலும் நாவரண்டு மாண்டாலும்
ஈழத்து வேங்கைகளோ மண்டியிட மாட்டாது
சாத்வீக போராட்டம் தெரியுமென்று எங்களுக்கு
காட்டி விட்டுப் போனாரே திலீபண்ணா
காவியமும் படைத்து விட்டார் கதையெழுத வைத்து விட்டார்
மருத்துவராய் படிப்பவர்க்கு தன்னுடலை அளிக்கச் சொன்னார்

கற்பூரம் கண்களைப் பொத்திக் கொண்டது
மெழுகுவர்த்தியோ மௌனமானது
சந்தணக்கட்டை சரிந்து வீழ்ந்தது
சாம்பிராணியும் உன் சரித்திரம் சொல்லுது
இமயம் உன்னை நிமிர்ந்து பார்க்குது
பாரதம் உன்னிடம் பாடம் படிக்குது.

நல்லை மண் உன்னை மண்டியிட்டு வணங்குதையா
வல்லை வெளி உனை நினைத்து வாய் விட்டு கதறுதையா
உன் ஊராம் ஊரெழுவும் உயிர் விடப் பார்க்குதையா
கண்கள் எல்லாம் நீர் நிறைந்து குளமாகி நிற்குதையா
கட்டாயம் உன் தமிழ்த் தாகம் தீருமையா
முற்றாக நாம் தமிழீழம் காண்போமையா.

*எமது மண்ணின் விடுதலைக்காக யார் போராடுகின்றார்களோ அவர்களே இந்த மண்ணின் மைந்தர்கள்.*

- பிரதித் தலைவர் மாத்தையா

# திலீபனின் முப்பெருந் தியாகங்கள்

திலீபன் மறைந்து ஒரு வருடம் ஓடி விட்டது. இவர் நினைவு அன்று போல் என்றும் எம் நெஞ்சில் ஆழப் பதிந்திருக்கும்.

பார்த்தீபன் என்ற இயற் பெயருடையவர் திலீபன் தந்தையாரின் செல்வப் புதல்வன். தாயன்பையறியாதே வளர்ந்து வந்தவர். அவர் தந்தை இராசையா அவர்களே இவரை வளர்த்தெடுத்தார்.

இவர் தகுந்த பிராயம் எய்தி கல்வி கற்பதற்காக இந்துக் கல்லூரியில் சேர்ந்தார். இக் கல்லூரியின் இறுதிப் பயனுக உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் தேறி மருத்துவக் கல்லூரிக்கு நுழைவும் சித்திக்கப் பெற்ருர். அதை தான் வாழ்க்கையில் வேறு விதமாக ஈடுபடும் உயர்நோக்குடன் தியாகம் (1) செய்தார்

இவ்வாறு அரசியலில் ஈடுபட்டுச் சேவை செய்து வரும் நாட்களில் உயர் லக்ஷ்யம் ஒன்று வந்து குறுக்கிட்டது. அதை அடைய உறுதி பூண்டார். பெரும் தியாக உணர்சியால் உந்தப் பட்டார். உண்ணு விரதத்தை நீரும் அருந்தாத வகை இறுதி மூச்சு இருக்கும் வரை மேற்கொண்டார்.

இதற்கு கற்பனை செய்ய முடியாத மன உறுதி வேண்டும். இது சாத்வீகமான சாதனை. ஒருவரையும் துன்புறுத்தாது ஒருவருக்கும் தீங்கு விளைவிக்காதவாறு அமைதியாக நிகழ்ந்த சாதனை. தன்னுடலைத் தேய்த்து மாய்க்கும் அரிய சாதனை. அவர் இச்சாதனையில் தன் உயிரைப் புல்லென மதித்தார். வெற்றியும் பெற்ருர்.

இவர் தியாகத்தின் உயர் சின்னம். தன்னுயிரையே தியாகம் (2) செய்த பண்பின் சிறப்பினைப் போற்ற வார்த்தைகளே இல்லை.

அன்பிலார் எல்லாம் தமக்குரியார் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

என்ற பொன் மொழி என்பை மட்டும் தான் பிறர்க் குரியதாகச் செய்யும். தன் என்பை மட்டுமன்றிச் சரீரம் முழுவதையுமே மக்களுக்கு அர்ப்பணித்த தியாகி. அத்துடன் நின்று விடவில்லை. அன்புட்பட சரீரம் முழுவதுமே முற்றும் நல்ல பயனை மாணவர்க்குத் தரவேண்டும் என்ற எண்ணத் துடன் இறந்தபின், தன் சரீரம் முழுவதும் என்புட்பட, மருத்துவக் கல்லூரிக்கு வழங்கியிருக்குந் **தியாகம்** (3) பெருந் தியாகமே.

23 வயதை எட்டிப் பிடிக்கும் இவ்விளைஞனின் இம் **மூவகைத் தியாகங்கள்** ஈடு இணையற்றவை. எடுத்துக் காட்டாக விளங்கிக் கொண்டிருக்கும் மாபெரும் தியாகங்கள்.



*எமது மண்ணின் விடுதலையை நேசிக்காத எவரும் இம் மண்ணை ஆள அருகதையற்றவர்கள்.*

- பிரதித் தலைவர் மாத்தையா.

# தியாக சீலனே!...

ஓ ...... மரணித்த வீரனே
எம் இனிய சகோதரனே
வீரத் தாய் பெற்றெடுத்த
விறல் மிகு வேங்கையே
அரசியல் அறிவிலே
நிகரில்லா அண்ணன் திலீபனே
களங்கள் பல கண்டு - வீரத்
தழும்புகள் பல சுமந்து
உன் வீர உடலின்று
நாற்பது இலட்சம் தமிழ் மக்களின்
இதய நாதத்தை தமிழீழத் தாயகம்
என்ற தாரக மந்திரத்தை
உன் உதடுளில்
உச்சரித்தபடியே மரணித்தாய்
தியாக சீலனே ..........
நீ உருகிப்போன
மெழுகுவர்த்தி
அணைந்த தியாக தீபம்
அண்ணன் திலீபன் நீ,
எமது மக்கள் மனதில்
சுடர் விட்டெரியும் அகல் விளக்கு
ஏறுக்கு மாறாக
எண்ணங்கள் சிதைந்து
நூறுக்கு நூறாக
தோல்வியை பெறும் போது
நிருகிக் கனலாய்
நெஞ்சத்தின் துன்பச் சுமை
ஆறுகப் பெருகுநடா - அது
கண்ணீரால் அடங்குமா
நாளுக்கு நாள் எங்கள்
சகோதரரை இழந்தோம்
அன்று களத்திலே போராடி
வீரமரணம் தானே என இறுமாந்தோம்
இன்று அகிம்சை வழியிலே

அணு, அணுவாய் நீ இறந்தாய்
எம்மால் அடக்க முடியாமல்
அழுகை தான் வருகிறது
எது எப்படி நேரினும்
உங்கள் இழப்பு
எங்களை உரம் பெறச் செய்கிறது
அடிமை விலங்கொடிக்க
அதி தீவிரமாய்த் தூண்டுகிறது
தமிழீழம் மட்டும் தான்
எங்கள் தீர்வு என்ற உறுதியால்
தினம், தினம் – நீங்கள்
இறந்து விட்ட போதும்
சோகத்தில் சுகம் காண
நாளும் பழகி விட்டோம்
ஏன் தெரியுமா?
நாம் காத்திருக்கும்
விடியல்
இன்னும் தூரத்திலில்லை
என்ற நம்பிக்கை
எம் நெஞ்சத்தை நிறைப்பதால்
எம்மைப் பிரிந்த எம் அன்பான சகோதரனே!
கலங்காதிரு நீ
உன்னை நாம்
கணப்பொழுதும் மறவாமல்
உன் தாகம் தீர்க்க
உன்னுல் கட்டி
வளர்க்கப்பட்ட நாம்
உன் இலட்சியம் தனைக்க
உனது பாதையில் வருவோம்
இறுதித் தீர்வை
உறுதியாய் தேடுவோம்
உன் மேல் ஆணையாக
இது உண்மையிலும் உண்மை
வாழ்க தமிழீழம்
வளர்க திலீபனின் இலட்சியம்.

# இலங்கை - இந்திய ஒப்பந்தமும் தமிழீழ மக்களின் கல்வி பாதிப்பும்

இலங்கை 1948-ம் ஆண்டு சுதந்திரமடைவதற்கு முன்னர் மத நிறுவனங்களின் அனுசரணையுடன் கல்வி வளர்க்கப்பட்டு வந்தன. இந்நிலையில் ஓரளவு கல்வி இனச்சார்பற்ற முறையில் வளர்க்கப்பட்டு வந்தன. ஆனால் சுதந்திரமடைந்த பின்னர் ஸ்ரீலங்கா அரசு கல்வி வளர்ச்சிக்கு கோட்பாடு ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டன. ஆனாலும் ஜனநாயகத் தேர்தல்களின் மூலம் ஆட்சியைப் பிடிப்பதற்காக ஐ. தே. கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகள் இன ரீதியான துவேசங்களை சிங்கள மக்கள் மத்தியில் ஊட்டி வந்தன. தேர்தலில் வெற்றி கொள்வதற்கு இந்தச் சிங்களக் கட்சிகள் காலத்திற்குக் காலம் தேசிய தமிழ் இனத்தின் உரிமைகளைப் படிப்படியாக பறிப்பதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கைத் தேடுவது என்பதை ஆரம்ப ஆயுதமாகக் கொண்டன. இதனால் போட்டா போட்டியிட்டு தமிழ் மக்களின் திறமை, பாதுகாப்பு, தாயகம், அபிவிருத்தி, கல்வி வளர்ச்சி பறிக்கப்பட்டன. பின்னர் சிங்கள மக்களுக்கு தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பங்களில் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற சிங்களக் கட்சிகள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமே காரணம் எனச் சுட்டிக் காட்டிய பின்னர் தமிழ் மக்கள் யாவரும் பயங்கரவாதிகள் எனக் கணித்து தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை திரித்துக் கூறி சிங்களத் தமிழ் மக்களை எதிரிகளாக்கினர். அரச சார்பான தொடர்புச் சாதனங்களும் திட்டமிட்டு தமிழ் மக்களுக்கு எதிரே உண்மைக்கு மாறாகப் பிரசாரம் செய்தது. தமிழ் மக்களின் சகல உரிமைகளும் படிப்படியாகப் பறிபோக ஆரம்பிக்கவே தமிழ் மக்கள் சார்பாக அரசியல்வாதிகள் குரல் கொடுத்தனர். பின்னர் தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு மாறாக செயல்பட ஆரம்பித்தனர்.

சிங்கள அரசு 1970-ல் கல்வியில் தரப்படுத்தலைக் கொண்டுவந்த இன அடிப்படையான இத் தரப்படுத்தலினால் தமிழ் இளைஞர்களின் திறமைக்கான கதவுகளும் அடைக்கப்பட்டது. பல்கலைக்கழக உயர்கல்வியில் புறக்கணிப்பினால் விரக்தியுற்ற தமிழ் இளைஞர்கள் தாம் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுவதனை உணர்ந்து சிங்கள அரசு தமக்கு எதிராகச் செயற்படுவதனை உணர்ந்து சிங்கள அரசுக்கு எதிராக சமூகரீதியான போராட்டங்களை முன்னெடுத்தனர். இந்நிலையிலேயே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் கூர்மையடைந்தது.

சிங்கள அரசு திட்டமிட்டே தமிழருக்கும், சிங்களவருக்கும் இடையில் இனக்கலவரத்தை 1967-ல், 1977-ல், 1983-ல் பாரிய அளவில் ஏற்படுத்தித் தமிழ் மக்களின் உடமைக்கு, உயிருக்கு பாரிய நட்டத்தினையும் இழப்புக்களையும் ஏற்படுத்தியது. 1977-ல் ஏற்பட்ட இனக்கலவரத்துடன் ஆயுதரீதியான போராட்டங்கள் முன்னெடுத்ததாலும் 1983-ல் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் தமிழ் மக்கள் அனைவரும் பங்காளியாக்கப்பட்டதுடன் சர்வதேச ரீதியாலும் தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவு கிடைத்தது. தமிழ் போராளிகளின் தமிழீழப் போராட்டம் கூர்மையடைந்து செல்லும் போது 1983-ல் இருந்து தமிழ் இன அழிப்பில் பல்வேறு வழியில் ஈடுபட்டது.

1. தமிழ் மக்கள் யாவரும் பயங்கரவாதி எனப் பெயர் சூட்டப்பட்டு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது இதனால் தமிழ் மக்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டனர்.
2. அரசியல் உரிமை மறுக்கப்பட்டது.
3. தமிழ் மக்களின் தாயகத்தில் திட்டமிட்டுச் சிங்களக் குடியேற்றம் மேற் கொள்ளப்பட்டது.
4. தமிழ் மக்களுக்கு வேலைவாய்ப்பில் புறக்கணிக்கப்பட்டதுடன் திட்டமிட்டே பதவி குறைக்கப்பட்டனர்.
5. தமிழ் மக்களின் இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு வழிசெய்து கெகடுத்தது. இதனாலும் தமிழீழ மக்களின் போராட்ட மனித சக்தி குறைக்கப்பட்டது.
6. நூல் நிலையம் திட்டமிட்டு எரிக்கப்பட்டது.
7. பாடசாலைகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டது. இராணுவ முகாமாக்கப்பட்டது.

இவ்வாறு தமிழ் மக்களின் மீது சிங்கள அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒடுக்கு முறைக்கு எதிராக ஆயுதப் போராட்டம் தான் சரியான அணுகுமுறை என்பதனை தமிழ் மக்கள் யாவரும் அங்கீகரித்தனர். பங்காளிகளாக படிப்படியாக மாற்றப்பட்ட பின்னர் தமிழ் மக்களுக்கு என தனியாக அரசு உருவாக்கப்பட வேண்டும். மக்களின் பாதுகாப்பு உறுதிப் படுத்த வேண்டும். அபிவிருத்தி ஏற்படுத்த வேண்டும். என்ற நோக்கோடு பல குழுக்கள் உருவாக்கப்பட்டாலும் இதில் ஒரு குழுவே (த. ஈ. வி. பு.) முன்னின்று அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தி போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர். இந் நிலையில் வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் தமது தாயகத்தில் தமக்கென ஒரு அரசு அமைக்க முடியும், பாதுகாப்புப் பெற முடியும், அபிவிருத்தி ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டு இருக்கும் போது 1987-ம் ஆண்டு யூலை 29-ல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது.

இந்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் தமிழ் மக்களின் சகல உரிமைகளும் வழமையை விட பறி போனது மட்டுமன்றி பாதுகாப்பும் இல்லாத சூழ்நிலையில் வாழ்வதனையே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு இலங்கை - இந்திய ஒப்பந்தம் அதிக அளவில் தமிழ் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது. இப்பிரிவில் கல்வியில் ஏற்பட்ட பாதிப்பை எடுத்துக் காட்டுவதே இதன் பிரதான நோக்கமாகும். தமிழ் மக்களின் கல்வி கீழ்வருமாறு பல வழிகளால் பாதிக்கப்பட்டிருப்பதனை அவதானிக்கலாம்.

1. தமிழ் பிரதேசங்களில் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை (டிசம்பரில்) குழப்பப்பட்டது. பரீட்சை நடாத்த முடியாத அளவுக்கு ஊரடங்கு சட்டம் அறிவிக்கப்பட்டது. ஆனால் ஸ்ரீலங்கா அரசு குறிப்பிட்டபடி பரீட்சை நடக்கும் என அறிவித்து நடத்தியது.

2. பல்கலைக் கழகம் சீர்குலைக்கப்பட்டது. கட்டிடங்கள், கல்விக்கான உபகரணங்கள் யாவும் தகர்த்து எறியப்பட்டன. பல்கலைக் கழகம் கோட்பாட்டு ரீதியான கல்வியை மட்டுமே போதிக்க வேண்டி இருக்கிறது. காரணம் செய்முறை ரீதியான கல்வியை அளிப்பதற்கு அருமையாக இருந்த உபகரணங்களும் நாசமாக்கப்பட்டது.

3. பாடசாலைகள் இராணுவ முகாமாக விளங்கின. பின்னர் பாடசாலையில் இருந்து விலகுவதாகக் கூறி அருகாமையில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. பாடசாலைக்கு அருகாமையில் இராணுவ முகாம் இருப்பதனுல் ஆசிரியர்கள் தமது கடமையை ஒழுங்காகச் செய்ய முடியவில்லை. மாணவர்கள் வரவு குறைவாக இருக்கின்றது. வந்த மாணவர்கள் கூட படிப்பதற்கு ஏற்ற பாதுகாப்பான சூழ்நிலை இல்லை. மாணவ மாணவிகள் ஆசிரியைகள் என்னேரமும் தாக்கப்படலாம் என்ற அச்சத்தினுல் பயந்து பயந்து இருக்க வேண்டி இருக்கின்றது. பேரளவில் பாடசாலைகள் இயங்குகின்றனவே தவிர உண்மையான கற்றலும் கற்பித்தலும் செய்ய முடியாத அளவுக்கு இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது.

4. யாழ் பல்கலைக் கழகத்தின் மருத்துவபீடம் திறமையாகச் செயல்பட முடியாத அளவுக்கு போதிய விரிவுரையாளர்கள் இல்லை. விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், ஆசிரியர்கள் தாக்கப்படுகிருர்கள். பாதுகாப்பு இன்மையால் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டு இருக்கிருர்கள். இவர்கள் ஆயுதங்களால் காட்டு மிராண்டித்தனமாக தாக்கப்படுகிருர்கள். தடுத்து வைக்கப்படுகிருர்கள். இவற்றுக்கு மேலாக மாணவ சமுதாயத்தின் முன்னுல் வைத்தே விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் மானபங்கப்படுத்தப்படுகிருர்கள். உளவியல் ரீதியாக ஏற்படும் பாதிப்பு அவர்கள் இந் நாட்டை விட்டே வெளியேறுகிருர்கள்.

5. பாடசாலை அதிபர்கள், பல்கலைக் கழக உபவேந்தர் போன்ற நிர்வாகிகள் பாடசாலைகளை சுதந்திரமாக நிர்வகிக்க முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. யாழ் பல்கலைக் கழக உபவேந்தரை வீதியில் அவமானப்படுத்தி வீதியால் இராணுவத்தினர் அழைத்துச் சென்ருர்கள் என்ருல் பாடசாலை அதிபர்கள் எவ்வாறு நிர்வகிக்க முடியும்?

6. மாணவர்கள் காரணமின்றி கைது செய்யப்படுகிருர்கள், தாக்கப்படுகிருர்கள், காணுமல் போகின்ருர்கள். இந்நிலையில் மாணவர்கள் கல்வி பாதிக்கப்படுகின்றது.

7. கிராமப்புற பாடசாலைகள் இயங்க முடியாத அளவுக்கு வசதியீனம் காணப்படுகிறது. ஸ்ரீலங்கா சிறிய அளவில் செய்து வந்த கல்வி அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை கூட கைவிட்டுள்ளது.

8. சுயதொழில் முயற்சிக்கான; தொழில் நுட்பக் கல்வியை தமிழ் மக்கள் பகுதியில் முழு அளவில் கைவிடப் பட்டுள்ளது.

9. இச் சூழ்நிலையில் மாணவர்கள் கல்வியின் பயனுக்கும் எது வித உத்தரவாதம் இல்லை. இந் நிலையில் மாணவ சமூகம் கல்வியைத் தொடர்வதில் அதிக நாட்டம் காட்ட முடி யாத சூழ்நிலை காணப்படுகிறது.

10. இராணுவம் தேடுதல் என்ற போர்வையில் சுற்றி வளைப்பு மாணவர்கள், மாணவிகள், ஆசிரியர்கள், பெண்கள், குழந் தைகள் என்ற பாரபட்சமின்றி வெயிலிலும், மழையிலும் இருத்தி கொடுமைப்படுத்துகிறார்கள். இவ்வாறு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பகுதி பாதிக்கப்படுவதால் பாடசாலை கள் இயங்கவே முடியவில்லை. காரணம் ஒரு பாடசாலை க்கு ஒரு பகுதி மாணவர்கள் மட்டுமே வரக் கூடியதாக இருக்கின்றது.


இவ்வாறான பாதிப்புகளுக்கு எதிராக பல்கலைக் கழக ஆசிரியச் சங்கம், பல்கலைக் கழக மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள்' பாடசாலை மாணவர்கள் தாம் தாம் பாதிக்கப் படும் சந்தர்ப்பத்தில் மட்டும் நடவடிக்கை மேற் கொள்கிறார் கள். இந்த நடவடிக்கை கூட இராணுவ அதிகாரிகளிடம் மகஜர் சமர்ப்பிப்பதும், அவர்கள் அதற்கு உத்தரவாதம் அளிக்கிறார் கள். அந்த உத்தரவாதம் மட்டும் தான், பின்னர வழமையான பாதிப்புக்களையே செய்து கொண்டு இருக்கிறார்கள். இந்நிலை யில் உத்தரவாதங்கள் எமக்கு எந்த நன்மையையும் அளிக்கப் போவதில்லை. இந் நிலையில் பல்கலைக் கழகம், தொழில்நுட்பத் துறை, பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் என்ற பாகுபாடு நீங்கி இவை யாவும் ஒன்றிணைந்து தமது பாதிப் புக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும். அது மட்டுமன்றி நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டும்.

கல்வியிலும் அது தொடர்பானவர்களுக்கும் ஏற்படும் பிரச்சனைகளை தனிமைப்படுத்தி நோக்காமல் தமிழ் இனப் பிரச்சனையாக கருதி அதற்கான போராட்ட வடிவங்களை வகுக்க வேண்டும் அல்லது போராட்டங்களை பல வடிவங்களில் முன்னெடுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பங்காளியாக வேண்டும்.

இன்று தமிழ் மக்கள் யாவரும் தமக்கான ஒரு சுதந்திரமான இறைமை கொண்ட தனி அரசு நிறுவப்பட வேண்டும் என்ற உள் விருப்பம் உள்ளவர்களாகவே காணப்படுகிறார்கள். காரணம் அந்நிய நாட்டின் பாதுகாப்பும், உத்தரவாதங்களும் எமது இனத்துக்கு உதவாது என்ற முடிவுக்கு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட பாதிப்பினால் தமிழ் மக்கள் வந்துள்ளனர். ஆனால் அந்நிய நாட்டு பாதுகாப்பில் இருக்கும் அரசியல்வாதிகள் மட்டும் தங்கள் பதவிக்காகவும், நலனுக்காகவும், தமிழ் மக்களின் நலனுக்கு எதிராக தொடர்பு சாதனம் மூலம் துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

கல்வியில் மட்டுமல்ல பொருளாதார, கலை, கலாச்சார சீரழிவுடன் உயிர், உடமைகளும் அழிக்கப்பட்டன. இதனை தமிழ் மக்கள் நேரடியாக நடைமுறையில் அனுபவித்து வருகிறார்கள். இவ்வாறான பாதிப்பினால் தான் தமிழ் மக்களுக்கு தனி ஒரு அரசு வேண்டும் என்பதனை உணர்ந்து அதற்கு ஏற்ப போராட்ட வடிவத்தை முன்னெடுக்கும் த. ஈ. வி. புலிகளுக்கு ஆதரவு வழங்குவதுடன் பங்காளியாக மாறுவதற்கும் சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் எதிர்பார்த்து இருக்கிறார்கள்.

*மண்ணின் மீட்புக்காக நெஞ்சை நிமிர்த்தி ரவைகளை மார்பினில் ஏந்திய, ஏந்துகின்ற போராளிகளுக்கு தமிழ் மக்கள் என்றும் தலை வணங்குகின்றார்கள்.*


LIBRARY SECTION
1